(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீச ஹு ஐப்பசிமீ —OCTOBER 1913. | ஸஞ்சிகை 10. No. 10.

CHIEF CONTENTS.

முக்ய பொருளடக்கம்.

The Agricultural World.

விவஸாயப்பகுதி—

விவஸாயப் பண்ணைகள் ... 507

வெங்காயம் ... 509

—பு. து. ரத்னம்பிள்ளை.

பாஸ்பாரிக் ஆஸிட் உரங்கள் ... 511

விதை எடுத்தலும் விதை அடித்தலும் ... 512

கால் நடைகளை விருத்தி செய்தல் ... 514

கரும்புப் பயிருக்கு எரு ... 515

சில ஸெஸ் ... 515

The Co-operative World.

கோவாபரேஷன் பகுதி—

கோவாபரேஷனின் முன்னேற்றம் ... 517

உற்பத்தி ஸங்கங்கள் ... 519

ஒரு கோவாபரெடிவ் காங்க்ரெஸ் ... 519

சிறுதொழில்களில் கோவாபரேஷன் ... 520

The Commercial World.

வ்யாபாரப்பகுதி—

பஞ்சாப்பில் பாங்கிகளின் முறிவு ... 521

பழங்களைவெளியூர்களுக்கு அனுப்புவது ... 522

கத்தரிகளுக்கு க்ராக்கி ... 523

இந்தியாவில் வ்யாபார ஊக்கம் ... 524

The Educational World.

வித்யாவிஷயப் பகுதி—

பொருளும் அதன் மூன்று நிலைமைகளும். 525

—எஸ். கணபதி ஸுப்ரமணியம், எம். ஏ.

உபாத்யாயர்களுக்கு ட்ரெய்னிங் ... 527

உபாத்யாயர்களும் பெற்றோர்களும் ... 527

எளிய மாணவர்களுக்கு உதவி ... 528

The Legal World.

வ்யவகாரப் பகுதி—

கார்டியன்ஷிப்புக்கு பாத்யதை ... 529

ஒரு எஜண்ட் எழுதிக்கொடுத்த ப்ராமிஸரி நோட் ... 532

அவிபக்த குடும்பம் ... 532

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி—

க்ராம ஸுகாதாரத்தில் சீர்திருத்தங்கள் ... 533

—எம். வைத்யநாதன்.

பாம்புக்கடிக்கு மருந்து ... 535

கிட்டத்துப் பார்வையும் நீர் ரோகமும் ... 536

The Boys' World.

பையன்கள் பகுதி—

ஜார்ஜ் அரசர் ... 537

வெள்ளத்திலகப்பட்டுக் கொண்ட பையன். 538

ஒருவித கணக்கின் ஜாலம் ... 539

ஸூர்ய சந்த்ரர்களுடைய தோற்றம் ... 540

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி—

க்ரக க்ருத்யங்கள் ... 541

—எம். வி. ஈச்வரய்யர்.

ஸ்தூல சரீரமுள்ள குழந்தைகள் ... 542

பெண் கல்வி ... 543

ஆசார சீர்திருத்த ப்ரஸங்கங்கள் ... 543

Story and Biography.

கதையும் ஜீவ்ய சரித்ரமும்—

ரூபாவதியின் சற்பு மகிமை ... 545

மிஸ்டர் ராக்பெல்லரும் ஆடுசெனும் ... 548

Departmental Notes.

பகுதிக்குறிப்புகள் ...549—553

Diary of the Month.

மாஸ வர்த்தமானம் ... 560

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.

நீங்கள் இந்த

வெற்றிலைப் பெட்டியை இனாமாக அடையலாம்.

லாலிம்லி துணிகளை உபயோகிப்பதால் எவ்வளவு மனஸ் த்ருப்தி ஏற்படுகிற தென்பது அவைகளை உபயோகித்தால் தான் தெரியவரும். அவைகள் ரொம்ப ச்லாக்யமானவைகள். அவைகள் நீங்கள் உபயோகிக்க வேண்டுமென்றே நாங்கள் இந்த மாஸம் லாலிம்லி துணி வாங்குகிறவர்களுக்கு ஒரு அழகிய வெற்றிலைப் பெட்டி இனாமாகக் கொடுத்து வருகிறோம்.

பெட்டியை அடையும் வழி.

லாலிம்லி துணிகளின் விலை ஜாப்தாவுக்கு ஒரு கார்டெழுதுங்கள். ஜாப்தாவைப் பார்த்து எந்தத் துணிவேண்டுமோ அதற்கு ஆர்டர் செய்து ஆர்டருடன் கீழேயுள்ள "கூபனை" யும் சேர்த்தனுப்புங்கள். மறு தபாலிலேயே நாங்கள் துணிகளுடன் வெற்றிலைப் பெட்டியை அனுப்புவோம். இந்தப்பெட்டி ரொம்ப நேர்த்தியானது. அலுமினியத்தால் செய்தது. லேசானது. மேல் மூடி ரொம்ப நேர்த்தியாய்ச் செய்யப்பட்டது. இடது கைப்புறத்தில் மேல் பக்கத்தில் ராஜா ராணியினுடைய வர்ணபடம் ஒன்று இருக்கிறது.

இதை யடைவதற்கு இரண்டே நிபந்தனைகள் தான் உண்டு. முதலாவது, 5 ரூபாய்க்குக் குறையாமல் ஸாமான்கள் வாங்க வேண்டும். இரண்டாவது, முதல் தடவை வாங்கும்போது மாத்ரந்தான் பெட்டிகள் கொடுக்கப்படும்.

கூபன்.

கான்பூர் வுலன் மில்ஸ் கம்பெனிக்கு, கான்பூர்.

TO THE CAWNPORE WOOLLEN MILLS Co., Ld., CAWNPORE.

இந்தக் கூபனுடன்............ரூபாய்க்கு லாலிம்லி ஸாமான்களுக்கு ஆர்டர் அனுப்பியிருக்கிறேன். "பிழைக்கும் வழிப்" பத்ரிகையில் கண்டிருக்கிறபடி வெற்றிலைப் பெட்டி இனாமாய் அனுப்பவும்.

பெயர் ______________________________

விலாஸம் ______________________________

கான்பூர் உல்லன் மீல்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.,

Cawnpore.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீசஹூ ஐப்பசிமீ, OCTOBER 1913. | ஸஞ்சிகை 10 No. 10.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs.	A.	P.		Foreign. Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0
Sample copy ...	0	2	0	... ...	0	3	0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5	0	0	per month.
½ do ...	2	8	0	do
¼ do ...	1	4	0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறூர்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்ய நாடு.		
வருஷம் 1 க்கு ...	4	0	0	...	6	0	0
தனிப்ரதி ...	0	6	0	...	0	8	0
மாதிரி காபி ...	0	2	0	...	0	3	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5	0	0
½ பக்கத்திற்கு	,,	,,	2	8	0
¼ பக்கத்திற்கு	,,	,,	1	4	0

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானுலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன,
மதராஸ்.

PRIZE ESSAY COMPETITION.
வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்.

1913-ம் வருஷம் ஜூலைமாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றி வ்யாஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் மட்டும் இந்த மாஸப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்களை ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ் நடையில் எழுதவேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஓரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஒவ்வொரு வ்யாஸமும், நமது பத்ரிகையில் $1\frac{1}{2}$-பக்கம் அதாவது 2400 எழுத்துகளுக்கு மேல் போகக் கூடாது. ஒப்புக்கொள்ளப்பட்ட வ்யாஸங்களில் முதல்தரமானதை எழுதியவருக்கு மூன்று ரூபாய் பரிசு கொடுக்கப்படும்.

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வ்யாஸங்களில் எவைகளையாவது ப்ரசுரிக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கும் நமது பத்ரிகையில் வெளியாகும் மற்ற வ்யாஸங்களைப்போல் வழக்கப்படி பக்கம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஸம்பாவனை செய்யப்படும். வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

டிஸம்பர் மாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம் :—

எழுதப் படிக்கத் தெரிந்த பிள்ளைகள் எழுதப் படிக்கத் தெரியாத தங்கள் பெற்றோர்களுக்கு எந்த விதத்தில் லாபம் உண்டாகும்படி உதவி செய்யலாம்.

வ்யாஸங்களை டிஸம்பர்மீ 31உக்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப் பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா.

பத்ராதிபர்.

THE SEPTEMBER PRIZE ESSAY COMPETITION.
ஸெப்டம்பர் மாஸத்து வ்யாஸப்போட்டி விஷயம்.

சென்ற ஆடி மாஸத்து ஸஞ்சிகையில் ஸெப்டம்பர் மாஸத்துப் போட்டிக்காக "க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக்குறைவுகளும் அவைகளை நிவர்த்திக்க வழிகளும்" என்ற விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். அந்த விஷயத்தைப்பற்றி வந்த வ்யாஸங்களில் ஒன்றேனும் த்ருப்திகரமாயில்லை யென்பதைப்பற்றி வருத்தப்படுகிறோம். ஆயினும் மிஸ்டர் எம். வைத்யநாதன் எழுதியனுப்பிய வ்யாஸம் ஸுமாராயும் மற்ற வ்யாஸங்களைவிட நன்றாயும் இருப்பதால் அதை இந்த ஸஞ்சிகையில் "ஸுகாதாரப் பகுதியில்" ப்ரசுரித்திருக்கிறோம்.

மிஸ்டர் பி. வி. வாமனமூர்த்திராவ் தாம் எழுதியனுப்பியிருக்கும் வ்யாஸத்தில், 1888-ம் வருஷத்துக்கு முன்னால் க்ராமங்களிலுள்ள குப்பை செத்தைகளை அப்புறப்படுத்தி க்ராமங்களை சுத்தமாக வைத்திருப்பதற்காக தோட்டிகள் என்னும் விப்பந்திகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்றும், அந்த ஏற்பாட்டைப் புதுப்பித்து க்ராமங்களிலுள்ள குப்பை செத்தைகளை அப்புறப்படுத்தி க்ராமங்களை சுத்தமாய் வைத்திருக்க கவர்ன்மெண்டார் தோட்டிகள் நியமிக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்.

ப்ரசுரிக்காத வ்யாஸங்களைத் திரும்ப பெறவேண்டுவோர் அரையணா ஸ்டாம்ப் அனுப்பினால் வ்யாஸங்கள் அனுப்பப்படும்.

Agricultural World.

விவஸாயப்பகுதி.

AGRICULTURAL FARMS.

விவஸாயப் பண்ணைகள்.

இந்தியாவின் மற்ற பாகங்களைப் போலவே நமது ராஜதானியில் உள்ள ஜனங்களில் பெரும்பாலார் விவஸாயிகளாயும் நிலவரும்படியைக் கொண்டு ஜீவிப்பவர்களாயும் இருக்கிறார்கள். இவர்களுடைய பொருளாதார நிலைமை த்ருப்திகரமாயில்லை யென்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். இவர்களுடைய நிலைமையை வ்ருத்தி செய்வதற்காக விவஸாய டிபார்ட்மெண்டார் பற்பல புதியவும் சீர்திருந்தியவுமான விவஸாய முறைகளை ஜனங்கள் அனுஷ்டிக்கும்படி தூண்டிவருகிறார்கள். அவர்கள் அனுஷ்டிக்கும்படி சொல்லுகிற முறைகளை அனுஷ்டித்தால் ஜனங்களுக்கு ரொம்ப லாபம் ஏற்படும் என்பதில் ஸந்தேகமில்லை, உதாரணமாக, நெல் ஸாகுபடியில் ஒற்றை நாற்று நடுவதை அனுஷ்டித்தால் நமது ராஜதானியில் விதை விஷயத்தில் மாத்ரம் ஒரு கோடி ரூபாய் மிச்சமாகு மென்று முன்விவஸாய டிரெக்டராயிருந்த மிஸ்டர் ஸ்வேர்ட் கணக்கிட்டிருக்கிறார். ஒற்றை நாற்று நடுவதால் மாஸூலானது 100-க்கு 10-முதல் 30 அல்லது 50 வரையில் அதிகமாகக் கிடைக்கிறதென்பது பல விவஸாயிகளுடைய அனுபோகமாயிருந்துவருகிறது. விவஸாயிகள் பசுந்தாள் பயிர்களை தங்கள் நிலத்திலேயே பயிர்செய்து மடக்கி உழுது எருவாக உபயோகிப்பதால் எருவிட ஆகும் செலவு குறைவதோடு மாஸூலும் அதிகமாகக்கிடைக்கிறது. மாட்டு சாணத்தைத் தக்கவிதமாகச் சேகரித்துவைத்து எருவாக உபயோகிப்பதால் இப்போது எரு விஷயமாக வீண் நஷ்டம் ஏற்படுவது குறைந்து போகும். இன்னம் மற்ற பல திருத்தங்களையும் விவஸாயிகள் உபயோகித்தால் அவர்கள் தக்கலாபமடைவார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. இந்த சீர்திருந்தியமுறைகளை நமது தேசத்து விவஸாயிகள் எல்லாரும் உபயோகித்துப் பயனடைகிறார்கள் என்று சொல்ல முடியாது. சில இடங்களில் ஜனங்கள் இவைகளைப்பற்றிய விஷயங்களை அறிந்திருக்கவேமாட்டார்கள் என்று சொல்லலாம். விவஸாய நிலைமை இப்படி யிருப்பதை ஒழுங்குபடுத்திசீருக்குக்கொண்டுவர விவஸாயடிபார்ட்மெண்டார் ரொம்பவும் ஊக்கம் பாராட்டி வருகிறார்கள். அவர்கள் செய்துவரும் முயற்சிகளில் விவஸாயப்பண்ணைகளைப்பற்றி ஆராய்வோம்.

விவஸாயப்பண்ணைகள் நமது தேசத்தில் பற்பல பாகங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நூதனவிஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யவும் தெரிந்தவிஷயங்களை செய்து காட்டவும் அவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன என்று நாம் எண்ணுகிறோம். அவைகளில் புதுமுறைகளை அனுஷ்டித்து லாபம் அடைவதைக் கண்டுதான் விவஸாயிகள் அவைகளை அனுஷ்டிக்க ப்ரியப்படுவார்கள். புதுமுறைகளால் லாபம் கிடைக்குமென்று நிச்சயமாய் அறிந்தபின்தான் விவஸாய அபிவ்ருத்தியில் ஊக்கமுள்ளவர்களும் பத்ரிகைகளும் மேற்படி முறைகளை விவஸாயிகள் அனுஷ்டிக்கும்படி தூண்டுவார்கள். புதுமுறைகளால் லாபம் கிடைக்கவில்லை என்றால், அவைகளை உபயோகிப்பதில் பயனில்லையே.! ஒரு விவஸாயப்பண்ணையில் லாபம் வராமல் நஷ்டம் வந்து கொண்டிருந்தால் அது த்ருப்திகரமான

நிலைமை யென்று சொல்லமுடியாது. அந்த நிலைமையை விவஸாயிகள் அறிந்தால் அவர்கள் அக்ருப்தியடையக்கூடும்.

விவஸாயப்பண்ணைகளின் நிலைமை யெப்படியிருக்கிறதென்று பார்ப்போம். சில விவஸாயப்பண்ணைகளின் வரவு செலவுக்கணக்குகளைக் கீழே ப்ரசுரிக்கிறோம்.

	வரவு	செலவு.
பேஹார் ஒரிஸ்ஸாமாகாணம்.		
(1) பங்கிப்பூர் பண்ணை (210 ஏகர் விஸ்தீரணம், 180 ஏகர் ஸாகுபடியாகிறது)	...3128- 8- 7	9104- 9- 8
(2) ஸாபூர் பண்ணை (150 ஏகர் ஸாகுபடி)	...6045-11- 0	14065- 9- 7
(3) கட்டாக் (120 ஏக்கர்)	...4935- 5- 8	6100-13- 9
(4) டம்ரான் (30 ஏக்கர்)	... 677- 7-10	2324- 8-11
வங்காள மாகாணம்.		
(5) பர்த்வான் பண்ணை (32 ஏகர்)	...2065- 5 -6	3395- 5- 6
(6) ராஜஷாஹி பண்ணை (63-ஏகர் 50 ஏகர் ஸாகுபடிக்கு ஏற்றது)	... 3395-12-9	10232-1- 0
(7) புரீர்ஹட்பண்ணை (52 ஏகர், 38 ஏகர் ஸாகுபடிக்கு ஏற்றது)	...2850-12- 9	7637-11- 4
மத்ய மாகாணங்களும் பேராரும்.		
(8) நாக்பூர் பண்ணை (244 ஏகர்)	...4381-14- 0	19796-12-4
(9) ரெய்பூர்	... 6572- 5- 3	10783- 0 9
(10) டெலிங்கரிவிதைப் பண்ணை	... 3987- 0- 7	4374-15-6
(11) பொவார்கரா பண்ணை	... 6022- 8- 5-	11599-14-1
சென்னை.		
(12) தளிப்பரம்பா	1702-3- 10	1529- 9- 3
சென்னை ராஜதானியிலுள்ள மற்ற பண்ணைகளுக்குக் கணக்குகள் ப்ரசுர மாகவில்லை ...		

மேலேகாட்டிய கணக்குகளால் தளிப்பரம்பா ஒழிந்த மற்றப்பண்ணைகளிலெல்லாம் நஷ்டமே ஏற்பட்டு வருகிறது என்று தெரிகிறது. தாளிப்பரம்பா விவஸாயப்பண்ணையில்தான் லாபம் கிடைத்ததாகக் காட்டியிருக்கிறது. ஆனால் செலவுபாபத்தில் மானேஜர் முதலானவர்களுடைய சம்பளம் சேரவில்லை. அதைச்சேர்த்துப் பார்த்தால் அந்தப்பண்ணையிலும் நஷ்டம் என்றே ஏற்படுகிறது. சென்னை ராஜதானியிலுள்ள மற்றப்பண்ணைகளின் கணக்குகள் ப்ரசுரிக்காததால் அவைகளின் நிலைமை எப்படியிருக்கிறதென்று திட்டமாய்த் தெரியாது. தளிப்பரம்பாப்பண்ணையின் 1911-12-ம் வருஷத்திய கணக்கில் "இந்த வருஷம் லாபம் வரும்படி பண்ணையை நடத்திவந்திருக்கிறார்கள்" என்று சொல்லியிருக்கிறதால் அதற்கு முந்தின வருஷம் லாபம் இல்லையென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இப்படி விவஸாயப்பண்ணைகளில் லாபம் வராமல் நஷ்டம் வருகிறதென்பதை விவஸாயிகள் அறிந்தால் விவஸாய டிபார்ட்மெண்டார் லாபம் கொடுக்கக்கூடியவைகள் என்று சொல்லும் புதுமுறைகளில் விவஸாயிகளுக்கு நம்பிக்கையில்லாமல் போகக்கூடும். மேலே காட்டிய பண்ணைகளில் பலவற்றில் ஆராய்ச்சி வேலைகள் நடப்பதனால் செலவு அதிகமாகிறதென்று சொல்லலாம். அது உண்மையே. ஆனால் பங்காளத்து விவஸாய டிபுடி டிரெக்டர் சொல்லுகிறபடி ஒரு பண்ணை நன்றாய் நடந்து வருகிறதென்றால் அந்தப்பண்ணையின் மாஸூல் வரும்படியைக்கொண்டே பண்ணையின் ஸாதாரணச் செலவை செய்து வரக்கூடுமென்று சொல்லலாம். யந்த்ரம், கட்டிடம், கால் நடை முதலியவைகளுக்குப் போடும் மூலதனம் மாத்ரம் அதிகப்படியாகச் செலவழியலாமே ஒழிய, பண்ணையில் கூலியாட்கள், உழவுச் செலவு, விதை, எரு முதலியவைகளுக்கு ஆகும்

ஸாதாரணச் செலவை மாஸூலின் விற்பனையைக்கொண்டே செய்துகொள்ளும்படியாக பண்ணை நடக்கவேண்டும். அப்படி ஸாதாரணச் செலவுக்குக்கூட பண்ணையின் வரும்படி போதாதென்றால் அது த்ருப்திகரமான நிலைமையல்ல. விவஸாயப்பண்ணைகளின் கணக்குகளை ப்ரசுரம் செய்யும்போது ஆராய்ச்சிக்காக இவ்வளவு செலவாயிற்றென்றும், ஸாதாரணச்செலவுக்கு இவ்வளவு ஆயிற்றென்றும், ஒவ்வொரு வருஷமும் நேராத யந்த்ரங்கள், கால்நடைகள், கட்டிடங்கள் முதலிய மூலதனமாகச் செலவழிக்கப்படுகிற செலவுக்கு இவ்வளவு ஆயிற்றென்றும் காட்டினால், புதுமுறைகளை அனுஷ்டிப்பதால் லாபம் உண்டா இல்லையா என்பதை அறிவது ஸுலபமாகும். லாபமில்லாவிட்டால் அந்த விஷயத்தைப்பற்றி சோதித்து லாபம் வரும்படி செய்யலாம். புதுமுறைகளைக் கையாடுவதால் லாபம் உண்டென்று காட்டினால்தான் ஜனங்களுக்கு அவைகளை உபயோகிப்பதில் ச்ரத்தை ஏற்படும்.

ஆராய்ச்சிப் பண்ணையில் நிரூபணங்களைச் செய்துகாட்டுவதைவிட தனிநிரூபணப் பண்ணைகள் ஸ்தாபித்துப் புதுமுறைகளின் உபயோகத்தை ஜனங்களுக்குக் காட்டினால் புதுமுறைகள் இப்போதிருப்பதைவிட ஸர்வ ஸாதாரணமாகும். மேலும் இப்போதுள்ள விவஸாயப்பண்ணைகளில் ஆராய்ச்சி வேலை சேர்ந்திருப்பதால் மொத்தக்கணக்கில் நஷ்டம் காட்டக்கூடுமாதலால் ஸாதாரண ஸாகுபடிக் கணக்கில் லாபம் காட்டியிருந்தாலும் ஆராய்ச்சி ஸாகுபடியின் கணக்குகளில் நஷ்டம் நேர்ந்திருப்பதைக் கண்டு ஜனங்கள் புதுமுறைகளில் நம்பிக்கைக் குறைவடைவார்கள். இதன் காரணமாகவே புதுமுறைகளை செய்து காட்ட நிரூபணப் பண்ணைகளை ஸ்தாபிக்கவேண்டியது ரொம்ப அவச்யம் என்று ஏற்படுகிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் நமது ராஜதானியில் பல பாகங்களிலும் நிரூபணப்பண்ணைகள் ஸ்தாபிப்பதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக்கூறுகிறோம்.

ONION.

BY P. D. RATNAM PILLAI.

வெங்காயம்.

இது நெடுநாளாக நமது நாட்டில் வழங்கும் பயிர்களில் ஒன்று. இது மருந்து ஸாமான்களுடனும் கறிகாய் வர்க்கங்களுடனும் நமது நாட்டு ஜனங்களால் வெகு காலமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

தகுதியானமண்:—சற்றுப்பருமனான வெண்மணல் உரித்தானது. சற்றுக்களிவாயாக வுள்ளதாக இருந்தாலும் பொருத்தமானதே. அதிகக்களிப்பாய் உள்ளது பயனில்லை. உவர் ஸம்மந்தங்கூடவே கூடாது.

பயிரிடும் இடம்:—இது தஞ்சாவூர்ஜில்லாவில் வெகு இடங்களில் பயிரிடப்படுகிறது. தஞ்சாவூர் தாலூகாவின் சுற்றுப்பக்கங்களின் க்ராமங்களிலும், கும்பகோணம் தாலூக்காவிலுள்ள முத்தியபுரம், வாளபுரம், திரும்பிரம்மியம், மாயவரம் தாலூகா முட்டுலூர், சீர்காழி தாலூகா திட்டுப்படுகை, வேட்டங்குடி, ஆணிக்காரன் சத்ரம் முதலிய இடங்களிலும் வெகுவாய்ப் பயிரிடப்படுகிறது. இவ்விடங்களில் பயிடும்வழக்கத்தை யனுஸரித்து இதன் கீழ் எழுதுகிறோம். இதன் ஸாகு படிக்காக ஒரு ஏகர் நிலம் எடுத்துக்கொள்ளுவோம்.

பூமி திருத்தல்:—இந்த நிலத்தை நன்றாக நாலு ஐந்து சால் உழுது புல்பூண்டு முதலியவைகளை நீக்கி பின் செவ்வையாகக் கொத்தி பூமியைத்திருத்தல் வேண்டும். நன்றாய்க் கொத்தின பிறகு சில நாள் பூமி ஆறும்படி விட்டு வைக்கவேண்டும். பிறகு குளத்து வண்டல், ஆற்றுவண்டல், ஆடுமாடுகளின் எரு, மீன் ஓடுகளின் குப்பைகள், தழைகள்

மடித்த எரு முதலியவைகளில் இயன்றதை ஒரு ஏக்கருக்கு ஸுமார் 30 வண்டிக்குக் குறையாமல் அடிக்க வேண்டும். எரு அடித்த பிறகு எருவை பூமிமுழுவதும் நிரவவேண்டும். நிரவின பிற்பாடு இருஸால் உழவேண்டும். பின்பு நான்கு அல்லது ஐந்துநாள் கழிந்த வுடன் முன்போல் ஓரடியாழம் வரையில்கொத் தவேண்டும். சிலர் நிலம் கரம்பாகக் கிடக்கும் போதே எரு அடிப்பார்கள். இந்த ஸமயத்தில் எரு அடித்தால் அது புற்பூண்டுகளில் சிக்கிக் கொண்டும், காற்றினுல் சிதறுண்டும் போக ஹேதுவுண்டு. புற்பூண்டுகளை நீக்கின பிறகு செய்தால் இந்த தொந்தரவுகளுக்கு இடங் கிடையாது. இதில் களையும் புற்பூண்டுகளைக் காயவைத்து நெருப்பிட்டுக்கொளுத்தி அதை யும் எருவாக உபயோகிக்கலாம். நன்ருய் கொத்தின பிறகு பூமியை மேடுபள்ள மில்லாமல் ஸமன்படுத்தி 5 அடி அகலம் வைத்து பாத்திகட்ட வேண்டும். இதற்கு சரவு என்று பெயர். பிறகு நாலடி அடி அகலம் வைத்து பாத்தி கட்டவேண்டும். இந்த பாத்திகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வாய்க்கால் செப்பனிடவேண்டும். ஒன்று விட்டு ஒன்றில் வாய்க்கால் தோண்டல் வேண்டும். மற்ருென் றுக்கு மஞ்சி யென்று பெயர். இதில் கொத்த வரை வெண்டை போடுகிறது வழக்கம்.

விதை போடல்:—இதற்குத் தயார்செய்யப் பட்டிருக்கிற விதைகளை எடுத்து 4 அங்குலத் திற்கு ஒன்ருக வரிசையாகப் போடல் வேண் டும். இவ்வாறு போட்ட பிற்பாடு உடனே தண்ணீர் ஊற்றல் வேண்டும். விதையின் கீழ் ஈரமிருக்கும்படி தண்ணீர் ஊற்ற வேண்டும். விதை வெங்காயம் எல்லாம் குரு த்து விட்டு முளைத்திருக்கும். இரண்டங்குலம் பூமியின்கீழ் விதைபோட வேண்டும். மூன்ரும் நாள் குருத்து வெளிக்கிளம்பிவிடும். ஸுமார் பத்துநாள் வரைக்கும் தினம் தண்ணீர் விட்டுக்கொண்டு வரவேண்டும். இரண்டு வாரங் கழித்தவுடன் புல் பூண்டு முதலியவைகளை நீக்கிக் களைகொத்த விடவேண்டும். களை கொத்தின பிறகு மண்ணின் ஈரத்திற்குத் தக்கபடி ஒன்று அல்லது இரண்டுநாள் காயப் போடல்வேண்டும்.

விதைபோடக்காலம்:—ஆடிமாஸமும், தை மாஸமும். சில இடங்களில் ஆடிப்பட்டமும் சில இடங்களில் தைப்பட்டமும் போடுகிருர்கள்.

ஒரு ஏக்கருக்கு விதையின் அளவு ஸுமார் இருபது தூக்குவரையில் செல்லும். நிலம் வளப்பமான பூமியாக இருந்தால் பத்துத் தூக்கு விதை போதுமானது.

தண்ணீர் பாய்ச்சல்:—களை கொத்தினபிறகு நான்கு நாளைக்கு ஒரு முறை வீதம் ஒரு மாஸ மும் பிறகு ஒருவாரத்திற்கு ஒரு முறையாக வும் தண்ணீர்ப்பாய்ச்சவேண்டும். இதன்நடுவில் மழைபெய்தால் குறைத்தும், வெயில் கடுமை யாக இருந்தால் கூட்டியும் தண்ணீர்பாய்ச்ச வேண்டும். அதாவது, பயிர்வாடாது தண் ணீர் இறைக்கவேண்டும். மாஸம் மாஸம் ஒரு களை எடுக்கவேண்டும். இரண்டாம் மாஸத் தில் சாணி எருவை நன்ருய் மடித்ததாக எடுத்துக்கொண்டு அதை நன்ருய்ப் பொடி செய்து ஒவ்வொரு பாத்திக்கும் பட்டணம் படி இரண்டுபடி வீதம் போட்டு நிரவி மண் ணும் அதுவும் நன்ருய்க் கலக்கும்படி செய்து பிறகு தண்ணீர் இறைக்கவேண்டும்.

மாஸுல் காலம்:—மார்கழிமாஸக் கடைசி அல்லது தைமீ முதலில் வெங்காய மாஸுல் எடுக்கலாம். மண் ஏற்ற மண்ணுகவும் நல்ல செய் நேர்த்தியுடனு மிருந்தால் ஒரு பயிருக்கு பட்டணம்படி அரைப்படி வெங்காயம் கிடைக் கும். இல்லாவிட்டாலும் கால்படிக்கு மோசம் இல்லை. குழி ஒன்றுக்குக் குறைந்தது இருப் பத்தைந்து பட்டணம் படி வெங்காயம் கிடை க்கும். தஞ்சாவூரில் குறைந்தபடி ஒன்றுக்கு 1 அணுமுதல் இரண்டணு வரையில் விற்கிறது.

ஸராஸரி படி ஒன்றுக்கு ரூ. 0-1-6 வைத்துக் கொண்டால் குழி 1-க்கு ரூ. 2-5-6 கிடைக்கிறது. ஏகருக்கு ரூ. 703-2-0 கிடைக்கும். இதில் பயிரிடுவதற்கு செலவு, காவல் கூலி, ஆள் மாகாணச் செலவு முதலியவைகளுக்கு ரூ. 200-க்கு மேல் செல்லாது. பாக்கி ரூ. 503-2-0 லாபமே.

பு. து. ரத்னம் பிள்ளை.

PHOSPHATIC FERTILISERS.

பாஸ்பாரிக் ஆஸிட் உரங்கள்.

நீடாமங்கலம் அ. ஸேதுராமய்யர் நமக்கு அனுப்பியுள்ள ஒரு வ்யாஸத்தில் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"தஞ்சாவூர் ஜில்லா நெல்வயல்களை ரஸாயன விதிப்படி 5-மைலுக்கு ஒருதரம் மண்ணைச் சோதித்துப்பார்த்ததில், நெல் பயிருக்கு வேண்டிய சாணஸத்து*, எலும்புஸத்து, சாம்பல் ஸத்து ஆகியஇம்மூன்றில் எலும்புஸத்து நெல் பயிரில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு இல்லாமல் ரொம்ப குறைச்சலா யிருப்பதாகத் தெரியவந்ததாம். தஞ்சை ஜில்லா முழுவதிலும் எங்கும் இப்படியே அநேகமாய் இருந்ததாகத் தெரியவருகிறதாம். ஆகையால் தஞ்சைஜில்லா நெல் ஸாகுபடிக்கு பிண்ணுக்கு உரங்கள், அல்லது தழை உரங்களோடு, எலும்புத்தூள் கலந்த உரங்களும், அல்லது தழை சாண உரங்களோடு எலும்புஸத்து உரங்களும் அவச்யம் என்று தோன்றுகிறது.

இந்த எலும்புஸத்து உரம்மலிவாய் கிடைக்க ஏதாவது வழியுண்டா என்று பார்ப்போம்.

தஞ்சாவூர் ஜில்லாவில் நெல்குத்த எண்ணெய் யந்த்ரங்கள் (Oil engines) ஸுமார் 100-க்கு மேலிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த யந்த்ர சக்தியைக்கொண்டு அங்கங்கு பறச்சேரி வெட்டியான் திடல் ஆகிய இவைகளில் கிடைக்கும் எலும்புகளை ஏற்றுமதித் தாரகர்களுக்கு விடாமல் அவர்கள் கொடுக்கும் விலையை நாமே கொடுத்துவாங்கி, சேகரித்து உடைத்துத் தூளாக்கி, சாம்பலோடாவது, குப்பையோடாவது, அல்லது தழைகளோடாவது கலந்து வயல்களுக்கு போடவேண்டியது. இந்த எலும்பு ஸத்தை ஏராளமாய் உண்டாக்க வேறு ஏதாவது வழியிருக்கிறதா என்று பார்ப்போம்.

திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் ஊட்டத்தூரில் ஒரு கற்பாறையிருக்கிறது. அந்தப் பாறையில், 9 துண்டு நிலம் ஸர்க்காருக்கும், 1 துண்டு நிலம் ஊட்டத்தூர் ஜமீன் தேவஸ்தானத்துக்கும் ஸொந்தமாம். மேற்கூறிய 9 துண்டு நிலங்களை கவர்ன்மெண்டார் ரிஸர்வ் செய்து வைத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனியாரும், ராணிப்பேட்டை பாரி அண்டு கம்பெனியாரும், இந்தப் பாறைகளில் எலும்புஸத்து இருக்கிறது என்று கண்டு கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இரண்டே இரண்டு இடத்தில்தான் எலும்பு ஸத்துப் பாறைகள் (Posphatic rocks) இருக்கின்றன. ஒன்று வட இந்தியாவிலும், மற்றொன்று திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஊட்டத்தூரிலும் இருக்கின்றன. மேலே சொன்ன இரண்டு கம்பெனியார்களும் திருச்சினாப்பள்ளி ஜில்லா பாறையிலிருந்து இந்த எலும்புஸத்து விஷயமாக ஏராளமாய் லாபம் அடைகிறார்கள் என்பதை ரூபிக்கிறேன்.

ஊட்டத்தூரில் கவர்ன்மெண்டார் 9 ப்ளாக் நிலத்தை அதில் ரிஸர்வ் செய்திருப்பதால் அவர்களுடைய பாகத்திலிருந்து பாறைத் துண்டுகள் எடுப்பதில்லையாம். ஊட்டத்தூர் ஜமீன் தேவஸ்தானம் ப்ளாக்கில் கூலிகள் கூழாங்கல்லைப் பொறுக்கி, சாக்கில்கட்டி திரு

---

* சாணஸத்து என்பது நைட்ரொஜன்; எலும்பு ஸத்து என்பது பாஸ்பாரிக் ஆஸிட்; சாம்பல் ஸத்து என்பது பொடாஷ். ப-ர்.

ச்சினுப்பள்ளி ஜங்ஷன் ஸ்டேஷனில் கொண்டு வந்து போட்டு விடுகிறார்களாம். ஒரு டன் நிறையுள்ள கூழாங்கல் மூட்டைகளுக்கு ஸுமார் 7 ரூபா கம்பெனியார்கள் விலை கொடுக்கிறார்களாம். இந்தக் கற்பாறைத் துண்டுகளை கோயம்புத்தூர் அல்லது ராணிப்பேட்டைக்குக் கொண்டுபோய், தூளாக்கி, கந்தக த்ராவகத்தில் (Sulphuric acid) கலந்து ஜலத்தில் கரையக்கூடிய எலும்பு ஸத்து உண்டாக்குகிறார்கள். இதற்குத்தான் இங்க்லீஷில் ஸுபர் பாஸ்பேட் (Superphosphate) என்று பெயர். எலும்புத்தூள் ஜலத்தில் கரையாது. இத்துடன் கந்தக த்ராவகத்தைக் கலந்தால் அது ஒரு உப்பாகமாறி ஜலத்தில் கரையக்கூடிய சக்தி அடைந்துவிடுகிறது. இதற்கு கரையக்கூடிய எலும்புஸத்து அல்லது ஸுபர்பாஸ்பேட் (Superphosphate) என்று சொல்லலாம். வெறும் எலும்பு கரையக்கூடாத எலும்புஸத்து (Phosphate). கரையக்கூடிய ஸ்திதியிலிருந்தால்தான் அதைப் பயிர் க்ரகிக்கும். எலும்பு மக்கி, ஜலத்தில் கரைய வெகு நாள்பிடிக்கும். கந்தகத்ராவகத்தால் எலும்பைப் பக்வப்படுத்தினுல், அது உடனே பயிருக்கு உணவாகிறது. இதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். மேற்கூறிய இரண்டு கம்பெனியார்களும் திருச்சினுப்பள்ளி ஜில்லா ஊட்டத்தூர் பாறைக்கல்களை டன் 1-க்கு ஸுமார் 7 ரூபாய் கொடுத்துவாங்கி, அதையே பக்வப்படுத்தி டன் 1-க்கு ஸுமார் 75 ரூபாய்முதல் ரூபாய் 100 வரையில் விற்கிறார்களாம். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள பெரிய மிராசுதார்கள் ஜமீன்தார்கள் முதலியவர்கள் ஒரு ஐக்யஸங்கம் ஏற்படுத்திக்கொண்டு, இந்த திருச்சினுப்பள்ளி ஜில்லா எலும்புஸத்துப்பாறைகளைவாங்கி, ஒரு உடைக்கும் கருவியால் (Disintegrator) இந்தப்பாறைகளைத் தூளாக்கி கந்தகத்ராவகத்தை ராணிப்பேட்டையிலிருந்தாவது அல்லது கல்சத்தாவிலிருந்தாவது வரவழைத்து, (இதன்விலை ரொம்ப ஸரஸம்) மேற்படி பாறைத் தூள்களோடு கலந்து, கரையக்கூடிய எலும்புஸத்து (Superphosphate) உண்டாக்கி, தங்கள் நெல்வயல்களுக்கு இப்போது அந்த ஸத்து குறைச்சலாயிருக்கிறபடியால் அதை உரமாக உபயோகப்படுத்தினுல் ஏராளமான லாபம் அடைவார்கள் என்பதில் ஸந்தேகமேயில்லை.

CASTRATION AND MULLING.

விதை எடுத்தலும் விதை அடித்தலும்.

ஆண்ம்ருகங்கள் பொலிய லாயக்கில்லாது போய் இனத்தை பெருக்காமலிருக்கும்பொருட்டு இந்தசிகித்ஸைகள் செய்யப்படுகின்றன. விதை எடுத்தல் என்றால் ம்ருகங்களின் பீஜங்களையே எடுத்துப்போடுவது. அதில் கைதேர்ந்தவர்களல்லாதவர்கள் அதைச்செய்ய எத்தனிக்கலாகாது.

காயடித்தல் அல்லது விதை அடித்தல் என்பது விதையையாவது இந்த்ரிய நாடியை (விதைக்கொடி) யாவது அல்லது இரண்டையுமாவது எடுத்துப்போடாமல் அழித்து ப்ராணிகளை பொலிய சக்தியில்லாமல் செய்தலாம். விதையடித்தல் (காயடித்தல்)என்னும் கொடிய செய்கை எல்லாருக்குமே தெரிந்திருக்குமாதலால் அது செய்யும் விதத்தைக்குறித்து விரித்துச்சொல்லவேண்டியதிராது. இந்த தேசத்தில் க்ராமாந்தரங்களில் செய்துவருவது எப்படி என்றால் விதை கூழாய்ப்போகும்வரை அதை அடித்து நசுக்கி இளக்கி விடுகிறார்கள் என்றே சொல்லலாம். இது செய்ய ஏறக்குறைய அரைமணி பிடிக்கும். அது ஆரம்பித்து முடிகிறவரையில் அந்த ப்ராணியானது பொறுக்கமுடியாத வேதனைப் பட்டுக்கொண்டேயிருக்கும். ம்ருகங்களை வசக்கி மனிதனுக்கு வேண்டிய வேலைகளை செய்விக்கவேண்டுமானல் இப்படியேதாவதொன்றைச்செய்துதான்)

தீரவேண்டு மென்பதை கவனிக்கவேண்டும். சென்ற சிலவருஷங்களுக்கு முன் சாஸ்த்ரப்படி விதை எடுக்கத் தெரிந்தவர்கள் ஏதோ சில பெரிய பட்டணங்களில் தவிர மற்றெங்கும் கிடையாது. அந்தக்காலத்தில் விதை அடிக்க கொஞ்சம் ந்யாயம் இருக்கத்தான் இருந்தது. ஜில்லா ஜில்லாவுக்கு மற்ற விஷயங்களில்பயிற்சி இருப்பதுபோல "விதை எடுப்பதிலும்" தேர்ச்சி உள்ள கால்நடை வைத்பர் ஒருவரையாவது ஸர்க்காரில் நியமித்திருக்கும் இக்காலத்தில் நாகரீகமடைந்த தேசத்திலிருப்பவர்கள் கால்நடைகளைக் "காயடிக்க" விட்டுக்கொண்டிருப்பது மிகவும் இழிவு; விதைபடிப்பதை விட்டு "விதை எடுத்தலினால்" உண்டாகும் முக்யமான நன்மைகள் கீழே சுருக்கமாய் குறிக்கப்பட்டிருக்கின்றன.

(1) விதையடிக்க அரைமணி செல்லும். விதை எடுக்கமட்டும் என்றால் கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு 5 நிமிஷத்துக்குமேல் பிடியாது.

(2) குதிரைகளுக்கு, குட்டியாயிருக்கும் போது விதை எடுப்பதனால் 14 நாளில் நன்றாய் வாசியாய்விடும். மற்ற மாடு ஆடானால் விதை எடுத்த உடனே மந்தையில் பற்றி விட்டு விடலாம். பின்பு அதைப்பற்றி கவனிக்க வேண்டியதேயில்லை. விதை அடித்த வேதனை தீர்ந்து வாசியாக அநேகவாரம் செல்லும். அநேக ஸமயங்களில் காயடித்த இடத்தில் கட்டி உண்டாவதும் உண்டு.

(3) பீஜங்களை அடியோடு எடுத்துவிடுவதால் பின் அந்த ப்ராணிகள் பொலிய சற்றும் லாயக்கில்லாமல் போகுமென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்த நோக்கத்தோடு காயடித்தபோதிலும் ப்ராணிகள் படும் துயரத்தைப் பார்த்து சற்று முந்தியே விட்டுவிடுவதால் நமது உத்தேசம் சில ஸமயங்களில் நிறைவேறுகிறதில்லை. அப்போது அது ஸரியானபடி பொலிய முடியாதுபோனாலும் (கள்ளக்காய் கிடப்பதால்) காமம் இருந்துகொண்டு பருவத்திலிருக்கும் பெட்டைகளை வீணில் அலைக்கழித்துக்கொண்டு அதுள்ளளவும் எல்லாருக்கும் பெருந்தொல்லையாயிருந்து வரும்.

(4) இந்த சிகித்ஸை சீக்ரத்தில் முடிந்து போகிறதினால் இந்த தேசத்தில் விதை எடுக்கப்போகும் ப்ராணிகளுக்கு மயக்கந்தர க்ளோரபாரம் என்னும் மருந்து கொடுக்கிறதில்லை. இருந்தாலும் உடையவர்கள் விரும்புகிற பக்ஷத்தில் கால்நடை வைத்பர் அந்தப்படி செய்வார். அப்போது அந்த ம்ருகங்களுக்கு சற்றும் வருத்தம் தோற்றாது போகும். இரண்டு வயஸாகிறவரையில் ம்ருகங்களுக்கு காயெடுக்கவாவது காயடிக்கவாவது கூடாதென்று ஒரு தப்பெண்ணம் இத்தேசத்திலிருந்துவருகிறது. அநேக ஸமயங்களில் 3 அல்லது 4 வயஸு வரை காயடிக்கிறதில்லை. இளமையில் காயடித்தால் வளர்ச்சி குன்றிப் போகுமென்று குடியானவர்கள் சொல்லுகிறார்கள். உண்மையில் எப்படி ஆகிறதென்றால் காயடியாத காளை கழுத்துப்புறமும் திமில் புறமும் கனத்து லக்ஷணமில்லாமல் போகிறது. இளமையில் காயெடுத்துவிட்டால் தேகத்தின் முன்பக்கம் பருப்பதற்கு போகும் ஸத்து நாலாபக்கமும் ஸமமாய்ப்பரவி அது உயர்ந்து வளர்ந்து வயஸுவரும்போது ஸாதுவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கும்.

குடித்தனத்துக்குரிய ம்ருகங்களுக்கு காயெடுக்கவேண்டிய வயஸுகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

குதிரைகழுதைகளுக்கு ...	1முதல்2வயஸு
மாடு ...	... 3 மாதம் முதல் 1 வருஷம்.
ஆடு, வெள்ளாடு	... 1 முதல் 3 மாதம்.

முன்சொல்லியபடி ப்ரதி ஜில்லாவுக்கும் ஒரு கால்நடை வைத்யரையாவது நியமித்திருக்கி

ஞர்கள். அவரைத் தாலூக்காவுக்கு ஒருமாஸமாக தனக்கேற்பட்டிருக்கும் தாலூக்காக்கள் தோறும் சுற்றிவரத் திட்டம் செய்திருக்கிறார்கள். அவர் 4 முதல் 6 மாஸத்திற்கு ஒரு தடவை ஒவ்வொரு தாலூக்காவுக்கும்வருவார் எந்த க்ராமத்தாருக்காவது விதை எடுக்க வேண்டிய கால்நடைகளிருந்தால் தாலூக்கா தாசில்தாருக்கு எழுதிக்கொள்ளவேண்டியது, அவர் கால்நடை வைத்யரை அந்த க்ராமத்திற்குப்போக எழுதிவிடுவார்,

விவஸாயந்துண்டு பத்ரிகையில் எப். வேர்.

IMPROVEMENT OF CATTLE.

கால்நடைகளை வ்ருத்தி செய்தல்.

சென்ற ஸெப்டம்பர்மாஸம் 15-தேதியன்று பூனவில் விவஸாய கான்பரென்ஸ் கூடிய போது பம்பாய் கவர்னர் தாம் ப்ரெஸிடெண்டாக இருந்துசெய்த ப்ரஸங்கத்தில் கால்நடைகளை வ்ருத்திசெய்வதைப்பற்றி வற்புறுத்திக் கூறினார். தற்காலம்விவஸாயத்தில் ஊக்கமுள்ளவர்கள் தோட்டவேலையைப்பற்றியும்,விவஸாய வேலைக்கு யந்த்ரங்களை உபயோகிப்பதைப் பற்றியும் ரொம்பப் பேசியும் எழுதியும் வருகிறார்களே யொழிய, கால்நடைகள் வைத்து வளர்ப்பதைப்பற்றி ஒன்றும் சொல்ல முன்வரவில்லை என்றுதெரிகிறது; அநேக விவஸாயிகள் விவஸாய வேலைக்கு வேண்டியதற்காகமட்டும் கால் நடைகள் வைத்துக்கொண்டிருக்கிறார்களேயொழிய, கால் நடைகளை வ்ருத்தி செய்வதைப்பற்றி ஒருவரும் கவனம்செலுத்தவில்லை. இந்த தேசத்து கறவைமாடுகளை அபிவ்ருத்தி செய்ய எல்லாரும் பாடுபடவேண்டும். கால்நடைகளை வ்ருத்திசெய்வதுவிவஸாயத்துக்கும் பொதுவாய் ஜனங்களுக்கும் ரொம்ப நன்மை பயக்கக்கூடியதென்பதை ஜனங்கள் அறிந்துகொண்டால் இப்போது அவர்கள் கால்நடைகள் விஷயமாய்க் கொண்டிருக்கும் தப்பெண்ணங்கள்எல்லாம் மாறிவிடும். இதுவிஷயமாய் கவர்ன்மெண்டார் சிறிது பாடுபடுவது அவச்யம். இப்பொழுது இந்ததேசத்திலுள்ள பால்தயிர்ப்பண்ணைகளில் உள்ள மாடுகளை வ்ருத்திசெய்ய உயர்ந்த பொலிகாளைகளை தருவித்து உபயோகப்படுத்தவேண்டும்—என்று சொன்னார்.

மேலும் தாம் கணேச்கண்டில் ஒருபண்ணை ஸ்தாபித்து அதில் விந்து தேசத்துமாடுகள் வைத்து வளர்க்கப்போவதாகவும், தாம் செய்வதுபோலவே ராஜாக்கள், ஸர்தார்கள், சில ஸ்வான்கள் முதலியவர்கள் செய்து பார்க்கவேண்டுமென்றும், இப்படிச் செய்வதனால் பால் வெண்ணெய்முதலியவைஜனங்களுக்கு ஸுலபமாய் அகப்படுவதோடு, குடிகளுடைய கஷ்ட நஷ்டங்களை தாமும் மற்றவர்களும் அறிந்து கொள்வதற்கு ஹேதுவாகும் என்றும் சொன்னார்.

MILKING PERIOD.

பால் கறக்கும் காலம்.

பசுக்களைக் கன்றுபோடும் காலம் வரையில் பால் கறந்துகொண்டே யிருக்கக்கூடாது. கன்று போடுவதற்கு முன் 6 அல்லது 8-வாரம் வரையில் பால் கறக்காமல் விட்டு வைக்க வேண்டும். தலையீற்று மாடுகளாயிருந்தால் இன்னம் அதிககாலம் பால் கறக்காமல்விட்டு வைக்கவேண்டும். ஏனென்றால் அவைகள் இன்னம் பூராவளர்ச்சியடையாதவை. சில, சினையாயிருக்கும்போதே வளர்ந்து கொண்டிருக்கும். இவைகளை உத்தேசத்து, அவைகளை ரொம்ப இளம்வயதா யிருக்கும்போதே பொலிய விடுவது ரொம்பப் பிசகென்று சொல்லவேண்டும். சினையாயிருக்கும் தலையீற்று மாடுகளை கன்றுபோடும் வரையில் பால் கறந்துகொண்டே யிருந்தால் அவைகளின் தேகவளர்ச்சிக்குக் கெடுதல் ஏற்படும். பால்வற்றிப் போவதற்கும் கன்றுபோடுவதற்கும் இடையில் அதிககாலம் இருக்கும்

படி செய்யவேண்டும். கன்றுபோடுவதற்கு முன் 3-மாஸம் வரையில் பால் கறக்காமல் வற்றிப்போகும்படி விடலாம். இப்படிச்செய்வதனல் மாட்டுக்கும் அதன் கன்றுக்கும் பால் சுரக்கும் தன்மை வ்ருத்தியாகிறது. இப்படிச் செய்யாமல் அஜாக்ரதையா யிருப்பதனுல்தான் அநேக கடாரிகள் ரொம்ப நல்ல பசுக்களாய் வளராமல் போகின்றன. கடாரிகள் முதல் தடவை கன்றுபோட்டபிறகு அடுத்த தடவை பொலிய விடுவதற்கு முன்னல் ரொம்ப காலமாவது நல்லது.

INTER-CULTURE IN COCOANUT PLANTATIONS.

தென்னந்தோப்புகளில் இடை ஸாகுபடிசெய்தல்.

தென்னம் பிள்ளைகள் வைத்த இரண்டாவது வருஷம் முதல் :-வது வருஷம் முடிய தென்னம் பிள்ளைகளுக்கு இடையிலுள்ள காலி நிலத்தில் சிறுபயிர்கள் ஸாகுபடி செய்யலாம். பயிர்கள் சீக்ரம் பலன் கொடுக்கக்கூடியவைகளா யிருக்கவேண்டும். சில ஸமயம் 4-வது வருஷத்திலேயே இடைப்பயிர்களை அழித்து விடவேண்டியதாயிருக்கும். அன்னசி, மிளகு, காப்பிச்செடி (Coffee Robusta), சில கோதுப் பயிர்கள், சோளம், வேர்க்கடலை ஆகிய இவைகள் பயிரிடுவதற்கேற்றவை. கோதுப்பயிர்களில் சணல்பயிர் ரொம்ப ஏற்றதென்று சொல்லப்படுகிறது. காபிப்பயிரிடுவதிலும் நல்லலாபம் கிடைக்கிறதாம்.

MANURE FOR SUGAR CANE.

கரும்புப் பயிருக்கு எரு.

ஸாமல் கோட்டை விவஸாயப்பண்ணையில் கரும்புக்கு நல்ல எரு எதுவென்று அறிவதற்காக சென்ற பத்துவருஷங்களாகப் பரீக்ஷைசெய்து வந்தார்கள். இந்தப்பரீக்ஷைகளால் (1.) கோதாவரி தீரராம்பத்தில் ஸாகுபடி செய்யப்படும் கரும்புக்கு செயற்கை உரங்கள் போடுவதால் அதிக ப்ரயோஜனமில்லை என்றும், (2.) முத்துக்கொட்டைப் பிண்ணுக்கு, வேப்பம் பிண்ணுக்கு, புங்கம் பிண்ணுக்கு ஆகிய இவை நல்ல எருவாகும் என்றும், ஆனுலும் முத்துக்கொட்டைப் பிண்ணுக்கின் விலை வேப்பம் பிண்ணுக்கு, புங்கம் பிண்ணுக்கு ஆகிய இவைகளின் விலையைவிட நான்கு மடங்காயிருப்பதால் புங்கம் பிண்ணுக்கு, வேப்பம் பிண்ணுக்கு இரண்டும் கலந்த பிண்ணுக்கை உபயோகிப்பது முத்துக்கொட்டைப் பிண்ணுக்கு எருவை உபயோகிப்பதைவிட லாபகரமான தென்றும் தெரிய வருகிறது.

HUMUS.

ஹ்யூமஸ்.

நிலத்திலுள்ள ஹ்யூமஸ் என்ற மக்கின இந்த்ரியவஸ்துவை பரிசோதிக்கப்பின் வருமாறு செய்யலாம். கழனியின் காய்ந்த மண்ணில் கொஞ்சம் எடுத்து ஒரு இரும்புக்கரண்டியில் போட்டு நெருப்பில் காய்ச்சினுல் புகைந்து எரிய ஆரம்பிக்கும். இப்படி புகைந்து எரிவதுதான் நிலத்திலுள்ள மக்கின இந்த்ரிய வஸ்து அல்லது ஹ்யூமஸ் ஆகும். நிலத்திலுள்ள மற்ற மணல் களிப்பு இவ்வாறு புகைந்து எரியாது. ஹ்யூமஸ் விசேஷமாயுள்ள மண்ணை கையினுல் இழைத்துப் பார்த்தால் ரொம்ப ம்ருதுவாய் இருக்கும். காகரப்பும் பிசுபிசுப்பும் இருந்தால் மணல் களிப்பு அதிகமென்று தெரியும். ஓர்நிலத்தில் ஹ்யூமஸ் (Humus) வேண்டியளவு இருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்பது அனுபவமுள்ளவர்களுக்கு கையினுல் இழைத்துப் பார்ப்பதினுலேயே தெரியும்.—சாஸ்த்ரீய உரம்.

LAND CESS.

நில ஸெஸ்.

இப்போது ரூபாய்க்கு ஒரு அணுவாக உள்ள நில ஸெஸ்ஸை ரூபாய்க்கு இரண்டணுவரையில் உயர்த்துவதற்கு டிஸ்ட்ரிக்ட்

போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கும்படி டிஸ்ட்ரிக்ட்போர்டு ஆக்டை மாற்றவேண்டு மென்ற ப்ரேரணையைப்பற்றிச் சென்றமாஸம் ஒருவ்யாஸம் விஸ்தாரமாய் எழுதியிருந்தோம். நிலஸெஸ்ஸை உயர்த்துவதைப்பற்றிய இரண்டொருவருடைய அபிப்ராயத்தைக் கீழே வரைகிறோம்.

டீஸென்ட்ரலே ஸேடின் கமிஷன் பின் வருமாறு அபிப்ராயப்படுகிறது:—தற்காலம் கவர்ன்மெண்டார் நிலத்தின்மேலுள்ள பளுவைக் குறைக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டிருப்பதை உத்தேசித்தும், லோகல் போர்டுகளில் எல்லா ஜனங்களுடைய அபிப்ராயங்கள் முழுமையும் தெரிவிக்கப்படும்படி இன்னம் போர்டுகளை அமைக்க முடியாமலிருப்பதை உத்தேசித்தும், க்ராமாந்தரங்களில் நிலஸெஸ்ஸை அடிக்கடி மாற்றுவதனால் பொதுவாய் அத்ருப்தி ஏற்படுவதோடு அறியாத ரயத்துகள் மோசம் போகக் கூடுமென்பதை உத்தேசித்தும், வாய்தாத் தொகையில் ரூபாய்க்கு ஒரு அணுவுக்குமேல் நிலஸெஸ்ஸை உயர்த்துவதற்கு டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது; தாலுக்கா போர்டுகள் தனியாக ஒரு லாண்ட் ஸெஸ்ஸும் போட்டுக் கொள்ளும்படிக்கும் அதிகாரம் கொடுக்கக் கூடாது, என்று நாங்கள் அபிப்ராயப் படுகிறோம்.

முன் பினன்ஸ் மெம்பராயிருந்த ஸர் ரிச்சர்ட் டெம்பிள் லாண்ட் ஸெஸ் விஷயமாய்ப் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

ஏழை ஜனங்கள் எவ்வளவு ந்யாயமாய் வரி கொடுக்கலாமோ அவ்வளவு வரியும் ஏற்கனவே போட்டாயிற்றென்று பலர் நம்பியிருப்பதுபோலவே நானும் நம்பியிருக்கிறேன். மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு பணந்தேடும் விஷயமாய் அதிக ஸ்வாதீனம் கொடுப்பதனால் ஸ்தல ஆட்சிக்காகப்போடும் வரி ரொம்பவும் உயர்த்தப்படுமானால் இந்த ஏற்பாட்டால் தீமைகள் ஏற்படாஎன்று நான் நினைப்பதற்கில்லை. சென்னை கவர்ன்மெண்டார் உள்நாட்டு முனிஸிபல் ஆட்சி விஷயமாய்ச் செய்திருக்கும் சட்டத்தின் மேன்மையைப்பற்றி நான் ச்லாகிக்கிறேன். ஆனால் இது வரியை அதிகப் படுத்துவதற்கு ஒரு உதாரணமாக ஆகிறதென்பதை நாம் மறப்பதற்கில்லை.

அயோத்தி மாகாணத்தின் சீப் கமிஷனராயிருந்த ஸர் வி. ஜே. வின்ஸ்பீல்ட், 1873-ம் வருஷம் கூடிய ஈஸ்ட் இண்டியா பினன்ஸ் ஸிலெக்ட் கமிட்டியில் நில ஸெஸ் விஷயமாய்க் கேள்விகள் கேட்கப்பட்டபோது பின் வருமாறு பதில் சொன்னார்:—

கேள்வி:—முப்பது வருஷத்துக்கு ஒருதடவை ஒரு ஸெட்டில்மெண்ட் செய்து பிறகு கவர்ன்மெண்டார் இஷ்டப்பட்டால் புது ஸெஸ்ஸுகள் போடலாமென்றால், முப்பது வருஷ ஸெட்டில்மெண்ட் என்பதற்கு அர்த்தமேயில்லாமல் போகிறதல்லவா?

பதில்:—அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.

கேள்வி:—இதனால் கவர்ன்மெண்டுக்கு அவச்யம் நேர்ந்தபோதெல்லாம் எவ்வளவு தொகை வேண்டுமென்றாலும் ஸெஸ்ஸுக்கு மேல் ஸெஸ்ஸாகப் போடமாட்டார்கள் என்ற நிச்சயமே அயோத்தியிலுள்ள விவஸாயிகளுக்கு இல்லாமல் போகிறதல்லவா?

பதில்:—வாஸ்தவத்தில் யாதொரு நிச்சயமும் கிடையாது தான்.

கேள்வி:—முப்பது வருஷத்துக் கொருதடவை செய்யப்படும் ஸெட்டில்மெண்டால் நிலவரி இவ்வளவு என்று தீர்மானித்தாலுங்கூட இப்படி வேறுவழியால் நிலவரியை இரண்டுமடங்காக்கக்கூடாதென்பதற்கு யாதொரு தடையுமில்லையே?

பதில்:—அவ்வப்போதுள்ள கவர்ன்மெண்ட் அதிகாரிகள் எது ஸரியென்று நினைக்கிறார்களோ அதைத் தவிர வேறுதடையில்லை: அதாவது ஸரி தப்பு என்பதைப்பற்றி அவர்கள் கொண்டிருக்கும் எண்ணங்களைத் தவிர வேறு தடைகிடையாது.

கேள்வி:—அவைகள் அதாவது ஸரிதப்பு இன்னவென்பதைப்பற்றிய அபிப்ராயங்கள் காலத்துக் காலம் மறுபாடுகின்றன வல்லவா?

பதில்:—ஆம்.

மேற்காட்டியவைகளால் கவர்ன்மெண்டாருக்கு அந்யாயமென்று தோன்றி நிறுத்தினாலொழிய நிலத்தின்மேல் போடும் வரியை எவ்வளவு வேண்டுமென்றாலும் அவர்கள் ஏற்றிக் கொண்டே போகலாமென்று ஏற்படுகிறது.!

Co-operative World.

கோவாபரேஷன் பகுதி.

CO-OPERATIVE PROGRESS IN MADRAS.

சென்னையில் கோவாபரேஷனின் முன்னேற்றம்.

ஸமீபத்தில் சீயாழியில் நடந்த தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸில் மிஸ்டர் வி. பி மாதவ ராவ் ப்ரெஸிடெண்டாக இருந்து பேசின போது இந்திய விவஸாயிகளில் சிலருக்கு எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கலாமென்றாலும் அதைக்கொண்டு, அவர்கள் தங்களுக்கு நன்மைபயக்கக் கூடியவைகள் எவை யென்று அறிந்து கொள்ளவாவது சீர்திருந்திய முறைகளை அனுஸரிக்கவாவது அல்லது கோவாபரேஷனுடைய ப்ரயோஜனத்தை அறிந்து கொள்ளவாவது முடியாதவர்கள் என்று சொல்வதற்கில்லை யென்றும், ஐக்ய நாணய முயற்சியின் உண்மையான எண்ணங்களை யறிந்து அதை அனுஷ்டிப்பதில் அவர்கள் காட்டிவரும் திறமையால் உலகத்தையே ப்ரமிக்கச் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னார். இன்னம் கோவாபரேஷனால் பற்பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும் எடுத்துக்காட்டினார். உண்மையில் ஜனங்கள் கோவாபரேஷனின் உண்மையான நோக்கங்களை அறிந்து கோவாபரேஷனை உபயோகித்து வருகிறார்கள் என்றால், மேற்சொன்னவைகளெல்லாம் நமக்கு ஸந்தோஷம் கொடுக்கக் கூடியவைகளே. ஆயினும், கோவாபரேஷனில் நாம் இதுவரையில் அடைந்திருக்கும் அபிவ்ருத்தி எப்படியிருக்கிறது; இவ்வளவு அபிவ்ருத்தி ஏற்பட்டதற்குக் காரணமாயிருந்த அம்சங்கள் யாவை; இந்த முயற்சியில் உள்ள குற்றங் குறைகள் எவை; என்பவைகளை ஆராய்ந்தறிந்துகொண்டால் இந்தமுயற்சி பலப்பட்டு நிலைத்து நிற்கவும், இதனால் ஜனங்களுக்கு உண்டாகக்கூடிய பயன்கள் அனைத்தும் உண்டாவதற்கும் நாம் செய்யவேண்டிய முயற்சிகளை ஒழுங்கு படுத்திக்கொள்ளலாம்.

கோவாபரேஷன் முயற்சியில் நெருங்கிய ஸம்பந்தம் உள்ளவர்கள் இந்த முயற்சி விஷயமாய் எப்படி அபிப்ராயம் கொண்டிருக்கிறார்கள் என்பதை யறிந்துகொள்வது நல்லது.

ஐக்ய நாணய முயற்சி முதலில் ஏற்பட்ட போது கோவாபரேடிவ் ஸங்கங்களின் ரெஜிஸ்ட்ராராயிருந்த திவான் பகதூர் ராஜகோபாலாசார்யார் செங்கல்பட்டு ஜில்லா கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்து பேசியபோது கோவாபரேஷன் முயற்சியைப்பற்றி பின்வரும் விஷயங்களைச்சொன்னார்.

கோவாபரேஷன் முயற்சி இவ்வளவு தூரம் அபிவ்ருத்தி யடைந்திருப்பதற்குக் காரணம், ஆரம்பம் முதல் இந்த முயற்சியானது ஒரு கவர்ன்மெண்டு டிபார்ட்மெண்டால் நடத்தப்பட்டு வந்திருக்கிறதென்பதே யென்பதில் ஸந்தேகமில்லை. மேலும் கவர்ன்மெண்டால் நடத்தப்பட்டு வருகிறதென்ற கண்யமும், அசனால் ஏற்பட்ட நம்பிக்கையும் இந்த முயற்சிக்கு ஸாதகமாயிருந்து வருகிறது. மேலும் மதராஸ் ஸெண்ட்ரல் பாங்கியின் பண உதவியும் இந்த முயற்சிக்குக் கிடைத்து வருகிறது. அநேக மரண பண்டுகளும் ஸகாயநிதிகளும் முறிந்துபோய் ஜனங்கள் ஸங்கங்களில் நம்பிக்கையற்றவர்களாயிருந்த போது, ஐக்ய நாணயஸங்கங்களை மேம்பார்வை பார்க்கவும், கணக்குகளைத் தணிக்கை செய்யவும், அந்த ஸங்கங்களுக்குக் கெடுதிவராமல் பார்த்துக் கொள்ளவும் கவர்ன்மெண்டார் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள் என்று ஜனங்களுக்கு எடுத்துக்காட்டினதின்பேரில் அவர்களுக்கு கோவாபரேஷனில் நம்பிக்கை யேற்பட்டது.

ஒரு க்ராமத்தில் ஒரு ஸங்கம் ஏற்பட்டவுடன் அதன் மெம்பர்களுக்கு எவ்வளவு பணம் கடனாகத் தேவையோ அவ்வளவு பணம் இதற்கு முன் கொடுத்த வட்டியைவிடக் குறைவாகக் கிடைக்கும் என்ற விஷயம் ஜனங்களுக்கு தெரிந்தவுடன், இந்த முயற்சி வெகு விரைவாகப் பரவலாயிற்று. ஆகவே இந்த முயற்சி இப்படி தீவிரமாக அபிவ்ருத்தி யடைந்ததற்குக் காரணம் அதற்கென்று ஏற்பட்ட ஒரு கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டும், தாராளமாய்ப் பணம் கொடுப்பதற்கு ஏற்பட்ட வஸதியுந்தான்.

ஐக்ய நாணய ஸங்கங்கள் ஐரோப்பாவில் உத்யோகப்பற்றில்லாத ஜனங்களால் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வர, இந்தியாவிலோ பெரும்பாலும் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களால் தான் ஸ்தாபிக்கப்பட்டன. கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்களுடைய மேம்பார்வையினால் தான் ஐக்யநாணயஸங்கங்கள் நல்ல ஸ்திதியிலிருக்கின்றன. கவர்ன்மெண்டார் இந்த முயற்சி ஸம்பந்தமாய் ஊக்கத்தோடு செய்து வரும் வேலையை நிறுத்திவிடுவதாகத் தெரிவித்தால், இந்த முயற்சி இவ்வளவு சீக்ரத்தில் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்ததாக ஐரோப்பிய நிபுணர்கள் எவ்வளவு ஆச்சர்யப்படுகிறார்களோ அதைவிட அதிக ஆச்சர்யம் அவர்கள் கொள்ளும்படி அதிசீக்ரத்தில் இந்த ஸங்கங்ளில் அநேகம் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போகும். ஸ்தாபனமாயிருக்கிற ஸங்கங்களின் ஸங்க்யையைக் கொண்டாவது அல்லது அவைகள் அதிசீக்ரம் ஸ்தாபிதமாயிருக்கின்றன என்பதைக் கொண்டாவது நமக்குள் ஐக்யபத்யம் ரொம்ப முதிர்ந்திருக்கிறதென்று சொல்வது தவறாகும். இது வரையில் நாம் அடைந்திருக்கும் அபிவ்ருத்தியைப்பற்றி நாம் ஸந்தோஷமடையலாம். ஆனால் இந்த ஸந்தோஷத்தில் நாம் நமது தவறுதல்களையும் குறைகளையும் மறந்து விடக்கூடும். சென்ற ப்ரொவின்ஷ்யல் கான்பரென்ஸில், இந்த ராஜதானியில் ரூரல் ஸங்கங்கள் இன்னம் அதிகமாய் ஸ்தாபிக்க வேண்டியது அவச்யமென்றும், இந்த முயற்சி த்ருப்திகரமாயும் அபாயமின்றியும் வ்ருத்தியடைவதற்காக கவர்ன்மெண்டார் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

கோவாபரேஷன் முயற்சி ஏற்பட்டு 9-வருஷமாகி 1000 ஸங்கங்களுக்குமேல் கவர்ன்மெண்டார் ஸ்தாபித்துக் கொடுத்த பிறகும் அவைகளைப் பார்த்துக்கொண்டு உத்யோகப்பற்றில்லாத ஜனங்கள் புது ஸங்கங்களை ஸ்தாபிக்க முன்வராமல் கவர்ன்மெண்ட் உதவியை இன்னம் நாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் கோவாபரேஷன் முயற்சியில் நாம் அடைந்திருக்கும் அபிவ்ருத்தி ரொம்ப குறைவானதே என்று சொல்லவேண்டும்.

கோவாபரேஷனால் மற்றதேசங்களில் மிதமாய்ச் செலவழித்தல், விவேகம், தன்னடக்கம் முதலிய பல நன்மைகள் ஜனங்களுக்கு ஏற்பட்டிருப்பது போல் நமது தேசத்தி ஸங்கங்கள் எவ்வளவு தூரம் அபிவ்ருத்தியடைந்திருக்கின்றனவோ அவ்வளதூரத்துக்கு இந்த நன்மைகள் ஜனங்களிடம் வ்ருத்தியாகவில்லையென்று சொல்வது தவறாகாது. இந்த விஷயத்தில் உத்யோகப்பற்றில்லாதவர்கள் தான் ரொம்ப பாடுபடவேண்டுமேயொழிய, கவர்ன்மெண்டால் அதிகமாக ஒன்றும் செய்யமுடியாது. பணம் ஸுலபமான வட்டியில் கடன் கிடைக்கிறதென்று அநேகர் கடனை முன்னிருந்ததைவிட அதிகமாக வாங்கக்கூடும். சில க்ராமங்களில் ஸுலபமான வட்டியில் வேண்டிய பணம் கிடைக்கிறதென்று பலர் ஏராளமாய் கடன் வாங்க ஆரம்பித்து தங்களுக்கிருக்கும் கடன் தொகையை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக்

கெடுதி முதலில் அதிகமாயிராவிட்டாலும் வரவர அதிகரிக்கக்கூடும். இந்தக் கெடுதியைத் தடுப்பதற்கு முயற்சிகள் செய்யவேண்டும்.

கோவாபரேஷனில் ஜனங்களுக்கு உண்மையான ஊக்கம் தகுந்த அளவுக்கு இல்லையென்பதற்கு இன்னொரு த்ருஷ்டாந்தம், பொருள் உற்பத்தி ஸங்கங்களும் விற்பனை ஸங்கங்களும் நமது ராஜதானியில் வெகுவாய் உருப்படாமல் போய்விட்டதென்பதே. நாணய ஸங்கங்கள் தவிர மற்ற கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பது கஷ்டமானது தான். ஆனால் அதைக்கொண்டு அவைகளை ஸ்தாபிக்காமலிருப்பது ஸரியல்ல; பணம் கடன் கொடுக்க ஜனங்கள் தயாராயிருக்கும்போது கடன் வாங்குவது ஒரு கஷ்டமான கார்யமல்லவே! நாணய ஸங்கங்கள் ஒழிந்த மற்ற கோவாபரேஷன் முயற்சிகளில் ரொம்பவும் பாடுபட்டு உழைக்கவேண்டும்:—என்றிப்படி திவான் பகதூர் ராஜகோபாலாசார்யார் சொன்னார்.

கோவாபரேஷனில் ஸம்பந்தப்பட்ட மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை அடுத்த ஸஞ்சிகையில் ப்ரசுரிப்போம்.

PRODUCTIVE SOCIETIES.

உற்பத்தி ஸங்கங்கள்.

கொஞ்சகாலமாக நமது ராஜதானியில் உற்பத்திஸங்கங்களும் விற்பனை ஸங்கங்களும் ஸ்தாபிக்க வேண்டுமென்று பேச்சு நடந்து வருகிறது. இங்க்லண்டில் கோவாபரேஷன் முயற்சியில் ரொம்பவும் பாடுபடுவராகிய மிஸ்டர் வுல்ப் என்பவர் உற்பத்தி ஸங்கங்கள் ஸ்தாபித்து நடத்துவது ரொம்ப ச்ரமமானவேலை யென்கிறார். இந்த விதமான ஸங்கங்கள் வைத்து நடத்துவதில் நஷ்டங்களும் ஏற்படக்கூடும். இருந்தாலும், இது விஷயத்தில் ரொம்பவும் ச்ரமப்பட்டுப் பார்ப்பது நல்லது. பல ஸங்கங்களில் நஷ்டம் ஏற்பட்டாலும் ஒரு ஸங்கத்தையாவது நஷ்டம் ஏற்படாமல் லாபகரமாக நடத்திக் காட்டிவிட்டால் பிற்பாடு இந்தமுயற்சி ஸுலபமாக நடந்து வரக்கூடும்.

தொழிலாளிகளுக்குள் முதலில் பணஉதவிக்காக ஐக்யநாணய ஸங்கங்கள் ஏற்படுத்துவது நல்லது. பிறகு தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களை சேர்ந்து வாங்க முயற்சிக்க வேண்டும். இப்படிச்செய்தால் பிறகு தொழிலாளிகள் தங்களுடைய சரக்குகளை பொதுவில் விற்பது பாதிஸுலபமாகும்.

ஐக்யநாணய ஸங்கங்கள் ஒரேவிதத் தொழிலாளிகளுக்காக ஏற்படுவதைவிட, பலவித தொழில்களில் அமர்ந்துள்ளவர்கள் ஒரு ஸங்கத்தில் சேர்ந்திருந்தால் ஸங்கத்து மெம்பர்களுக்குப் பணம் கிடைப்பது ஸுலபமாகும்.

A CO-OPERATIVE CONGRESS.

ஒரு கோவாபரேடிவ் காங்க்ரேஸ்.

இண்டர் நாஷனல் கோவாபரேடிவ் அல்லையன்ஸ் என்று சொல்லப்படும் ஸர்வதேச கோவாபரேடிவ் ஸங்கம் ஒன்று ஐரோப்பாவில் இருக்கிறது. ஐரோப்பாக்கண்டத்தில் கோவாபரேஷனை அனுஷ்டித்து வரும் தேசத்தார்கள் எல்லாரும் சேர்ந்து 1895-ம் வருஷத்தில் லண்டனில் முதல்முதல் ஒரு ஸர்வதேச காங்க்ரெஸ் ஸபை கூடி மேலே சொன்ன ஸர்வதேச ஸங்கம்ஒன்று ஸ்தாபித்தார்கள் அந்த ஸங்கத்தின் 9-வது காங்க்ரெஸ் ஸபை சென்ற ஆகஸ்ட் மாஸம் 25-தேதி ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள க்ளாஸ்கோ பட்டணத்தில் கூடிற்று. லார்ட் க்ரே ப்ரெஸிடெண்டாக இருந்தார். 600-டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். இவர்கள் 2-கோடி கோவாபரேடர்கள் அடங்கிய 1,30,000-கோவாபரேடிவ் ஸங்கங்களின் ப்ரதிநிதிகள். ஜெர்மனி, இங்க்லண்ட், டென்மார்க்

ஐயர்லண்ட் முதலிய பல தேசங்களிலிருந்தும் மெம்பர்கள் வந்திருந்தபடியால் காங்க்ரெஸின் நடவடிக்கைகள் இங்க்லீஷ், ப்ரெஞ்ச், ஜெர்மன் ஆகிய இந்த மூன்று பாஷைகளிலும் நடத்தப்பட்டன. இதனால் கோவாபரேஷன் ஐரோப்பாவில் எவ்வளவு தூரம் அபிவ்ருத்தியடைந்திருக்கிற தென்பது தெரியவரும்.

CO-OPERATION IN SMALL INDUSTRIES.

சிறுதொழில்களில் கோவாபரேஷன்.

ஸ்வல்ப மூலதனம் வைத்து நடத்தும் சிறு தொழில்களை கோவாபரேஷன் முறையில் நடத்துவதால்பலவித ஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன என்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை கூறுகிறது. அவைகளில் சில பின்வருமாறு:—

(1) பலர் சேர்ந்து ஒரேவேலையைச் செய்வதால் அதிகசரக்குகள் செய்வது ஸாத்யமாகிறது. சரக்குகள் அதிகமாகச் செய்யமுடிவது தொழில் நன்ருய் நடந்துவருகிறதென்பதற்கு ஒரு அறிகுறியாகும். அநேக கைத்தொழில்கள் நன்ருய் நடநது வராமல் தவிப்பதற்கு இப்படி சரக்குகள் அதிகமாகச் செய்யமுடியாமல் இருப்பது ஒருகாரணமாகும்.

(2) ஒருசரக்கு செய்வதில் உள்ளவேலைகளைப் பலபேர் பங்கிட்டுச் செய்வதால் வேலை திறமாயும் சுருக்காயும் அதிகமாயும் ஆவதோடு ஒவ்வொரு வேலைக்காரனும் அதிக திறமையுள்ளவனுயும் ஆகிருன்.

(3) சரக்குகள் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் ஏராளமாக வாங்கலாம். இதனால் அவைகளை மலிவாகவும் வாங்குதல் ஸாத்யமாகும்.

(4) தொழிலாளி தனது சரக்குகளை குறைந்த விலைக்கு விற்கும்படியான அவச்யம் நேரிடாது. லாபகரமாய் விற்பதற்கு ஸமயம் வரும்வரையில் சரக்குகளை விற்காமல் வைத்திருக்கலாம்.

(5) விலையுயர்ந்த யந்த்ரங்களையும் ஆயுதங்களையும் கஷ்டமன்னியில் ஸுலபமாக வாங்கலாம்.

(6) தொழிலாளி தனியாக வேலைசெய்வதில் அவனுக்கு மனஸ் ஸந்துஷ்டியிராது. பலர் ஒன்றுசேர்ந்து தொழிற்சாலையில் வேலைசெய்வதால் மனஸ் ஸந்துஷ்டி ஏற்படுகிறது. அவர்கள் தமது காலத்தை ஸந்தோஷமாகக் கழிக்கலாம். தொழிலாளிகள் சுறுசுறுப்பாயும் யோக்யமாயும் வேலைசெய்வதற்கு கோவாபரேஷன் ஒரு ஸாதனமாகிறது.

(7) புதுமுறைகளைப் பல தொழிலாளிகளுக்கு ஸுலபமாய்க் கற்பிக்கலாம். புதுக் கருவிகளை அவர்களுக்கு செய்து காட்டுவதும் ஸுலபம். புதுவிஷயங்களை அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதும் எளிது.

(8) கூட்டுறவில் வேலைசெய்வதில் ஒரு தொழிலாளி செய்யும் வேலையை மற்றதொழிலாளிகள் நல்ல எண்ணத்தோடு மேம்பார்வை பார்ப்பது போலாகிறதால் ஒவ்வொருவனும் ஒழுங்குடன் வேலைசெய்யப்பழகுகிருன். தொழிலாளிகளுக்குள் ஸகோதரத்வமும் அவர்களுக்குக் கார்யத்தில் பொறுப்பும் ஏற்படுகின்றன. ஒருவர்க்கொருவரிடத்தில் நம்பிக்கையும், நாணயமும் உண்டாகின்றன.

(9) தொழில்சாலையில் தொழிலாளிக்கு ஒரு பங்கு ஏற்படுவதால் அவனுக்கு ஒருவிததைர்யமும் நம்பிக்கையும் ஏற்படுவதோடு, பிற்காலத்தில் அவன் பணத்துக்குக் கஷ்டப்படாமல் ஜீவிக்கவும் ஹேதுவாகிறது.

(10) தொழிலாளிக்கு வ்யாபார முறைகளில் பயிற்சியும் அனுபவமும் ஏற்படுகிறது.

Commercial World

வ்யாபாரப்பகுதி.

PUNJAB BANK FAILURES.

பஞ்சாப்பில் பாங்கிகளின் முறிவு

பஞ்சாப்பிலுள்ள பீபிள்ஸ் பாங்கியும், அம்ரிட்ஸார்பாங்கியும் டெபாஸிட்டர்களுக்குப் பணம் திருப்பிக் கொடுப்பதை நிறுத்திவிட்டன வென்று சென்ற மாஸம் குறிப்பிட்டிருந்தோம். இவைகள் முறிந்துபோனதால் இவைகளில் பணம் போட்டவர்கள் ரொம்ப கஷ்டமடைந்து வருகிறதாகத் தெரியவருகிறது. இந்த பாங்கிகள் முறிந்து போவதால் ஜனங்கள் அவநம்பிக்கை யடைந்து பாங்கிகளில் பணம் போடும்வழக்கம் குறைந்தோ, அல்லது நின்றுபோயோ, இந்திய பாங்கி வ்யாபார அபிவ்ருத்திக்கே ஒரு தடை ஏற்பட்டுவிடும். ஆகையால் பலர் இந்த பாங்கிகளை இப்படியே முறிந்து போகவிடாமல் மறுபடியும் வேலை தொடங்கும்படி செய்யக்கூடாதா என்பதைப்பற்றி ஆலோசித்து வருகிறார்கள். சிலர் அப்படிச் செய்வது முடியாத கார்யமாயிருக்குமோ என்றும் பயப்படுகிறார்கள்.

நிற்க, இந்த பாங்கிகளின் நிலைமை எப்படியிருக்கிறதென்று பார்ப்போம். பீபிள்ஸ் பாங்கி 1901-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் மூலதனம் 35-லக்ஷம் ரூபாய் என்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. ஆயினும் அதில் வஸூலான மூலதனம் $12\frac{1}{2}$-லக்ஷம் தான். இதற்கு ஸுமார் 72 ப்ராஞ்சுகள் இருக்கின்றனவாம். வடஇந்தியாவிலுள்ள இந்திய பாங்கிகளில் இதுவே மிகப் பெரியதென்று சொல்லலாம்.

அம்ரிட்ஸார் பாங்கி 19[illegible]4-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு ஸுமார் 60 இடங்களில் ப்ராஞ்சுகளும் ஏஜென்ஸிகளும் இருக்கின்றன. இதன் செலுத்தப்பட்ட மூலதனம் 5-லக்ஷம் ரூபாயாகும். டெபாஸிட் தொகையும் சேர்த்து 33-லக்ஷம் ரூபாயைக் கொண்டு லேவாதேவி நடத்தி வந்தார்கள். பீபிள்ஸ் பாங்கி லாலா ஹரி க்ருஷ்ண லாலால் ஸ்தாபிக்கப்பட்டது. இது மிகவும் ப்ரபலமான பாங்கியென்று ஏற்கனவே சொன்னோம். இதில் ஜனங்கள் ஒரு கோடி ரூபாய்க்குமேல் டெபாஸிட் செய்திருந்தார்கள். லாலா ஹரிக்ருஷ்ணலால் இந்த பாங்கியேயன்றி இன்னம் சில கம்பெனிகளையும் ஸ்தாபித்து நடத்திவருகிறார். இவர் பீபிள்ஸ் பாங்கிக்கு மானேஜிங் டிரெக்டராயிருந்தபோது தாம் நடத்திவரும் கம்பெனிகளுக்கும் தமது ஸ்நேகிதர்கள் ஸம்பந்தப்பட்டிருக்கும் கம்பெனிகளுக்கும், இன்னம் தாமும் தமது குடும்பமும் ஸம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கும், ஏராளமானதொகை கடன் கொடுத்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. இவைகளுக்குக் கொடுத்துள்ள மொத்தக் கடன் ஸுமார் 90 லக்ஷம் ரூபாய் ஆகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படிக் கடன் கொடுத்துள்ள கம்பெனிகளில் சில நல்ல ஸ்திதியிலில்லாமல் நஷ்டமடைந்து வருகின்றன வென்றும், கொடுத்தபணம் திரும்பிவருவது கஷ்டம் என்றும் ஹரி க்ருஷ்ணலால் பீபிள்ஸ் பாங்கியின் பணத்தை பல கம்பெனிகளில் போட்டும், ஒரு கம்பெனியில் போட்டதை மற்ற கம்பெனிக்கு கடன் கொடுத்தும், ஒன்றோடொன்று சிக்கி வைத்திருக்கிறார் என்றும், சொல்லப்படுகிறது. "ஆர்ய பத்ரிகா" என்னும் பஞ்சாப் பத்ரிகையானது இவருடைய பாங்கி வ்யாபார முறைகளைப்பற்றி வெகுவாய்க் கண்டித்து ஸுமார் 9-மாஸகாலம் எழுதி வந்ததாம். இந்தப் பத்ரிகை இப்படிக் கண்டித்தெழுதியும் பீபிள்ஸ் பாங்கியானது தனது வ்யாபாரமுறை

கள் ஸரியானவைதான் என்று ஸாதிக்கவாவது அல்லது அவைகளை ஒழுங்குபடுத்தவாவது ஒன்றும் செய்யவில்லை யென்று குற்றம் கூறப்படுகிறது. மேலும் ஸமீபத்தில் அந்த பாங்கியின் கணக்குகளைத் தணிக்கை செய்தபோது தணிக்கை ரிபோர்ட்டை ப்ரசுரம் செய்யவில்லையாம். இவைகளால் ஜனங்கள் பாங்கியில் அவநம்பிக்கை யடைந்து சென்ற மூன்றுமாஸ காலமாக தொடர்ச்சியாக அதில் போட்டிருந்த டெபாஸிட்டுகளைத் திரும்ப வாங்கிக்கொண்டேயிருந்தார்களாம். இதனால் பாங்கியானது மற்ற டெபாஸிட்டர்களுக்கு கேட்டபோது பணம் கொடுக்க முடியாமல் போய் பாங்கியை மூடிவிட வேண்டியதாயிற்று.

இப்படி மூடி விடவே ஜனங்களுக்கு தங்கள் பணம் போய்விடுமோ என்ற பயம் அதிகரித்து. அம்ரிட்ஸார் பாங்கியிலும் எல்லோரும் ஒரே தடவையில் பணம் கேட்டால் எல்லாருக்கும் கொடுக்கமுடியாமல் போகுமேஎன்று எண்ணி அம்ரிட்ஸார் பாங்கியையும் மூடிவிட்டார்கள்.

இந்த இரண்டுபாங்கிகளும் மூடபட்டுப்போகவே இவைகளோடு ஸம்பந்தப்பட்டசில பாங்கிகளும் வர்த்தகர்களுடைய கடைகளும் இவைகளால் பாதிக்கப்பட்டு சில முறிந்து போய் விட்டன. சில கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த பாங்கிகளின் முறிவால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. பாங்கியில் ஜனங்கள் டெபாஸிட் செய்யும் பணத்தில் ஒரு பாகத்தை பாங்கிக்காரர்கள் ஜனங்கள் கேட்டபோது கொடுப்பதற்காக கையிருப்பாக வைத்துக்கொண்டு மற்ற பாகத்தை வெளியில் கடனாகக் கொடுத்து வைப்பது வழக்கம். கையிருப்பாக வைத்துக் கொண்டிருக்கும் பணம் ரொம்ப குறைவாயிருந்தால் அநேக டெபாஸிட்டர்கள் ஒருமிக்க வந்து பணம் கேட்கும்போது பணம் கொடுக்க முடியாமல் தவிக்க வேண்டியது தான். ப்ரெஸிடென்ஸி பாங்கிகள் என்று சொல்லப்படும் மதராஸ் பாங்கி, பாங்க் அப் பாம்பே, பாங்க் அப் பெங்கால் ஆகிய இவைகள் பொதுவாய் டெபாஸிட்டுகளில் 100-க்கு 30-பாகம் கையிருப்பாக வைத்துக் கொள்கின்றன. இதரதேசங்களோடு உண்டியல் வ்யாபாரம் செய்யும் எக்ஸ்ச்சேஞ்ச் பாங்க் என்று சொல்லப்படும் பாங்கிகள் டெபாஸிட்டுத் தொகையில் நூற்றுக்கு 18-பங்கு கையிருப்பாக வைத்துக்கொள்ளுகின்றன. ஆனால் இந்திய பாங்கிகள் மாத்ரம் பொதுவாய் டெபாஸிட்டுத் தொகையில் 100-க்கு 11-பங்கு தான் கையிருப்பில் வைத்துக் கொண்டிருக்கின்றன. இப்படி குறைவாய் வைத்துக் கொள்வது எப்போதும் ஆபத்துக்கிடமானது.

பாங்கிப் பணத்தை உபயோகமற்ற இடங்களில் கடன் கொடுப்பது ரொம்பக் கெடுதலானது. பீபிள்ஸ் பாங்கியானது நஷ்டப்பட்டுக் கொண்டு வரும் சில கம்பெனிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறதென்றும் அந்தக் கடன் தொகைகள் திரும்பக் கிடைப்பது கஷ்டம் என்றும் சொல்லப்படுகிறது.

வேண்டியபோது அல்லது சீக்ரம் கிடைக்காதபடி பணத்தை கடன் கொடுப்பதும் கெடுதலானதே. பீபிள்ஸ் பாங்கியில் ஒருகோடி ரூபாய் டெபாஸிட்டுப் பணத்தில் 90-லக்ஷம் ரூபாய் வரையில் வெளியில் இப்படிக் கடன் கொடுத்து விட்டதால்தான் மூன்று மாஸ காலம் டெபாஸிட்டர்களுக்குப் பணம் கொடுத்து வந்து, பிறகு கொடுக்க முடியாமல் போயிற்று.

PACKING AND TRANSPORT OF FRUIT.

பழங்களைக்கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவது.

நமது தேசத்திலுள்ள பழவகைகளை ஸரியானபடி பயிர்செய்யாததனாலும், பழங்களை மரங்களிலிருந்து பறித்து வெளியூர்

களுக்கு அனுப்புவதில் தக்கபடி ஜாக்ரதை யாயில்லாததாலும், கடைகளில் விற்கப்படும் பழங்கள் எவ்வளவு ருசியாயும் மணமாயும் இருக்கவேண்டுமோ அவ்வளவு ருசியாயும் மணமாயும் இல்லாமல் இருப்பதோடு, அநேக ஸமயங்களில் பழங்கள் அடிபட்டும், நசுங்கியும், வேறு விதங்களில் கெடுதலடைந்தும், போகின்றன. பழங்களைத் தக்கபருவத்தில் தக்க விதமாய்ப்பறித்து ஸரியாக 'பாக்' செய்துவெளியூர்களுக்கு அனுப்பினல், பழங்கள் இப்பொழுதிருப்பதைவிட ரொம்ப நன்ருயிருப்பதோடு நல்லவிலைப்போகும் என்று சொல்லலாம்.

பழங்கள் நன்ருயில்லாதிருப்பதற்குக்காரணம் நிலத்தின் ஸ்வபாவமாவது சீதோஷ்ண ஸ்திதியாவது ஸரியாயில்லாமலிருப்பதென்று சொல்வதற்கில்லை. பழதினுஸுகள் தகுந்தவைகளாயிராமை யென்றும் சொல்வதற்கில்லை. பழமரங்கள் பயிர் செய்யும் முறையும், பழங்களைப் பறித்து வெளியூர்களுக்கு அனுப்பும் முறைகளும், சீர்திருந்தியவைகளாயிராமல் இருப்பதனுல் தான் பழங்கள் பொதுவாய் நல்லவைகளாயிருப்பதில்லை. பழங்களைப் பறித்தது முதல் விற்கும் வரையில் அடிக்கடி கையாளவேண்டியிருப்பதால் அதனுல் கெட்டுப்போகாமலிருப்பதற்காக தோட்டக்காரர்கள் காய் வெட்டாக இருக்கும்போதே பறித்து விடுகிருர்கள். இதனுல் பழத்தின் ருசியும் மணமும் ரொம்ப அதிகரிப்பதற்கு இடமில்லாமல் போகிறது. மரங்களிலுள்ள பழங்களைக் குலுக்கி உதிர்ப்பதாலும் பழம் நசுங்கிப்போகிறது. மேலும், வெளியூர்களுக்கு அனுப்பு முன் பழங்களைக் குவித்துப் போடுவதாலும் அவைகள் கெட்டுப்போகின்றன.

பழைய கெரோஸின் எண்ணெய்ப் பெட்டிகளிலும் சிம்புகளால் செய்த கூடைகளிலும் பழத்தைப்போட்டு வெளியூர்களுக்கு அனுப்புகிருர்கள். இவைகளில் காற்ரோட்டமிருக்கும்படி ஒன்றும் செய்வதில்லை. பழங்களைப் போட்டு அனுப்புவதற்கு இலைகளையும் புல்லையும் உபயோகிப்பதால் இவைகளுடைய ஈரத்தாலும் பழத்திலிருந்து வரும் ஈரத்தாலும் பழம் கெடுதலடைய ஹேதுவாகிறது. இதோடு காற்ரோட்டமில்லாத குறையும் சேர்ந்து பழத்தின் ருசியும் மணமும் குறைந்து போய் விடுகின்றன. இன்னம் பெட்டிகளிலும் கூடைகளிலும் மேல்பாகத்திலுள்ள பழம் அடியிலுள்ள பழத்தை அழுத்தி அதனுல் அடியிலுள்ள பழம் கெடுதலடைய ஹேதுவாகிறது. வடக்கேயுள்ள சில ரெயில்வேக்களைத் தவிர மற்ற ரெயில்வேக்களில் பழங்களை ஸௌகர்யமாய் அனுப்புவதற்கு தகுந்த ஸௌகர்யங்கள் கிடையா. வட்டமான சிம்புக்கூடைகள் வண்டி ஓடும்போது ரொம்பவும் அசைந்து கொடுக்கின்றன. இவைகள் ரொம்ப கனமாக இருந்து கூலியாட்கள் தூக்கமுடியாவிட்டால், அவர்கள் இவைகளை வண்டிகளிலிருந்து உருட்டித்தள்ளுகிருர்கள். இப்படிப் பல விதங்களில் பழங்கள் நசுங்கிப்போவதற்கு ஹேதுவிருப்பதால் பழங்கள் நல்ல நிலைமையில் கிடைப்பது ரொம்ப அரிதாகிவிடுகிறது.

பழங்களைப் 'பாக்' செய்து அனுப்புவதில் ஏதாவது சீர்திருத்தங்கள் செய்யலாமா என்பதைப்பற்றி 1908-ம் வருஷத்தில் பேஹார் மாகாணத்திலுள்ள ப்பூஸாவிலும், அதற்குப் பிறகு பெலுசிஸ்தானத்திலுள்ள க்வெட்டாவிலும், விவஸாய டிபார்ட்மெண்டார் சில பரீக்ஷைகள் செய்து பார்த்தார்கள். அவைகளின் விவரங்களை இன்னெரு சஞ்சிகையில் எழுதுவோம்.

DEMAND FOR SCISSORS & SHEERS.

கத்தரிகளுக்கு க்ராக்கி.

சென்னை ராஜதானியில் கத்தரிக்கோல்கள் விசேஷமாகச்செலவாகின்றன. ஒவ்வொரு வீட்

டியும் செலவாகும் கத்தரிகளைத் தவிர, தையல் காரர்களுக்கும், அம்பட்டர்களுக்கும் கத்தரிகள் தேவையாயிருக்கின்றன. சென்னப்பட்டணத்தில் மட்டும் ஸுமார் 11,000 தையல்காரர்களும், 3400 அம்பட்டர்களும் இருக்கிறார்களென்றால், சென்னை ராஜதானி மொத்தத்துக்கு எவ்வளவு க்ராக்கி இருக்குமென்று எல்லாரும் ஊகித்துக்கொள்ளலாம். கத்தரிகள் யுனைடெட் கிங்டம், (இங்க் லண்ட், ஸ்காட் லண்ட், ஐயர்லண்ட், இந்த மூன்று தேசங்களும் சேர்ந்து யுனைடெட் கிங்டம் என்று பெயர்) ஸ்வீடன், ஜெர்மெனி, யுனைடெட் ஸ்டேஸ் ஆகிய இந்த தேசங்களிலிருந்து வெகுவாய் ஏற்றுமதி யாகின்றன. பெரிய கத்தரிகள் யுனைடெட் ஸ்டேட்ஸைப்பார்க்கிலும் யுனைடெட் கிங்கடத்திலிருந்து அதிகமாகவும், சின்னக் கத்தரிகள் ஜெர்மெனியிலிருந்து ஏராளமாகவும் இந்தியாவுக்குவருகின்றன. கத்தரி ஸாமான் வ்யாபாரத்தில் ஒருமாதம், 2 மாதம், 3 மாதத்தவணை கொடுக்கப்படும். ரொக்கமானால் நூற்றுக்கு 2 வீதம் தள்ளிக் கொடுக்கப்படும். சில்லரையில்லாமல் மொத்தத்தில் வாங்கும் பொழுது 6 அங்குலக் கத்தரி டஜன் ஒன்றுக்கு ஜெர்மனியில் செய்யப்பட்டது ரூ 6-7-0ம், இங்க்லண்டில் செய்யப்பட்டது ரூ 5-13-0-ம், ஸ்வீடனில் செய்யப்பட்டது ரூ 6-ம் ஆகும். தையல்காரர்கள் உபயோகிக்கும் பெரிய கத்தரி ஒன்று ரூ 4-4-0-விலிருந்து ரூ 13-6-0 வரையில் விலையாயிருக்கிறது. சில்லறை பேரமானால் ஸ்த்ரீகள் உபயோகப்படுத்தும் கத்தரியின் விலை முக்கால் ரூபாயிலிருந்து ரூ 1-11-0-ம், சிறிதும் பெரிதுமல்லாது நடுத்தரமான ஸாதாரணக் கத்தரி ரூ. 2-1-0-ம், தையல்காரர்களின் கத்தரி ரூ 7-முதல் ரூ 15-வரைக்கும், ஆதும். ஏற்றுமதி இறக்குமதிக் கணக்குகளில் கத்திரியைப்பற்றிய விவரங்கள் தனியாய்க் குறிப்பிட்டிருக்கவில்லை. ஆகையால் அவைகளில் எவ்வளவு வ்யாபாரம் நடக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை.

PUDUKOTTA EXHIBITION.

புதுக்கோட்டைப் பொருள் காட்சி.

ஸ்ரீமார்த்தாண்ட கைத்தொழில், விவஸாய, கல்விப் பொருள்காட்சி வரும் டிஸம்பர்மீ 19௳ யன்று புதுக்கோட்டையில் நடைபெறும். இதில் ஸாமான்கள் காட்சியில்வைக்கப்படுவதோடு, விவஸாயம், கைத்தொழில், கல்வி ஆகிய இவை ஸம்பந்தமாகவும் போட்டிகள் நடத்தப்படும். இன்னம், ப்ரஸங்கங்கள், நிரூபண வேலைகள், கான்பரென்ஸுகள், முதலியவைகளும் பொருட்காட்சியோடுகூட நடத்தப்படும்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற ஜூலைமாஸத்தில் அடியில் கண்டவிவரப்படி 25-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

2	பாங்கி லேவாதேவி கம்பெனிகளும்.	... 5,65,000
8	இன்ஷூரன்ஸ் கம்பெனிகள்	... 52,00,000
10	வ்யாபாரக் கம்பெனிகள்	... 55,45,000
1	பருத்தி ப்ரெஸ் கம்பெனி	... 1,00,000
1	மரமறுக்கும் கம்பெனி	... 1,50,000
2	தேயிலையும் மற்ற தோட்டக் கம்பெனிகளும்	... 4,25,000
1	பனிக்கட்டி செய்யும் கம்பெனி	... 20,000
25		1,20,05,000

WEIGHTS AND MEASURES.

படிக்கல்களும் படிகளும்.

படிக்கல்களும் படிகளும் மாகாணத்துக்கு மாகாணமும் சிலவிடங்களில் ஜில்லாவுக்கு ஜில்லாவும் வித்யாஸமாயிருப்பதை ஒழித்து ஒழுங்கு படுத்துவதைப்பற்றி ஆராய்ச்சிசெய்வதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

The Educational World

வித்யாவிஷயப் பகுதி

MATTER AND ITS THREE STATES

BY

S. GANAPATI SUBRAMANYAM, M.A. L.T.,

பொருளும் அதன் மூன்று நிலைமைகளும்.

த்ரவப் பொருள்களையும் அவைகளின் விசேஷலக்ஷணங்களையும்பற்றி முன்னமே 1910-ம் வருஷத்து ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் சொல்லியிருக்கிறோம். த்ரவப் பொருள்களின் லக்ஷணங்களை இங்கே ஒருமிக்க எடுத்துச் சொல்லுவோம். த்ரவப்பொருள் அங்குமிங்கும் ஓடித் தாழ்ந்த மட்டத்தை யடைகிறது. அதற்கு ஸ்வதேவ உருவங்கிடையாது. அது எதில் வைக்கப்பட்டிருக்கிறதோ அதன் உருவத்தையே அடைகிறது. மேலும் அதைக்கையால் பிடித்துக்கொள்ள முடியாது. அதற்குக் குவிந்து நிற்கும் சக்தியில்லை. ஆனால் ஒரு செங்கல்லை எடுத்துக்கொள்ளுங்கள். அதை எங்கே வைத்தாலும் அது ஓடாமல் அதே இடத்தில் இருக்கிறதல்லவா? அதனுடைய உருவம் மாறுகிறதோ? இல்லை. ஆகவே, அதற்கு ஸ்வதேவ உருவம்உண்டு. இருக்கட்டும். அந்தக் கல்லை நன்றாய்ப் பொடி செய்து ஒரு பாத்ரத்தில் போட்டால் தண்ணீரைப்போல் ஸமமட்ட நிலைமை யடைகிறதோ? இல்லை. ஆனால் நடுவில் குவிந்து நிற்கிறது. ஆகவே, கல்லை த்ரவப்பொருளென்று சொல்லலாமோ? கூடவேகூடாது. அதை கெட்டிப்பொருள் என்றும், கன பதார்த்தமென்றும் சொல்லுகிறோம். கன பதார்த்தங்களின் விசேஷ லக்ஷணமென்ன? அவைகளின் உருவமும் அளவும் லகுவில்மாறா. இப்போது கன பதார்த்தங்களில் நீங்கள் எவ்வளவோ சொல்லலாமல்லவா? ஆம். இன்னும், நாம் ஒருகரண்டியில் கொஞ்சம் வெண்ணெயை எடுத்துக் கொள்ளுவோம். வெண்ணெய் என்னவிதமான பொருள்? கெட்டிப்பொருளா? த்ரவப்பொருளா? முன் சொன்ன குணங்களில் எவை பொருந்தியிருக்கின்றன என்று கவனியுங்கள். வெண்ணெய் கரண்டியின் ஓரங்களைத் தொடாமலும், நடுவில் குவிந்தும், ஸமமட்டத்தையடையாமலு மிருக்கிறது. ஆகவே இது கன பதார்த்தமாம். பிறகு, சிறிது நேரம் வெண்ணெயை அடுப்பில் காய்ச்சி என்னவாகிறதென் றுபார்ப்போம். முதலில் வெண்ணெய் இளகிக் கரண்டியில் பரவுகிறதல்லவா? பிறகு நெய்யாகி ஒரே மட்டத்தை யடைகிறது. ஆகவே உருகின நெய்யை த்ரவப்பொருள் என்றும், வெண்ணெயை கனப்பொருள் என்றும் சொல்லுகிறோம். பதார்த்தத்தில் வெண்ணெயும் நெய்யும் ஒன்றல்லவா? பின்னே ஒன்றை கன பதார்த்த மென்றும், மற்றொன்றை த்ரவபதார்த்தமென்றும் சொல்லுவானேன்? இரண்டும் கடைசியில் ஒன்றானாலும் உருவத்தில் வித்யாஸப்படுகிறபடியால் அப்படிச் சொல்லுகிறோம்.

உருகின நெய்யைக் கரண்டியிலே ஓரிடத்தில் ஆறவைத்துக் கரண்டியைக் கவிழுங்கள். என்னவாகிறது? நெய் கீழே விழுகிறதில்லை. காரணம் விளங்குகிறதோ? முன்னால் த்ரவமாக இருந்த நெய் இப்போது கெட்டிப் பதார்த்தமாகி விட்டதனாலேதான். அந்த கெட்டியான நெய்யின் உருவம் என்னமாயிருக்கிறது? கரண்டியைப்போலவே இருக்கிறது. ஏனென்றால் உருகின நெய் த்ரவப்பொருளானதால் ஸ்வமேதவ உருவம் அதற்கு இல்லை. பாத்ரத்தின் உருவமே அதன் உருவம்.

மேலும் அதே கரண்டியில் கொஞ்சம் ஈயத்தைப் போட்டு காய்ச்சுவோம். கெட்டியாயிருந்த ஈயம் உருகி த்ரவமாகிறது. உருகியான

தும் ஆறவைத்து என்ன வாகிறது கவனியுங்கள். உருகின ஈயம் கெட்டியாகிறது. இன்னும் அது கரண்டியினுடைய உருவத்தையே யடைகிறது. ஆகவே, நமக்கு எந்த உருவம் வேண்டுமென்று விரும்புகிறேமோ அந்த உருவமுடைய பாத்ரத்தில் த்ரவப்பொருளை ஊற்றினல் அது கெட்டியாகிற பக்ஷத்தில் அந்தப் பாத்ரத்தின் உருவத்தை யடையுமல்லவா? ஆம், வாஸ்தவந்தான். ஆகா! பாருங்கள். த்ரவப்பொருளுக்கு தனக்குத்தானே உருவமில்லாததினலேயல்லவா நமக்கு எந்த உருவம் வேண்டுமோ அதைச்செய்து கொள்ளுகிறேம். இப்படியிருப்பது எவ்வளவு அனுகூலம். இதனலேதான் வார்ப்பு என்று சொல்லபடுகிற ஸாமான்கள் செய்வது ஸாத்யமாகிறது. இல்லாவிட்டால் வார்ப்பே முடியாதே. இப்படி நம்மிஷ்டப்படி செய்து கொள்ளுவதற்குக் காரணம் த்ரவப்பொருளுக்கு தனக்குத் தானகவே உருவமில்லாதிருப்பதனலேயல்லவா?

கன பதார்த்தங்கள், த்ரவ பதார்த்தங்கள் இவைகளின் விசேஷ லக்ஷணங்களைப் பற்றிச் சொன்னேம். இப்போது மூன்ருவதாகிய வாயு பதார்த்தங்களின் விசேஷ லக்ஷணங்களைப் பற்றி கவனிப்போம். எல்லாரும் 'புட்பால்' அல்லது கால் பந்து பார்த்திருப்பீர்கள். புட்பால் எதனல் செய்யப்படுகிறது? ஒரு விதமான பாடம் செய்த தோலினல் மேற்புறமும், ரப்பரால் உள்புறமும் செய்யப்படுகிறது. அதற்குள் என்ன இருக்கிறது? அதற்குள் காற்று இருக்கிறது. காற்று அதற்குள் ஸாதாரணமாகவே இருக்கிறதா? இல்லை. அதற்குள் காற்றை ஒருவித குழாயினல் நிரப்புகிருர்களல்லவா? நிரப்பிவிட்டு பிற்பாடு என்ன செய்கிருர்கள்? ஒரு கயிற்றைப் போட்டு காற்றைச் செலுத்தின வாயை கட்டுகிருர்கள். ஏன்? இல்லாவிட்டால் காற்று வெளியே போய்விடும். வெளியே போய்விடுமென்று எப்படித் தெரியும்; காற்றுதான் கண்ணுக்குத் தெரியவில்லையே! ஆம், வாஸ்தவந்தான். கயிறுகட்டாமல் போனல் ஒருவித சப்தத்துடன் ஒன்று வெளிப்படுவதைக் கேட்கிறேம். அது காற்ருகத்தான் இருக்கவேண்டும். இது இருக்கட்டும். இப்போது அதே கால்பந்தில் கொஞ்சம் ஜலம் வார்த்தால் அந்த ஜலம் எப்படிக் காணப்படும்? ஜலத்தின் மேல்மட்டமானது ஸமமாய்க் காணப்படும். ஜலம் மேலே கிளப்புகிறதோ இல்லை. ஆனல் காற்றை யடைக்கும் போது அது மேலே கிளம்புகிறதா இல்லையா? ஆம், கிளம்புகிறது. கிளம்பாதபோனல் காற்று எப்படி நாலாபக்கத்திலும் வ்யாபித்து பந்தை உருண்டை வடிவாகச் செய்யும்? இன்னமொரு உதாரணம் கவனியுங்கள்; பைஸிகில் ரப்பர் குழாய்களில் காற்று நிரப்புவதை எல்லாரும் பார்த்திருக்கிறீர்களல்லவா? காற்றை ரப்பரில் ஒரு த்வாரத்தின் வழியாய் அடைக்கிருர்கள். ஆனல் அது குழாய் முழுதும்செல்லுகிறது, பாருங்கள். அதே த்வாரத்தின் வழியாய் கொஞ்சம் ஜலம் ஊற்றினல் அது எங்கிலும் பரவுமோ? பரவாது. ஆனல் அது ஸமமட்டத்தையே யடையும். ஆகையால் த்ரவப்பொருளுக்கும் வாயுப் பொருளுக்கும் வித்யாஸமென்ன? த்ரவ பதார்த்தங்கள் ஸம பரப்புள்ளவை; வாயு பதார்த்தங்களோ எங்கும் பரவும் தன்மையுள்ளவை. எப்போது எங்கே பார்த்தாலும் பரவுகிறதோ, அப்போது அதற்கு ஏதேனும் உருவம் இருக்குமோ? இருக்காது. நீங்கள் எல்லாரும் வீட்டில் அடுப்புப் புகையைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? புகை என்ன செய்கிறது? புகைப்போக்கி இருந்தால் மேலே கிளம்பிப் போய்விடுகிறது; மேலும் கொஞ்சம் புகையும் நாலாபக்கத்திலும் பரவுகிறது; புகைப்போக்கி யில்லாமற்போனல்

நாலாபக்கத்திலும் புகை பரவுவதை நீங்கள் பார்த்திருக்கலாமே. வாயு பதார்த்தங்களெல்லாம் இந்தப் புகையைப்போல வென்றே நாம் சொல்லலாம். அவைகளுக்கு நாலாபக்கத்திலும் வ்யாபிக்கும் குணம் உண்டு. பதார்த்தங்களை மூன்று பெரும் பிரிவாகப் பிரிக்கலாமென்று சொன்னோம். அப்படிப் பிரிப்பதற்கு காரணங்களும் சொல்லியிருக்கிறோம். ஆகவே ஒரு பதார்த்தத்தைக் கொடுத்து இது இன்ன பதார்த்த மென்று சொல்லுங்களென்றால் சொல்லலாமல்லவா? ஒவ்வொரு பாகத்திற்கும் அநேக லக்ஷணங்கள் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் அவைகளில் ஒவ்வொன்றிற்கும் ஒரு விசேஷ லக்ஷணம் இருக்கிறது. அந்த விசேஷ லக்ஷணத்தாலேயே இது எந்த பாகம் என்று சொல்லி விடலாம்:—

கன பதார்த்தத்திற்கு தானாகவே உருவமும், அளவுமுண்டு. த்ரவ பதார்த்தங்கள் ஸமபரப்புள்ளவை. மேல் சொன்ன மூன்று லக்ஷணங்களில் ஒன்று மில்லாமற்போனால் வாயு பதார்த்தமாம்.

எஸ். கணபதி ஸுப்ரமணியம்.

TRAINING OF TEACHERS.

உபாத்யாயர்களுக்கு ட்ரேய்னிங்.

சென்ற ஜூன் மாஸம் வித்யா டிரெக்டர், லோகல்போர்டுகளுடைய மானேஜ்மெண்டில் எலிமெண்டரி ஸ்கூல்கள் அதிகம் ஸ்தாபிக்கப் பட்டிருப்பதால் அதிக உபாத்யாயர்கள் தேவையாயிருக்கும் என்பதை உத்தேசித்து சென்ற வருஷம் அதிக உபாத்யாயர்கள் ட்ரெய்னிங் ஸ்கூலில் சேர்க்கப்பட்டாலும் இன்னம் உபாத்யாயர்கள் அதிகம் தேவையாயிருக்குமென்றும், ஆகையால் இந்த வருஷம் சில கவர்ன்மெண்ட் ட்ரெய்னிங் ஸ்கூல்களில் எலிமெண்டரி லோயர் க்ரேடில் 695-உபாத்யாயர்களைச் சேர்த்து பயிற்ற வேண்டுமென்றும், நெல்லூர் கவர்ன்மெண்டு ட்ரெய்னிங் ஸ்கூலில் எலிமெண்டரி ஹயர் க்ரேடில் 40 மாணவர்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், கோதாவரிஜில்லா அமலாபுரத்தில் ஒரு டெம்பரரி அடிஷனல் ட்ரெய்னிங் ஸ்கூல் ஸ்தாபிக்கவேண்டும் என்றும், ப்ரேரித்திருந்தார். கவர்ன்மெண்டார் அந்த ப்ரேரணைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தெரிந்தெடுக்கப்பட்ட கவர்ன்மெண்ட் ட்ரெய்னிங் ஸ்கூல்களில் எலிமெண்டரி லோயர் க்ரேடில் 695 மாணவர்களையும், எலிமெண்டரி ஹயர் க்ரேடில் 40 மாணவர்களையும், 22-மாஸம் போதனு முறையில் பயிலுவதற்குச் சேர்த்துக்கொள்ளும்படிக்கும், அமலாபுரத்தில் டெம்பரரி ட்ரெய்னிங் ஸ்கூல் ஒன்று ஸ்தாபித்து அதில் 40 லோயர் எலிமெண்டரி க்ரேட் மாணவர்களையும் 40 ஹயர் எலிமெண்டரி மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளும் படிக்கும் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

SCHOOL MASTERS AND PARENTS.

உபாத்யாயர்களும் பெற்றோர்களும்.

வடக்கே ராவில்பிண்டி என்னும் பட்டணத்தில் உள்ள 'கவர்ன்மெண்டு ச்ரேஷ்ட நிதி ஹைஸ்கூல்' ஹெட்மாஸ்டர் அந்த ஸ்கூலில் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்களை அந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஒரு நாள் வந்து தங்கள் பிள்ளைகளின் படிப்பு முதலியவை விஷயமாக உபாத்யாயர்களுடன்கலந்துபேசிப்போகும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே 166 பிள்ளைகளின் பெற்றோர்கள் பள்ளிக்கூடத்துக்கு வந்திருந்து பின்வரும் விஷயங்களைப் பற்றி உபாத்யாயர்களோடு கலந்து பேசினார்கள். அவைகளாவன.—

பிள்ளைகளின் படிப்பு, ஸன்மார்க்க நிலை, தேகஸ்திதி, பிள்ளைகள் காலாகாலத்தில் பள்ளிக்கூடத்துக்கு வருவது, அவர்களுடைய நடத்தை, மாணவர்கள் காலையில் பள்ளிக்கூடத்துக்கு வருமுன் ஸ்நானம்செய்து ஏதா

வது கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு வருவதின் அவச்யம், மாணவர்கள் ஏதாவதொருவித தேகப்பயிற்சி செய்யும்படி பெற்றோர்கள் பார்த்துக்கொள்வது, பிள்ளைகளின் கண்ணைப்பற்றி ஜாக்ரதை யெடுத்துக்கொள்ளுதல்.

பிள்ளைகள் வீட்டில் வாசிப்பதற்கு நல்ல காற்ரோட்டமும் வெளிச்சமும் உள்ள ஒரு தனி அறை ஒழித்துக்கொடுக்க வேண்டுமென்றும், பிள்ளைகள் வாசிக்கும் போது மேஜையின் மேல் ரொம்பவும் சாயாதபடியும், புஸ்தகத்தைக் கண்ணுக்கு ரொம்ப ஸமீபத்தில் வைத்துக்கொண்டு வாசிக்காதபடியும், பார்த்துக்கொள்வதோடு, கடைகளில் கெடுதலான தின்பண்டங்களை பிள்ளைகள் வாங்கித்தின்னுதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், பெற்ரோர்கள் அடிககடி உபாத்யாயர்களிடம் தங்கள் பிள்ளைகளைப்பற்றி வேண்டிய விஷயங்களைத்தெரிந்து கொண்டு பிளளைகள் ஒழுங்காய் இருக்கும்படி செய்வதில் உபாத்யாயர்களுக்கு உதவியாயிருக்க வேண்டும் என்றும், உபாத்யாயர்கள் சொன்னார்கள். பெற்றோர்கள் இப்படி உபாத்யாயர்களைக்கண்டு கலந்து பேசினதில் ரொம்ப த்ருப்தியடைந்ததாகத் தெரிகிறது.

இந்த மாதிரி நமது ராஜதானியிலுள்ள பள்ளிக்கூடங்களிலும் செய்தால் ரொம்ப நன்மை ஏற்படும் என்பதில் ஸந்தேகமில்லை.

HELPING THE POOR PUPILS.

எளிய மாணவர்களுக்கு உதவி.

கவர்ன்மெண்ட் எலிமெண்டரி பாடசாலைகளில் உள்ள ஏழை மாணவர்களுக்கும் தாழ்ந்த ஜாதிமாணவர்களுக்கும் புஸ்தகம், ஸ்லேட், எழுதுங்கருவிகள் ஆகிய இவைகளை ஸப்ளை செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் 6000 ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இந்த ஸாமான்கள் எப்போதும் பள்ளிக்கூடத்துக்கு ஸொந்தமாகவே இருக்கும். இவைகளை மாணவர்கள் பள்ளிக்கூட நேரங்களில் தான் உபயோகப்படுத்தலாம். அவைகளைப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே எடுத்துக்கொண்டு போகக்கூடாது. பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் அந்த ஸாமான்களுக்கு ஒரு தனி ஜாப்தா தயார் செய்து அதில் ஸாமான்கள் எப்போது ஸப்ளை செய்யப்பட்டன என்பதைக் குறிப்பிட்டு வைக்கவேண்டும்.

PACHAIYAPPA'S HOSTEL.

பச்சையப்பன் காலேஜ் ஹோஸ்டல்.

சென்னை பச்சையப்பன் காலேஜுக்குசேத்துப்பட்டில் ஒரு ஹோஸ்டல் கட்டுவதற்காக ஆகும் செலவில் பாதி அல்லது 99,000 ரூபாய்க்கு மேற்படாத தொகை கவர்ன்மெண்டார் க்ராண்டாகக் கொடுப்பார்கள்.

A DHARMA PATASALA.

ஒரு தர்ம பாடசாலை.

பங்களூரில் ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்மஸ்வாமி தர்ம பாடசாலை யென்று ஒரு பாடசாலையிருக்கிறது. அதில் ஏழைப்பிள்ளைகளுக்கு இங்க்லீஷ் லோயர் ஸெகண்டரி பரீக்ஷைமுடிய இனாமாகக் கல்விகற்பித்து வருகிறார்கள். அதனோடு தச்சு வேலையும், பிரம்பு வேலையும் கற்றுக்கொடுத்து சென்னை டெக்னிகல்பரீக்ஷைகளில் எலிமெண்டரி க்ரேடுக்குத் தயாராக்கி விடுகிறார்கள்.

A TECHNOLOGICAL INSTITUTE.

ஒரு தொழில் கல்விச்சாலை.

வங்காள கவர்ன்மெண்டார் கல்கத்தாவில் ஒரு தொழில்கல்விச்சாலை ஸ்தாபிக்கப்போகிறார்கள். அந்தக் கல்விச்சாலையில், இஞ்ஜினீயரிங், பின்னல், நெசவு, ரஸாயன வேலைகள் அச்சடித்தல், வ்யாபாரத் தொழில், ஸ்த்ரீகளுக்கு உடைதயார் செய்தல், ஆகிய இவைகள் எல்லாம் கற்பிக்கப்படுமாம்.

COMPULSORY EDUCATION IN MYSORE.

மைஸூரில் சட்டாயப் படிப்பு.

சென்ற ஸெப்டம்பர் மாஸம் 15-தேதி மைஸூர் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் கூடின போதுகட்டாய எலிமெண்டரி கல்விமசோதா சட்டமாகச் செய்யப்பட்டது.

MRS. ANNIE BESANT.

மிஸேஸ் அனி பெஸன்ட்.

The Legal World.
வ்யவகாரப் பகுதி.

RIGHT OF GUARDIANSHIP.

கார்டியின்ஷிப்புக்கு பாத்யதை.

ஒருவர் தமது பிள்ளைகளின் கார்டியன்ஷிப்பை அதாவது பிள்ளைகளின் க்ஷேமத்தைப் பற்றி கவனித்து வருவதாகிய பாத்யதையை பிறரிடம் கொடுத்து விட்டால், அப்படி பாத்யதையைப் பிறரிடம் கொடுத்ததாகிய ஏற்பாட்டை எப்பொழுது, என்ன காரணங்களின் மேல் ரத்துசெய்யலாம் என்பதைப்பற்றி இந்த மாஸம் ஹைகோர்ட்டில் ஒரு தீர்மானம் சொல்லப்பட்டது. தியஸாபிகல் ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டாகிய மிஸஸ் அனி பெஸண்டுக்கும் மிஸ்டர் நாராயணய்யாவுக்கும் மிஸ்டர் நாராயணய்யாவின் இரண்டு புத்ரர்களினுடைய கார்டியன்ஷிப்பைப்பற்றி நடந்த வழக்கில் இந்தத் தீர்மானம் சொல்லப்பட்டது. வழக்கின் விவரம் சுருக்கமாய்ப் பின் வருமாறு.

வாதி மிஸ்டர் நாராயணய்யா தாசில்தாராயிருந்து பென்ஷன்பெற்றவர். அவர் 1882-ம் வருஷம் முதல் தியஸாபிகல் ஸங்கத்தில் ஒரு மெம்பராக இருந்தார். 1908-ம் வருஷத்தில் மிஸஸ் பெஸண்ட் எஸாடரிக் ஸெக்ஷன் என்று சொல்லப்படும் தியஸாபிகல் ஸங்கத்தில் ஒரு ரகஸயமான பிரிவில் அவரை ஒரு உதவி ஸெக்ரெடரியாக நியமித்திருந்தார். அதன்மேல் மிஸ்டர் நாராயணய்யா தமது குடும்பத்தோடு அடையாற்றில் ஒருவீட்டில் வாடகையில்லாமல் வஸித்துவந்தார். 1909-ம் வருஷத்தில் அவர் தமது பிள்ளைகளை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் நிறுத்தி, அடையாற்றில் மிஸ்டர் லெட்பீட்டரிடமும் இன்னம் சிலரிடமும் இனமாய்க் கல்விகற்று வரும்படி விட்டிருந்தார். அவர்களில் மூத்தவன் பெயர் க்ருஷ்ணமூர்த்தி. இரண்டாவது பையன் பெயர் நித்யானந்தன்.

அந்த வருஷக்கடைசியில் மிஸஸ் அனி பெஸண்டுக்கு அந்தப் பையன்கள் அறிமுகமானார்கள். அதற்கடுத்த வருஷம் அதாவது 1910-ம் வருஷம் மார்ச்சுமாஸத்தில் மிஸ்டர் நாராயணய்யா தமது புத்ரர்களை மிஸஸ் அனி பெஸண்ட் வசம் ஒப்புவித்து, அவரே கார்டியனாக இருக்கும்படி ஏற்பாடுசெய்து, அந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கொண்டவராய் அது விவரித்து எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கையெழுத்திட்டார். அதில் மிஸஸ் பெஸண்டே அந்தப் பிள்ளைகளுக்கு கார்டியனாக இருக்கவேண்டுமென்றும், கார்டியன்ஷிப்பை அவச்யம் நேர்ந்தால் வாதிக்கன்றி வேறொருவருக்கும் மாற்றக் கூடாதென்றும், வாதிக்கு முன்னால் மிஸஸ் பெஸண்டு இறந்துபோனால் பிள்ளைகள் வாதிவசம் சேரவேண்டுமென்றும், வாதியும் மிஸஸ் பெஸண்டும் இறந்துபோன பிறகும் பிள்ளைகள் 25 வயதுக்குள்பட்ட மைனர்களாக இருந்தால், வாதி தமது உயிலில் கார்டியனாக நியமிக்கிறவர்கள் வசம் சேரவேண்டுமென்றும், கண்டிருந்தது. மேலும் பிள்ளைகள் 25-வயதாகிறவரையில் அவர்களுடைய ஸம்ரக்ஷணைக்கும் படிப்புக்கும் ஆகும் செலவை ப்ரதிவாதி பொறுத்துக்கொள்வதாய் நிச்சயத்திருப்பதாகவும், அதற்காக ப்ரதிவாதி அவருடைய உயிலில் வேண்டிய ஏற்பாடு செய்திருப்பதாகவும் வாதி அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார். பிறகு 1910-ம் வருஷம் தமது மூத்த பிள்ளையும் மிஸ்டர் லெட்பீட்டரும் ஸம்பந்தப்பட்ட ஒரு அஸங்க்யமான ஸம்பவத்தை தாம் பார்த்ததாகவும், அதற்கு அடுத்த வரு

ஷம் அதுமாதிரியான வேறொரு ஸம்பவத்தைப் பிறர்கண்டு தம்மிடம் சொன்னதாகவும் வாதி சொல்லி வந்தார். பிறகு வாதி 31-12-1911-ல் இந்த ஸம்பவங்களைப்பற்றி மிஸஸ் வான்ஹூக் என்பவரிடம் சொல்லி, தமது பிள்ளைகளை மிஸ்டர் லெட்பீட்டரிடம் சேர்ந்து வஸிக்காமல் பிரித்து விடவேண்டுமென்றும், அதற்குக் காரணத்தை மிஸஸ் வான்ஹூக்கினிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்படிக்கும் ப்ரதிவாதியினிடம் சொல்லிக்கொண்டார். ப்ரதிவாதி பிள்ளைகளை மிஸ்டர் லெட்பீட்டரிடமிருந்து பிரிக்க ஸம்மதிக்கவில்லை. பிறகு வாதி அடையாற்றில் சிலரிடம் இதைப்பற்றி குறை கூறிக்கொண்டார். 1912-ம் ஹு ஜனவரிமீ 19-தேதி யன்று வாதி, ப்ரதிவாதிகளும் இன்னம் சிலரும் ஒன்று கூடிப்பேசினபோது அந்தப் பேச்சுவிஷயமாக மிஸஸ் பெஸண்டால் எடுக்கப்பட்ட ஒரு குறிப்பில், வாதி தமது பிள்ளைகளை ப்ரதிவாதி இங்லண்டுக்குக் கூட்டிக்கொண்டுபோக ஸம்மதித் திருப்பதாகவும், ப்ரதிவாதி பிள்ளைகளை மிஸ்டர் லெட்பீடரிடமிருந்து பிரித்துவைக்க ஸம்மதித் திருப்பதாகவும் கண்டிருக்கிறது.

சில நாட்களுக்குப் பிறகு ப்ரதிவாதி பிள்ளைகளை காசிக்குக் கூட்டிக்கொண்டுபோய், பிறகு இங்க்லண்டுக்கு ப்ரயாணமாகி, நடுவழியில் ஸிஸிலியில் (ஸிஸிலி என்பது இடலிதேசத்துக்குத் தென்புறத்திலுள்ள ஒருதீவு) பிள்ளைகளை லெட்பீட்டரிடமும் இன்னம் சிலரிடம் விட்டுவிட்டு இங்லண்டுக்குப் போய்ச் சேர்ந்தார்.

இதன் மத்தியில் மிஸ்டர் லெட்பீட்டர்மேல் சாட்டப்பட்ட குற்றத்தைப்பற்றி வாதி விசாரித்து வருகிறதாக ப்ரதிவாதிக்குத் தெரியவே, ப்ரதிவாதி வாதியை உதவி கார்யதர்சிவேலையிலிருந்து நீக்கிவிட்டார். பிறகு 1912-ம் வருஷம் ஜூலைமாஸத்தில் வாதி தாம் ப்ரதிவாதியினிடம் ஒப்புவித்திருந்த கார்டியன்ஷிப்பை ரத்து செய்துவிட்டதாகவும், பிள்ளைகளைத் தம் வசம் ஒப்புவிக்கும்படிக்கும், தெரிவித்து ப்ரதிவாதிக்கு ஒரு கடிதம் எழுதினர். 1912-ம் வருஷம் அக்டோபர் மாஸத்தில் ப்ரதிவாதி பையன்களை இங்லண்டில் விட்டுவிட்டு அடையாற்றிற்குத் திரும்பிவந்து விட்டார். அதன் மேல் வாதி இந்த வ்யாஜ்யத்தைத் தொடங்கினர். முதலில் இதை விசாரித்த மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வல் வாதிக்கு ஸாதகமாக தீர்ப்புக் கொடுத்தார். அந்தத் தீர்ப்பின் ஸாராம்சம் பின்வருமாறு.

ஒரு தகப்பனுக்கு தனது பிள்ளைகளினுடைய ஸம்ரக்ஷணை, கல்வி, வளர்ப்பு ஆகிய இவைகளுக்காகச் செய்ய வேண்டிய சட்ட ஸம்பந்தமானவும் ஸன்மார்க்க ஸம்பந்தமானவுமான சில கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளைச் செய்வதற்காக அவர் தமது பிள்ளைகளை தம்வசத்தில் வைத்திருக்க பாத்யதையுண்டு. அந்தக் கடமைகளை விட்டு விடவாவது, அந்தக் கடமைகளைச் செய்வதற்காக வேண்டிய பாத்யதையை விட்டுவிடவாவது முடியாது. பிள்ளைகளின் கார்டியன்ஷிப்பை அவர் பிறர்வசம் ஒப்புவித்திருந்தால் அந்த கார்டியன்ஷிப்பைத்திரும்பவும் பெறலாம். அதாவது பிறர்வசம் விட்டிருந்த பிள்ளைகளைத் தமதுவசம் பெற்றுக்கொள்ள பாத்யம் உண்டு இதற்கு விரோதமாகச் செய்யப்படும் எந்த உடன்படிக்கையும் செல்லாது.

ஒரு தகப்பனர் தமது பிள்ளைகளைப் பிறர்வசம் விட்டிருந்தால், பிள்ளைகளுக்கு இன்ன கல்வி கொடுக்கக்கூடாதென்று சொல்லவும், துன்மார்க்கக் கொள்கைகள் உள்ளவர் ஒருவரிடம் மைனர்கள் சேரக்கூடாதென்று சொல்லவும் அதிகாரம் உண்டு. அப்படியவர் சொல்லுகிறபடி நடைபெறாவிட்டால், அவர் தமது பிள்ளைகளை தமது வசம் அடைய பாத்யமுண்டு. பிள்ளைகளுக்கு கார்டியனாக நியமிக்கப்பட்ட

ஒருவர் பிள்ளைகளுக்காக ரொம்ப பணம் செல வழித்திருந்தால் அதனுல் அந்த கார்டியன் பிள்ளைகளை தமது வசத்தில் வைத்துக் கொள்ள பாத்யதை ஏற்படாது. தமது பிள்ளை களுக்கு இன்ன கல்வியும் பயிற்சியுந்தான் ஏற் றதென்று சொல்வதற்கு அவர்களுடைய தகப் பனுரே தகுதியானவர். ஒரு அந்யதேசத்தி லும், பிள்ளைகளினுடைய இன ஜனத்தாருக்கு அந்யர்களாகவும் ஆகக்கூடிய ஒரு ஜன ஸமூக த்திலும் இருந்து வளர்வதைவிட இயற்கை யாய் பிள்ளைகள் இருந்த நிலைமையிலேயே யிருப்பது பிள்ளைகளுடைய ஸுகத்துக்கும் நற்பயிற்சிக்கும் ஸாதகமானது என்று தந்தை நினைப்பதை ஆக்ஷேபணை சொல்வதற் கில்லை. இந்தக்கேஸில் மைனர்கள் ப்ரிட்டிஷ் இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்களாய் படிப் புக்காக இங்லண்டில் தற்காலத்துக்கு வஸித் துக் கொண்டிருக்கிருர்கள்.

மேலும், பிள்ளைகளை கோர்ட்டின் அதிகார ப்ரதேசத்துக்கு அதாவது ஜூரிஸ்டிக்ஷ னுக்கு அப்பால் அழைத்து போனபோது பேசின உடன்படிக்கை ஸரிவர நிறை வேற வில்லை யென்று தோன்றுகிறது. ஆகை யால் பிள்ளைகள் யார் வசம் இருக்கவேண்டிய தென்பதைப்பற்றி தீர்த்து உத்தரவு செய்ய ஹைகோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. மேலும் அந்த உத்தரவை நிறைவேற்ற வேண்டிய தைச் செய்யகோர்ட்டார் கடமைப்பட்டிருக்கி ருர்கள்.

இந்தத் தீர்ப்பின்மேல் மிஸஸ் பெஸண்ட் அப்பீல் செய்தார். அதிகார எல்லைக்கு அப் புறத்திலிருக்கிற ஒரு மைனர் விஷயமாய் விசாரிக்க ஹைகோர்ட்டுக்கு அதிகாரமில்லை யென்று வழக்காடினுர். இந்த அப்பீலை விசா ரித்த சீப் ஜஸ்டிஸ் ஆர்னல்டு ஒய்ட்டும், ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்டும் பின் வருமாறு தீர்மா னித்தார்கள்.

ஒரு மைனர் ஒரு ஹைகோர்ட்டின் அதிகார எல்லைக்கு அப்புறத்திலும் அந்த மைனரின் கார்டியன் அதிகார எல்லைக்குள்பட்டும் வஸிக் கிருர்கள். மைனர் வஸிக்கும் இடத்திலுள்ள கோர்ட்டுகள் இந்த ஹைகோர்ட்டின் தீர்ப்பை நிறைவேற்றுவதில் உதவி செய்யும் என்று ஹைகோர்ட்டு நினைக்க ஹேதுவிருந்தால், மை னரைக் கொண்டுவந்து விடும்படி கார்டியனைக் கட்டாயப்படுத்த ஹைகோர்ட்டுக்கு அதிகார முண்டு. ஹைகோர்ட்டுக்குள்ள இந்த அதி காரத்தைப்பற்றி இப்படித் தீர்ப்புச் சொல்லி விட்டு, மிஸஸ் பெஸண்டின் அப்பீலைப் பின் வரும் காரணங்களை முன்னிட்டுத் தள்ளிவிட் டார்கள்.

ஒரு தகப்பனுர் தமது குழந்தைகளுக்கு ந்யாயமான கார்டியனுவார். குழந்தைகளைத் தகப்பனுரிடம் விடுவது குழந்தைகளின் நன் மைக்கு விரோதமானது என்று கோர்ட்டுக்கு த்ருப்தியாக ஏற்பட்டாலொழிய, தகப்பனுரு க்குள்ள இந்த பாத்யதை அவருக்குக் கிடை யாது என்று கோர்ட்டுகள் தீர்மானிப்பது ந்யாயமல்ல. இது விஷயத்தில் இங்லண்டி லுள்ள சட்டமும் இந்தியாவிலுள்ள சட்டம் ஒரே மாதிரியாக இருக்கின்றன.

தமது கார்டியன்ஷிப் பாத்யதையைப் பிறர் வசம் விட்டிருந்த ஒரு தகப்பனுர், அந்தப் பிறர் அந்த பாத்யதையை ஸரிவர உபயோகிக் காது மூன்ருவது மனிதரிடம் விட்டிருந்ததாக நம்ப இடமிருந்தால், தகப்பனுர் அந்த பாத் யதையைத் திரும்ப வாங்கிக் கொள்ளலாம். அதாவது பிள்ளைகளை தமது வசம் திரும்ப அடையலாம். பிறரிடம் விட்டிருந்த கார்டியன் ஷிப் பாத்யதையைத் திரும்பிப்பெறுவதற்கு, அந்த பாத்யதையானது ஸரிவர உபயோகிக் கப்படவில்லை என்று நம்பத்தகுந்த காரணங் கள் இருந்தால் போதும்.

இந்தக்கேஸ் முதல் கோர்ட்டிலும் அப்பீல்

கோர்ட்டிலும் மிஸஸ் பெஸண்டு வக்கீல் இல்லாமல் தானுகவே வாதித்தார். இது இந்தக் கேஸில் ஒருவிசேஷம். முன் முதல் கோர்ட்டில் வாதி ப்ரதிவாதியின் செலவையும் கொடுக்க வேண்டும் என்று சொன்னதை அப்பீல் கோர்ட்டில் மாற்றிவிட்டார்கள்.

PROMISSORY NOTE BY AN AGENT.

ஒரு ஏஜண்ட் எழுதிக்கொடுத்த ப்ராமிஸரி நோட்

ஒருவரிடம் ஒரு ஏஜண்ட் இருக்கிறுனென்று வைத்துகொள்வோம். அவன் ஒரு ப்ராமிஸரி நோட் எழுதிக்கொடுக்கிறுன். ப்ரோநோட் வாசகத்தின் மத்தியில் அவன் இன்னுருடைய ஏஜண்டென்று கண்டிருக்கிறது. ஆனுல் ஸ்டாம்பில்போடும் கையெழுத்தின் கீழ் ஏஜண்டென்றில்லை. இந்தமாதிரியான ப்ரோநோட்டில் கடனுக்கு அவன் ஸொந்தத்தில் பாத்யப்பட்டவனு, பாத்யப்படாதவனு, என்ற விஷயமான அப்பீல் ஒன்று ஸமீபத்தில் மதுரையிலிருந்து ஹைகோர்ட் புல்பெஞ்ச் முன் விசாரணைக்கு வந்தது.

மதுரையில் இந்த வ்யவகாரத்தை விசாரித்த டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப்பும் ஜட்ஜும் ஏஜண்ட் ஸொந்தத்தில் கடனுக்கு பாத்யப்பட்டவனென்று தீர்ப்பு சொன்னுர்கள். ஹைகோர்ட்டுக்கு அப்பீல் வந்தபொழுது, அதைக்கேட்ட ஜட்ஜ்களாகிய கனம் ஸதாசிவஐயரும் ஸுந்தர ஐயரும் அபிப்ராயப்பேதப்பட்டார்கள். ஸுந்தரஐயர் ப்ரோநோட்டின் வாசக ஸந்தர்ப்பத்தில் இன்னுருடைய ஏஜெண்டு எனறு கண்டிருக்கிறது போதும்; ஸ்டாம்பின்மேல் போடப்படும் கையெழுத்துக்குக் கீழே ஏஜண்ட் என்று மறுபடியும் குறிக்க வேண்டுவதில்லை; ஆகையால் கடன் ஸொந்தத்தில்கையெழுத்துப் போட்டவரை பாதிக்காது; கடனுக்கு உத்தரவாதி, யாருக்காக அவர் ஏஜண்டோ அவர்தானென்று அபிப்ராயப்பட்டார். ஆனுல் ஸதாசிவ ஐயர் ப்ராமிஸரி நோட் மத்தியில் ஏஜண்ட் என்று கண்டிருப்பதுமட்டுமே ஏஜண்டாக கையெழுத்திட்டிருக்கும் எண்ணத்தை வெளிப்படுத்தாது; கடனுக்கு ஏஜண்ட் ஸொந்தத்தில் உத்தரவாதி என்று அபிப்ராயப்பட்டார்.

இரண்டு ஜட்ஜ்களுக்குள் அபிப்ராய பேதமுண்டானதால் இந்தக்கேஸ் புல்பெஞ்ச்க்கு 'ரிபெர்' செய்யப்பட்டது. இங்கே ஜட்ஜ்கள் ஸதாசிவஐயர் அபிப்ராயத்தை தழுவினுர்கள் ஆகையால் மதுரை டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப், ஜட்ஜ் இவர்களின் தீர்மானம் காயமாயிற்று. அதாவது ஏஜண்ட் ஸொந்தத்தில் கடனுக்கு உத்தரவாதியாவான். இந்த தீர்மானத்தை நாட்டுக்கோட்டை செட்டிகளும் அவர்களோடு பத்து வரவு செய்யும் மற்றவர்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது.

JOINT FAMILY.

அவிபக்த குடும்பம்.

ஒரு குடும்பத்திலுள்ள ஸகோதரர்கள் அநேகவருஷ காலமாய் தங்களுடைய பூர்விக வீட்டைத் தவிர வேறு யாதொரு ஸொத்தும் அவர்களுக்குப் பொதுவாக இல்லாமல் இருந்தார்கள். ஆனுல் அந்த வீட்டில் அவர்கள் தனித்தனியாய்க் குடியிருந்து சமையல் சாப்பாடு வரும்படி செலவு ஆகிய இவைகளை தனியாக வைத்து வந்தார்கள். என்றுல், அவர்கள் அவிப்க்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகமாட்டார்கள். அவர்களில் ஒரு ஸகோதரர் பூர்விக ஸொத்தில் தமக்குள்ள பங்கை தமது தூர பந்து ஒருவருக்குச் சேரும்படி உயிலெழுதினுல் அந்த ஏற்பாடு சட்டப்படி செலாவணியாகக் கூடியது. 8. ப. வீ. ரி. 99.

The Sanitary World

ஸுகாதாரப் பகுதி.

IMPROVEMENTS IN VILLAGE SANITATION

BY

M. VAIDYANATHAN.

க்ராம ஸுகாதாரத்தில் சீர்திருத்தங்கள்.

க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக் குறைகளும் அவைகளை நிவர்த்திக்கும் வழிகளும்.

க்ராமங்களிலுள்ளவர்களின் ஒற்றுமைக் குறைவாலும் அறிவீனத்தாலுமே ஸுகாதாரக்குறைகள் நேருகின்றன. அவைகளைக் கண்டறிந்து நிவர்த்திக்க வழி தேடவேண்டும். க்ராம ஸுகாதாரங்களை கவனிக்கவும், சிறு வ்யவகாரங்களைத் தீர்த்துவைக்கவும், க்ராமங்கள் தோறும் பஞ்சாயத்து ஸபை நியமிப்பது அச்யம். அந்த பஞ்சாயத்து ஸபைகளும்க்ராம ஜனங்களும் உணர்வுடன் க்ராம ஸுகர்தாரக் குறைகளை நிவர்த்திக்கவேண்டும்.

ஸுகாதாரங்களுக்கான முக்ய உபகரணங்கள்:—(1) காற்று (2) ஜலம் (3) இருப்பிடம்.

காற்று(1) :—நாம் உட்கொள்ளுங் காற்று சுத்தமானதா யிருக்கவேண்டிய தவச்யம். க்ராமங்களுக்கு இயற்கையாகவே நல்ல காற்று கிடைக்க வழியிருந்தும், அறிவீனத்தால் பரிசுத்தமான காற்றை அநுபவிப்பதில்லை, அநேக வீடுகளுக்கு ஜன்னலே யில்லை. சில வீடுகளுக்கு ஜன்னல் இருந்தும் நல்ல காற்று உள்ளே செல்ல மார்க்க மில்லாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஜன்னல்களை ஒரு பக்கத்தில் மாத்ரம் வைத்துக் கட்டுகிறார்கள். அந்த ஜன்னல்களால் அதிக ப்ரயோஜனமில்லை. ஜன்னல்களை நேருக்கு நேராக வைத்துக் கட்டவேண்டும். வீட்டுத் தாழ்வாரங்களிலும், தெருக்களிலும், ஆடு மாடுகளை கட்டுகிறதினாலும்,தெருக்களிலும் சந்துகளிலும் மலஜலங்களை கழிக்கிறதினாலும், அசுத்தமான காற்றையும் கொசுக்கடியையும் அநுபவிக்க வேண்டியிருக்கிறது. கும்பகோணத்தைப் போன்ற கொசுக்கடியும், மதுரை, நாகப்பட்டணம் இவ்விடங்களிலுள்ள சாக்கடை நாற்றமும் க்ராமங்களில் இதுவரையில் கிடையா, இனி கும்பகோணத்திலுள்ள மாதிரி கொசுக்கடி க்ராமங்களிலும் உண்டாகலாமென்று தோன்றுகிறது. ஜனங்களுக்குள் ஒற்றுமைக் குறைவும், ஸுகாதாரத்துக்கான விஷயங்களில் கவனமின்மையுமே இதற்குக் காரணங்களாம்.

சுத்தமான காற்றை க்ராம ஜனங்கள் அடைய அடியில் கண்ட சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும். (1) ஒவ்வொரு வீட்டுக்கும் இரண்டு மூன்று ஜன்னல்களுக்குக் குறையாமல் வைத்துக் கட்டவேண்டும். (2) வருஷத்துக்கு ஒரு தடவை வீடுகளுக்கு சுண்ணாம்பு பூசவேண்டும். (3) ஆடுமாடுகளை ஸமீபத்தில் கட்டும் வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். (4) புஷ்பச்செடிகளையும் மரங்களையும் வீட்டைச் சுற்றி வைக்கவேண்டும். சட்டிகளில் ஆமணக்குச் செடிகளை பயிர்செய்து வீட்டுத் தாழ்வாரங்களிலும் ஜன்னல் வெளிப்பக்கத்திலும் வைக்க கொசு இறந்துவிடுமென்று தெரிகிறது.

(2) ஜலம்:—நல்ல ஜலம் க்ராமங்களில் கிடைப்பதரிதாயிருகிறது. நல்லஜலம் நமது உபயோகத்துக்கு வேண்டியவளவு கிட்டாமற் போவதாலும், கிடைக்கும் ஜலம் அசுத்தமாக இருப்பதாலும், நமது ஸௌக்யத்துக்கு நேரிடுந் தீமைக்கு அளவேயில்லை. க்ராமங்களிலுள்ள குளங்கள், ஆறுகள், கிணறுகள், பல விதங்களில் கெடுதியடைகின்றன. குளங்களில் மாடு கன்று குளிப்பாட்டுவதாலும், மழைஜலத்

துடன் மலமூத்ராதிகள் குளத்தில் சேருவதாலும், மட்டைகள் கீற்றுகள், ஊறவைத்தல், மரங்களின் தழைகள் விழுதல், வேஷ்டி துவைத்தல், குளித்தல், சௌசம் செய்தல் ஆகிய இவைகளாலும் குளங்கள் அசுத்தமடைகின்றன. மேலும், கழனிகளிலிருந்து வடியும் ஜலமும் குளங்களில் கலக்கின்றன. ஒரே துறையில் கால்நடைகளும், மனிதர்களும் வித்யாஸமில்லாமல் குளிப்பதை க்ராமங்களில் காணலாம்.

ஆறுகள்:—படுகைகளின் கழிவாலும் பல வாய்க்கால்கள் பலவித நீரைக் கொண்டுவந்து கலப்பதாலும், நமது தேசத்தில் பெரும்பாலும் மயானங்கள் ஆற்றின் கரைகளிலிருப்பதாலும், சாயக்காரர்கள் ஆற்றில் துணி துவைப்பதாலும், ஆடு மாடுகள் குளிப்பாட்டுவதாலும் ஆற்றுநீர் அசுத்தமடைகிறது. மேலும் நகரங்களுக்கருகாமையிலிருக்கும் ஆற்றில், சாக்கடை நீர், தோல் பதனிடும் சாலைகள், பஞ்சாலை, அரிசியாலை, இவைகளின் யந்திரக்கழிவு நீர், ஆகிய இவைகள் சில ஸமயம் ஓடிக்கலக்கின்றன.

கிணறு.—கிணற்றின் ஓரங்களில் பெய்த மழை ஜலம் கிணற்றில் ஊறும்படி விடுகிறதினாலும், எருக்குப்பைகளை ஸமீபத்தில் கொட்டிவைப்பதாலும், சாக்கடைகள், மாட்டுத் தொழுவங்களின் கழிவுநீர்கள், இவைகளை கிணற்றோரங்களில் ஓடும்படி விடுவதாலும், கிணறுகள் அசுத்தமடைகின்றன. இவ்விதம் ஜலாதாரங்களை நாம் அசுத்தப்படுத்தி விடுகிறோம். க்ராமவாஸிகளும் நகரவாஸிகளும் தாம் அருந்தும் ஜலத்தை பரிசுத்தமானதாய் தெரிந்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

(1) பரிசுத்தமான ஸ்தலத்திலிருந்து ஜலம் நமக்குக் கிடைக்கிறதா? (2) யாதொருவித கசடுகளுமில்லாமல் வெகு ஸ்வச்சமாயிருக்கிறதா? (3) ஒருவித மணமும் ருசியுமில்லாமலிருக்கிறதா? (4) அது ஜில்லென்றிருக்கிறதா? (5) அதில் பருப்பு எளிதில் வேகிறதா?, என்று இவ்வளவு தூரம் பரிசோதிக்க வேண்டும். எந்த ஜலத்தில் பருப்பு எளிதில் வேகவில்லையோ, எந்த ஜலம் களியுமணலும் கலந்த தரையில் ஊறுகிறதோ, எந்த ஜலம் கசிவு பூமியிலிருந்து ஊறிவருகிறதோ, அந்த ஜலத்தை அசுத்தமான ஜலமென்று நீக்கவேண்டும். இன்னும் ஜலாதாரங்களை வ்ருத்தி செய்ய அடியில் கண்ட வழிகளை அனுஸரிக்கவேண்டும்.

(1) ஒவ்வொருவரும் அருந்தும் ஜலம்மேல் சொன்ன மாதிரி பரிசுத்தமான கிணற்று ஜலமாயிருக்கவேண்டும். (2) கிணற்றின் உட்புறத்தில் கசிவு நீர் இறங்காதபடி ஸிமெண்டு பூசியிருக்கவேண்டும். (3) கிணற்றைச் சுற்றி சுவரெடுத்து மேடை போட்டு மேடையில் விழும் ஜலம் பூமியில் நிற்காமல் வழிந்து ஓடும்படி ஏற்பாடு செய்திருக்கவேண்டும் (4) கூடுமான வரையில் எருக்குப்பைகளையும் மாட்டுத்தொழுவங்களையும் 100 - கஜதூரத்துக்குள்ளிருக்காமல் செய்யவேண்டும். (5) ஆடுமாடுகளுக்கென்று தனியானகுளங்கள் இருக்கவேண்டும். மனிதர்கள் குளிப்பதற்கென்றும், வேஷ்டி துவைப்பதற்கென்றும், அருந்துவதற் கென்றும், தனித்தனி குளங்கள் வெட்டவேண்டும்.(6)ஒவ்வொரு குளக்கரையும் உயர்த்தப்பட்டு மழை ஜலம் குளத்தில் ப்ரவேசிக்காமல் செய்திருக்கவேண்டும். (7) குளங்களுக்கு தவறாமல் வடிகால்கள் அமைத்திருக்கவேண்டும். (8) கூடுமானபோது பழைய ஜலத்தை வடித்து புதிய ஜலம் தேக்கிக்கொள்ளவேண்டும். (9) தழைகள் விழாதபடி மரங்களை குளக்கரைகளினின்றும் விலக்கவேண்டும்.

(3) வஸிக்கு மிடம்:—காய்ந்த தரையில் வஸிப்பது எப்பொழுதும் நமது தேகத்துக்கு ஸௌக்யத்தை விளைவிக்கும். க்ராமங்களில்

சில இடங்களில் ஈரத் தரையில் வஸிப்பதால் காசம், கபரோகம், ச்லேஷ்மரோகம், முறை ஜ்வரம், விஷஜ்வரம், வயிற்றில் கட்டி, விஷ பேதி, இவ்விதமான நோய்கள் உண்டாகின்றன. க்ராமங்களில் அநேக வீடுகள் நஞ்சையின் மத்தியிலுள்ள தாழ்ந்த பூமியில் கட்டப்பட்டிருக்கிறதைக் காணலாம். நத்தம் விசாலமில்லாத இடங்களில் இவ்விதம் வீடு கட்டுகிறார்கள்.

அநேகமாய் பஞ்சமர்கள் வஸிக்குமிடங்களில் வாந்திபேதி, விஷஜ்வரம் இவைகள் அடிக்கடி நேருகின்றன. இதற்கு காரணங்கள் தாழ்வாயும் ஈரக்கசிவாயுமுள்ள பூமியில் வஸித்தல், கழுவிடை ஜலங்களை பூமியில் ஊறும்படி விடுதல், ஓதமாயிருக்குந் தரையில் ஜீவபதார்த்தங்களும் கந்த மூலபதார்த்தங்களும் அழுகும்படி விடுதல், வ்யாதியுள்ள ஆடுமாடுகளையும், பன்றி முதலிய ம்ருகங்களையும் புஜித்தல். ஆகிய இவைகளே.

பஞ்சமர்களுக்கு குடி தண்ணீர்க் கிணறுகள் இப்பொழுதுதான் லோகல் பண்டிலிருந்து கட்டிவருகிறார்கள்.

நிவர்த்திக்கும் வழி.—(1) கூடிய மட்டில் ஓதமில்லாமல் உலர்ந்த மண்ணுள்ள உயர்ந்த பூமியில் கட்டப்பட்ட வீடாகபார்த்து குடியிருக்கும்படி செய்தல். (2) வீட்டின் ஸமீபத்தில் சேற்று நிலமாவது களர்நிலமாவதிருந்தால் மத்தியில் மரங்களை நட்டுப் பயிர் செய்தல். (3) எப்போதும் கிணற்று நீரை குடிக்கும்படி செய்தல். (4) வ்யாதியுள்ள ம்ருகங்களை புஜிக்காமல் புதைக்கும்படி செய்தல். இத்யாதிகாரியங்களால் பஞ்சமர்களுக்குண்டாகுந் தீங்குகளை நிவர்த்திக்கலாம்.

பொதுவாய் எல்லா ஜனங்களும் அடியில் கண்ட விதிகளை அநுஸரிக்க வேண்டும். (1) தெருக்களை சுத்தியாய் வைத்திருத்தல். (2) சாக்கடைகள் தெருக்களிலும் கிணற்றோரங்களிலும் வராதபடியும், அந்த ஜலம் பூமியில்ஊறாமலும் செய்தல். (3) மாட்டுத் தொழுவங்களை வீட்டிற்கும் குடி ஜலாதாரத்துக்கும் தூரத்தில் கட்டுதல். (4) எருக்குப்பைகளை வெகு தூரத்தில் கொட்டி துர்க்கந்தம் வீசாதபடி மண்போட்டு மூடி விடுதல். (5) எப்போதும் கிணற்று ஜலத்தையே அருந்தல். (6) மனிதர் குளிக்குங்குளங்களில் ஆடு மாடுகள் இறங்காவண்ணம் வேலி போடுதல். (7) மலஜலத்தையும் மரித்த சரீரத்தையும் தூரங்களில் கொண்டுபோய் புதைத்தல் அல்லது சுட்டெரித்தல். இவைகளாலும் இவை போன்ற இன்னும் அநேக ஸாதனங்களாலும் க்ராமங்களிலுள்ள ஸுகாதாரக் குறைகளை நிவர்த்தித்துக்கொள்ளலாம். க்ராம ஸுகாதார விஷயங்களைப் பற்றி கவனிக்க க்ராம பஞ்சாயத்துகள் வேண்டியது அவச்யம்.

எம். வைத்யனாதன்.

REMEDY FOR SNAKE BITE.

பாம்புக்கடிக்கு மருந்து.

பாம்புக்கடிக்கு வாழைமரத்தின் சாற்றைக் கொடுத்தால் கடித்தவர்கள் இறக்காமல் பிழைப்பார்கள் என்று தெரியவருகிறது. இதை அநுபவத்தில் பரீக்ஷித்துப்பார்த்த ஒருவர் ஒரு பத்ரிகைக்குப் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.

"ஏதோ ஒரு தேசத்தில் விஷப்பாம்புகள் கடிக்கப்பட்டவர்களுக்கு வாழை மரத்தின் சாற்றை உள்ளுக்குக் கொடுக்கிறது வழக்கமென்று சில வாரங்களுக்கு முன் "ட்ராபிகல் அக்ரிகல்சரிஸ்ட்" என்ற பத்ரிகையில் நான் படித்தேன். ஆனால் நான் அதை நம்பவில்லை.

"நேற்று மாலை ஸுமார் 6-மணிக்கு என்னுடைய நாய் ஒன்றை ஒரு கொடிய நல்ல பாம்பு 4 இடங்களில் கடித்துவிட்டது. அந்தப் பாம்பை நாய் கொன்று விட்டபோதிலும், நாக்கில் இரண்டு இடங்களிலும் கடிக்கப்பட்டுப்போய்விட்டது. அந்தப் பாப்பு விஷப்

பாம்புகளில் மிகக் கொடிய வர்க்கத்தைச் சேர்ந்தது.

"என்னாய்களை எவ்வளவு தடவைகளோ பாம்புகள் கடித்திருக்கின்றன. நாக்கில் கடி படாத ஸமயங்களிலெல்லாம் அவற்றிற்கு எலுமிச்சம் பழரஸத்தையும் நெய்யையும் உள்ளுக்குக் கொடுத்தும் கடித்த இடங்களை பேனுக்கத்தியால் சுரண்டிவிட்டு அங்கு சேர்ந்துள்ள கரு ரத்தத்தை பிதுக்கி எடுத்துவிட்டு கண்டீஸ் ப்ளூயிட் (Condy's Fluid) என்ற மருந்தை மேலே தடவியும் ஸ்வஸ்தப்படுத்தி இருக்கிறேன். ஆனல் நாக்கிலேயே கடிக்கப் பட்டுப் போனல் ஒரு பொழுதும் ஸ்வஸ்தப் படுத்த முடியவில்லை.

"நேற்று மாலையும் நாயைப் பாம்பு கடித்தவுடன் மேற் சொன்னவாறு எலுமிச்சம் பழரஸத்தையும் நெய்யையும் உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கு கண்டீஸ் ப்ளூயிடைத் தடவினேன். ஆனல் அது ப்ரயோஜனப்படவில்லை. நாயின் நாக்கு வெளுத்துப்போய், அது மயங்கிப் போய்விட்டது. அப்பொழுது நல்ல வேளையாக "ட்ராபிகல் அக்ரிகல்சரிஸ்ட்" பத்ரிகையில் படித்தது ஞாபகத்துக்கு வர, உடனே ஒரு பெரிய வாழை மரத்தை வெட்டித்தள்ளி மரத்தின் சாற்றைப் பிழிந்து ஒரு கோப்பை நிறைய இரண்டு தடவை நாய்க்குக் கொடுத்தேன். என்ன ஆச்சரியம்! சற்று நேரத்துக்கெல்லாம் நாய் தெளிவடைந்து அரைமணி நேரத்துக்குள் நடமாட ஆரம்பித்து விட்டது."

இன்னெருவர் பாம்பு கடித்த ஒரு பையனுக்கு வாழைமரச்சாற்றை பத்து நிமிஷக்துக்கொருதடவையாக இரண்டு மணிநேரம் கொடுத்து வந்ததில் பையன் ஸ்வஸ்தமடைந்து விட்டான் என்று தெரியவருகிறது. எப்படியும் கடிவாய்க்கு மேல் ஒரு கட்டுப் போட்டு கடிவாயைக்கிறி கரு ரத்தத்தை வெளிப்படுத்த வேண்டியது ரொம்பவும் அவசியம். இந்த முறையை உபயோகித்து பயன் கண்ட அநேகர் தமது அநுபோகத்தைப்பத்ரிகைகளில் தெரிவித்திருக்கிறார்கள். இது ரொம்பவும் ஸுலபமான வைத்யமாகையால் யாவரும் உபயோகித்துப் பயனடையலாம். மேலும் ஒவ்வொருவரும் தமது வீட்டுக் கொல்லையில் இரண்டொரு வாழைமரம் வைத்துப் பயிர் செய்வது நல்லது.

PAPAW JUICE.

பப்பாளியின் பால்.

பப்பாளிக்காயின் பாலுக்கு நல்ல வைத்ய குணமிருக்கிறது. அதையுட்கொள்வதால் ஜீர்ணம் நன்ருக ஆகிறது. வயிற்றிலுள்ள பூச்சிகள் இறந்து போகின்றன. பப்பாளி விதைக்கும் இக்குணங்களிருக்கின்றன. மேலும் பப்பாளிப்பாலை தேமலின் மேல் பூசினல் அது போய்விடும்.

MYOPIA AND DIABETES.

கிட்டத்துப் பார்வையும் நீர் ரோகமும்.

அதிபால்யமும், ரொம்பக்கிழமும் இல்லாத நடுத்தர வயஸுள்ளவர்களுக்கு தூரப்பார்வை குறைந்து போனல் அவர்களுடைய மூத்ரத்தைப்பரீக்ஷித்துப்பார்த்து அதில் சர்க்கரையிருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். தூரத்ருஷ்டிக்குறைவு ஏற்படுவது சில ஸமயங்களில் அவர்களுக்கு நீர் ரோகம் வருவதற்கு அடையாளமாகும்.

MEDICAL PROPERTIES OF SUGAR.

சர்க்கரையின் மருந்து குணம்.

யாருக்காவது ரத்தகாயம் உண்டானல் க்ராமாந்தரங்களில் சர்க்கரையையோ கரிப்பொடியையோ காயத்திற்கு வைத்துகட்டி விடுவது நாம்ரொம்பகாலமாகச்செய்துவரும் வழக்கம். இருந்தாலும் அனேகருக்கு சர்க்கரையின் மருந்து குணங்கள் தெரியாது. சர்க்கரையை ரணங்களுக்கு உபயோகிப்பதால் சீழ் பிடிப்பதில்லை. ரணங்களில் உற்பத்தியாகும் க்ருமிகள் செத்துப்போகின்றன.

KING GEORGE V.

ஐந்தாவது ஜார்ஜ் அரசர்.

The Boys' World

பையன்கள் பகுதி.

KING GEORGE.

ஜார்ஜ் அரசர்.

நமது சக்ரவர்த்தியாகிய ஐந்தாம் ஜார்ஜ் தமது வாழ்நாளை எப்படிக் கழிக்கிறார் என்பதைப்பற்றி ஒருவிருபர் ஒரு பத்ரிகைக்கு எழுதியிருக்கிறார். அதில் அரசருடைய விருப்பு வெறுப்புகள், குணாதிசயங்கள் முதலியவைகளையும் விரித்துச் சொல்லியிருக்கிறார். நமது அரசர் அக்கறை பாராட்டும் விஷயங்கள் ராஜ்ய நிர்வாகக் கடமைகளும், தமது குழந்தைகளின் க்ஷேமத்தைப்பற்றி கவனித்தலும், விவஸாயமுமேயாம்.

எட்வர்ட் அரசர் ஸ்த்ரீகள் ஸகவாஸத்தில் அடிக்கடி இருந்ததுபோல் ஜார்ஜ் அரசர் இருப்பதில்லை. தமது மனைவி, பெண் ஆகிய இரண்டு ஸ்த்ரீகளைத்தவிர மற்ற ஸ்த்ரீகள் விஷயத்தில் உபேக்ஷையாகவே இருப்பார்.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ர வாதிகளைக் கண்டால் இவருக்குப் பிடிக்காது. விவாதத்துக்கிடமான எந்த விஷத்தைப்பற்றியும் நமதரசர் யாதொரு அபிப்ராயமும் சொல்லுவது வழக்கமில்லையென்றாலும், ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் விஷயத்தில் மாத்ரம் தமது வெறுப்பைக் காட்டிப் பேசுகிறார்.

இவருக்கு படாடோபம் பிடிக்காது. ஸாதாரண நடையுடையுள்ள ஒரு கனவானைப் போலிருப்பார். அவர் யாரிடத்திலும் முதலில் பேசும் ஸ்வபாவமுள்ளவரல்ல; ஆனால் அவரைப்பார்க்க வருபவர் யாவரும் அரசர் பேசிய பிறகே பேசவேண்டியதாகையால் அவருக்கு மௌனவ்ருதம் ஸாதிக்கமுடியாமல் போகிறது.

அவர் தமது குடும்பவிஷயத்தில் ரொம்ப அக்கறையுள்ளவர். தமது குழந்தைகளிடத்தில் ரொம்ப பக்ஷமுள்ளவர். தமது குஞ்சு குழந்தைகளோடு கூடிக் குலாவுவதில் ரொம்ப ப்ரியமுள்ளவர்.

குழந்தைகளின் படிப்புவிஷயத்தை ராணியே அதிகம் கவனித்து வருகிறார். என்றாலும், குடும்ப விஷயத்தில் அரசர் பேச்சு வராதென்று சொல்லக்கூடாது. தமது குழந்தைகளைப்பற்றிய விஷயங்களிலெல்லாம் தாம் கவனம் செலுத்துவதோடு தமக்கு எந்தவழி ஸரியென்று தோன்றுகிறதோ அதை அநுஸரித்தே எதுவும் நடக்கவேண்டுமென்றும் கட்டாயப்படுத்துவார்.

தமது குழந்தைகளைப்பற்றி கவனிப்பதற்கு அடுத்தபடி விவஸாயமே அவருக்கு ரொம்ப ப்ரியமென்றாலும், அது விஷயம் கவனம் செலுத்த போதுமான அவகாசம் அவருக்குக் கிடைப்பதில்லை. வேட்டையாடுவதில் அவருக்கு அதிக ஆவல்கிடையாது. குதிரை ஸவாரிசெய்யும்போதும் நல்ல வேட்டைக்காரர்போல ஸரியாய் உட்காரத் தெரியாது.

அவர்வேண்டிய அளவு தேகாப்யாஸம் செய்துவருகிறார். லண்டனில் இருக்கும்போது தினம் குதிரை ஸவாரி போய்வருவார். டென்னிஸாட்டம் ஆடுவதுண்டு. கால்ப் ஆட்டத்தில் ப்ரியம் கிடையாது. பில்லியர்ட் ஆட்டமும் ஸாமர்த்யமாய் ஆடவராது.

ஆகாரம், பானம் ஆகிய இவைகளில் நமது அரசர் ரொம்பவும் மிதமாக இருப்பவர். அவருக்கு ஷாம்பேன் என்னும் சாராயத்தில் ப்ரியம் கிடையாது. ஜாஸ்திபோதை கொடுக்காத ஒயின் அல்லது ஜலம் கலந்த விஸ்கியைத்தான் குடிப்பார். காரம் அதிகமில்லாத சுருட்டு தினம் ஒருடஜன் குடிப்பது வழக்கம்.

எந்த விஷயத்தைப் பற்றியாவது ஒரு அபி

ப்ராயம் கொண்டுவிட்டால் அதை மாற்றவாவது பிறருக்காக இணங்கிப்போகவாவது மாட்டார். பொது ஜனவிஷயத்தின் நன்மையை உத்தேசித்து மாத்ரம் தமது அபிப்ராயத்தை மாற்றுவதுண்டு.

தினஸரிப் பத்ரிகைகளைத் தவிர மற்ற புஸ்தகங்கள் வாசிக்க அவருக்கு நேரம் இருப்பதில்லை. எப்போதாவது வாசித்தாலும் பூகோள சாஸ்த்ர ஆராய்ச்சி ஸம்பந்தமான புஸ்தகங்களை வாசிப்பாரே ஒழிய "நாவல்"கள் வாசிப்பது கிடையவே கிடையாது. ஜ்யோக்ராபிகல் ஸங்கத்தின் ரிபோர்ட்டுகளை வாசிப்பதில் அவருக்கு ப்ரியம் அதிகம். அவருக்கு உதவியாக அநேக ஸெக்ரடரிகள் இருக்கிறார்கள். எந்த விஷயத்தையும் மனப்பூர்வமாய் ஆராய்ந்து பார்ப்பார்.

A BOY CAUGHT IN THE FLOOD.

வெள்ளத்திலகப்பட்டுக் கொண்ட பையன்.

பங்காளத்தில் உள்ள பர்ட்வான் ப்ரதேசத்தில் வெள்ளம் வந்து ஜனங்கள் ரொம்ப கஷ்டமடைந்ததாக ஆவணிமாஸத்து ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அந்த வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டு கஷ்டமடைந்த ஒரு பையனுடைய ஸமாசாரம் இப்போது வெளியாகி யிருக்கிறது. அந்தப்பையன் வெள்ளம் வந்து அந்த ப்ரதேசத்தை நாசம் செய்ததை தான் நேரில் கண்டு கொண்டிருக்கும்படி நேர்ந்ததாம். வெள்ளம் வந்த தினம் வழக்கம் போல் தன்னூருக்கருகில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தானாம். வெள்ளம் வரப்போகிறதென்னும் ஸங்கதி கொஞ்சங்கூட அவனுக்குத் தெரியாது. மத்யானம் நடுப்பகலில் அவனுடைய ஊர் வெள்ளத்துக்கிரையாயிற்று. ஆனல் வெள்ளம் வருவதை அவன் முன்னடியே அறிந்துகொண்டு தப்பித்துக்கொள்ள முடியாதபடி நெல்வயல் ஒன்று மறைத்துக் கொண்டிருந்ததாம். ஆகவே வெள்ளம் ரொம்பக்கிட்ட வரும்வரையில் அதைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தான். கிட்டவரவே அவனுக்கு பயம் உண்டாயிற்று. எங்கேனும் ஓடிப்போய்த் தப்பித்துக்கொள்ளலாம் என்பதற்கும் வழியில்லை. உடனே சற்று தைர்யமடைந்து பக்கத்திலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கிளையைப்பிடித்து ஏறி அதில் உட்கார்ந்து கொண்டான். உடனே பூமியெல்லாம் ஒரே ஜல மயமாகப் போய்விட்டது. அவனுடைய பசுக்களையும், அவனூர்வாஸிகளையும் வெள்ளம் அடித்துக்கொண்டு போவதைத் தன் கண்ணால் கண்டபோது அவனுக்கு எவ்வளவு பயமாக இருந்திருக்குமென்பதை நாம் ஒருவாறு நினைத்துப் பார்த்துக்கொள்ளலாமே ஒழிய சொற்களால் விவரிக்க முடியாது. மாடுகள் தங்களுடைய உயிரைக்காப்பாற்றிக் கொள்ள ச்ரமப்பட்டுக்கொண்டிருந்தன. சில ஜனங்களும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேறு வழியில்லாமல்சில மாடுகளின் முதுகின் மேல் ஏறிக்கொண்டிருந்தார்கள். என்ன செய்தும் வெள்ளத்துக்கு முன்னல் அவர்கள் ஒன்றும் செய்ய முடியாமல், வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது. இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு அந்தப் பையன் அந்த மரத்திலேயே 4 நாள் தங்கியிருந்தானம். அவன் அங்கே நான்கு நாள் வரையில் ஆகாரமின்றி வருந்தினதோடு மழையினலும் கஷ்டப்படும்படி நேர்ந்ததாம். இவைகளோடு தன்கதி என்னவாகுமோ என்றும், ஒரு ஸமயம் ஆலமரத்தையே வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்கிறதென்றும், இப்படிப் பலவாருக அவனுடைய மனதில் பலவித பயங்கரமான எண்ணங்கள் உண்டாகி அவன் ஸதா பயந்து கொண்டேயிருந்தான்.

வெள்ளம் வடிந்ததும் அவன் கீழே இறங்கி தன் வீட்டைத் தேடிப் புறப்பட்டான்,

வீட்டையும் காணோம், அவனுடைய பெற்றோர்கள், பந்துக்கள் முதலியவர்களையும் காணோம். வீட்டையும் அவனுடைய பெற்றோர்கள், பந்துக்கள் முதலியவர்களையும் வெள்ளம் அடித்துக்கொண்டு போய்விட்டது! சிறு பையன் உற்றார் உறவினரின்றி பூமியில் தனியாய் இருக்கும்படி நேர்ந்து விட்டது. பசியோ சொல்ல முடியாதபடி வருத்திற்று. அங்குமிங்கும் அலைந்து பார்க்கையில் நனைந்திருந்த அரிசி கொஞ்சம் கிடைத்தது. அதைத்தின்று கொண்டே பக்கத்து க்ராமத்தில் போகையில் தனது மாடுகளில் ஒன்று ஒருவர் வசம் இருக்கக்கண்டு அது தன்னுடைய மாடென்று அவரிடம் தெரிவிக்க மாட்டுக்காரர் அன்போடு அதைக்கொடுத் துதவினர். பிறகு மாட்டையோட்டிக்கொண்டு வெள்ளத்தால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வந்திருந்த ஜனங்களிடம் சென்று தன்னுடைய சரித்ரத்தைக் கூறி யவர்களிடமிருந்து உதவி பெற்றுக் கொண்டானாம்.

THE FRIGHTENING PLANT.

பயமுறுத்தும் செடி.

அமெரிக்காவில் ப்ரெய்ரிகள் என்று சொல்லப்படும் விஸ்தாரமான வெளிகள் இருக்கின்றன. அவைகளில் ராட்டில் ஸ்நேக் ஐரிஸ் என்ற ஒரு வகைச் செடியிருக்கிறது. இதன் காய்கள் நன்றாய் முற்றிப் போனவுடன் அதிலுள்ள விதைகள் ராட்டில் ஸ்நேக் என்னும் பாம்பின் சத்தம்போல் சலசலவென்று சத்தம் செய்யுமாம். இதனால் ப்ராணிகள் பயமடைந்து அந்தச் செடிகளண்டை போவதேயில்லையாம்.

AN ARITHMETIC TRICK,

ஒருவித கணக்கின் ஜாலம்.

மிஸ்டர் பி. வி. வியாஸராவ் நமக்கு எழுதுகிறார்:—ரூபாய் 11-15-10-ம் அல்லது அதற்குக்குறைந்த எந்தத்தொகையையாவது எடுத்துக் கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொண்ட தொகையில் பைஸா எண் ரூபாய் எண்ணைவிட குறைந்திருக்கவேண்டும். அந்தத் தொகையிலிருந்து அந்தத் தொகையின் பைஸாஎண்ணை ரூபாய் எண்ணாகவும், அணா எண்ணை அணா எண்ணாகவும் ரூபாய் எண்ணை பைஸா எண்ணாகவும் தலைமாற்றிக் கழிக்கவேண்டும். வந்த ஈவுடன் ஈவின் பைஸாவை ரூபாயாகவும் அணாவை அணாவாகவும் ரூபாயை பைஸாவாகவும் தலை மாற்றிக் கூட்டினால் வரப்பட்ட ஈவு எவ்விதத்திலும் எப்பொழுதும் ஒரே தொகையாகத்தானிருக்கும். அதாவது ரூ 12-14-11 ஆகவே வரும்.

உதாரணம்:—

ரூ	அ	பை
11	15	10
—10	15	11
0	15	11
+11	15	0
12	14	11

ரூ	அ	பை
9	12	7
—7	12	9
1	15	10
+10	15	1
12	14	11

ரூ	அ	பை
8	9	5
—5	9	8
2	15	9
+9	15	2
12	14	11

ரூ	அ	பை
7	12	3
—3	12	7
3	15	8
+8	15	3
12	14	11

MORAL SAVINGS.

நீதிவாக்யங்கள்.

1. நாம் எதையும் ஒளித்துவிடலாம். ஆனால் நம்முடைய குணங்களை உலகத்தா ரறியாமல் ஒளித்தல் ஒருபோதும் முடியாது.

2. கடவுள் பொதுவாயிருப்பதால் அவர் தூங்குகிறார் என்று நினைப்பது பிசகு.

3. எந்த ப்ராணிக்குத் தான் கடைசியாய்ப் போய்ச் சேரவேண்டிய கதிமோக்ஷம் என்

கிற உறுதியான நம்பிக்கை யில்லேயோ அந்த ப்ராணி ஒருபோதும் ஸுகம் அடைவதில்லே.

4. அன்பே கடவுள் என்று அறியாதவன் கடவுளுடைய குணாதிசயங்களே கொஞ்சங்கூட உணர்ந்தவனல்ல.

5. நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தை யையும் ஆலோசித்துப் பேசவேண்டும்.

6. நம்மனதை அன்போடு ஒத்து ச்ருதி சேர்த்தாலொழிய நமது வாழ்நாளாகிய வீணே இனிமையான கான ரஸத்தைத் தராது.

7. எவன் எந்தக்காலத்திலும் பிறருடைய நன்மைக்காக தன் ஜீவனே வேண்டுமானல் கொடுக்கத் தயாராயில்லேயோ அவன் 'மஹான்,' 'அவதாரபுருஷன்' என்று சொல்லப் படுவ தற்குச் சற்றும் அர்ஹனுகான்.—ரஞ்சிதபோதினி.

APPEARANCE OF THE SUN AND MOON.

ஸூர்ய சந்த்ரர்களுடைய தோற்றம்.

ஸூர்யனும் சந்த்ரனும் உதிக்கும்போதும் அஸ்தமிக்கும் போதும் எப்போதும் உள்ள பரிமாணத்தை விட பெரியனவாகக் காணப் படுகின்றன அல்லவா? அப்படித் தோன்று வதற்கு காரணம் என்ன வாயிருக்கலாம் என்பதை ஒருவர் பின்வருமாறு ஒரு பத்ரிகையில் தெரிவிக்கிருர். ஒரு கோணத்தின் உட்புறத்தில் ஸம அளவுள்ள இரண்டுவட்டம் ஒன்று கோணத்தின் (மூலே) ஸமீபத்திலும் மற்றொன்று கோணத்திற்கு சற்று தூரத்திலுமாக வரைந்தால் கோணத்திற்குப் பக்கத்தி லுள்ள வட்டம் பெரியதாகவும் மற்றது சிறிய தாகவும் தோற்றும்.



கோணம் குறுகியிருந்தால் இந்த பேதம் அதிக மாகவும், கோணம் அதிகம் விரிந்திருந் தால் இரண்டு வட்டங்களும் ஏறக்குறைய ஸம அளவு உள்ளனவாகவும் தோற்றும். உண்மையில் இப்படிக் கண்ணுக்குத் தோற் றும் பொய்யான மாயின காட்சியைப் போல வே சந்த்ரனும் ஸூர்யனும் அடிவானத்தில் இருக்கும்போது பெரியனவாய் இருப்பதாகக் காணப்படுகின்றனவாம். ஏனென்றால் பூமியின் மேற் பரப்பும் வானத்தின் வளேவும் சேருவ தால் உண்டாகும் கோணத்திற்கு கிட்டப் போகப் போக சந்த்ரனும் ஸூர்யனும் பெரி யனவாகக் காணப்படுகின்றன. சந்த்ரனும் ஸூர்யனும் வானத்தின் உச்சியிலிருக்கும் போது இந்தக் கோண ஸம்பந்தம் அவைக ளுக்கில்லாமையால் அவைகள் உருவத்தில் மாறிக்காணப்படுவதில்லே.

NORTHERN SIBERIA.

வட ஸைபீரியா.

ரஷ்ய கவர்ன்மெண்டைச் சேர்ந்த இரண்டு கப்பல்கள் ஸைபீரியாவின் வடபாகத்தின் நிலே மையை 3-வருஷமாக ஆராய்ந்து பார்த்துப் கொண்டு வருகின்றன. இது வரையில் சுற்றிப் பார்த்ததில் ஸைபீரியாவின் வடக்கில் பாயும் லீனு நதிக்கு ஸுமார் 500 மைல் வடக்கே ஒரு பெரிய பூபாகம் கண்டு பிடிக்கப்பட்டிருக் கிறது.

YUAN SHI KAI'S SONS.

யு-வான்-ஷிகேயினுடயை புத்ரர்கள்.

சீனக்குடியரசின் ப்ரெஸிடெண்டாகிய யு-வான்-ஷிகேயினுடைய மூன்றுபுத்ரர்கள் படிப் புக்காக இங்லண்டுக்குப் போயிருக்கிருக்கிருர் களாம். அவர்களில் மூத்தனுக்கு 16-வயது, அடுத்தவனுக்கு 15,மூனறுவனுக்கு வயது 14. அவர்கள் சீனுவின் தலே நகராகிய பீகிங்கில் இருந்தபோது ஒரு உபாத்யாயரிடம் கொஞ்சம் இங்லீஷ் பேசக் கற்றுக் கொண்டார்க ளாம். அவர்களுக்கு வயது அதிகமாகிவிட் டதாலும் இங்க்லீஷ் அதிகம் தெரியாததாலும் அவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசிக்க முடியாது. செல்ட்னும் பாடசாலேயின் ஹெட்மாஸ்டருடைய மேம்பார்வையில் ப்ரைவேட் உபாத்யாயர்களிடம் அந்தச் சிறுவர்கள் கல்வி பயிலுவார்களாம். அவர்களுடைய விளேயாட் டுப் பயிற்சியில் ரொம்ப கவனம் செலுத்துவார் களாம்.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

HOUSEHOLD DUTIES

BY

M. V. ISHWARA AIYER.

க்ரக க்ருத்யங்கள்.

ஸ்த்ரீகள் கவனித்துச் செய்யவேண்டிய பல கார்யங்களுள் க்ரக க்ருத்யங்கள் ரொம்ப முக்யமானவைகள். க்ரக க்ருத்யங்களென்றால் வீட்டுக்கார்யங்கள். சமையல் செய்தல், வீட்டை சுத்தமாய் வைத்துக்கொண்டிருத்தல், வீட்டிலுள்ள ஸாமான்கள் பாழாய்ப் போகாமல் பார்த்துக்கொள்ளுதல் முதலியனவாம். ஸுமார் 20,30 வருஷங்களுக்கு முன் ஹிந்து குடும்பங்களில் க்ரக க்ருத்யம் ஸ்த்ரீகளால் மிகவும் கவனிக்கப்பட்டு வந்தது. ரொம்ப ஐச்வர்யமுள்ள குடும்பங்களிலுங்கூட ஸ்த்ரீகள் தங்கள் வீட்டுக் கார்யங்களைத் தாங்களே செய்வார்கள். ஒரு குடும்பத்தார் பெண்ணைக் கல்யாணத்துக்காக நிச்சயிக்கும்பொழுது, பெண்வீட்டுக்காரர்கள் கல்யாணப் பெண்ணுக்கு வீட்டுக்கார்யங்களெல்லாம் தெரியுமென்றும், சமையல் நன்றாய்ச் செய்வாளென்றும் சொல்வது வழக்கம். நன்றாகப் பாடுவாளென்றும் சொல்வதுண்டு. தற்காலத்தில் கல்யாணப்பெண்ணுக்கு இரண்டு மூன்று பாஷை எழுதப்படிக்கத் தெரியுமென்றும், ஹார்மோனியம் வாசிக்கத் தெரியுமென்றும், சொல்வது ஸகஜமாய்க் கொண்டுவருகிறது. இப்படிச் சொல்வது தற்கால நாகரிகமாயிருக்கிறது. படிப்பு நல்லதேயானாலும், வீட்டுக்கார்யங்களில் நமது பெண்கள் பழகாமலிருப்பது விரும்பத் தக்கதல்ல. ஒவ்வொரு பெண்ணும் பால்யத்தில் வீட்டுக்கார்யங்களில் பழகி நல்ல தேர்ச்சி யடையவேண்டும். சில பெண்களுக்கு வீட்டுக் கார்யங்களை யெல்லாம் செய்ய வேலையாட்களை வைத்துக்கொள்ள அந்தஸ்தும் ஐச்வரியமுமிருந்தபோதிலும், அவர்களும் எல்லா வேலைகளையும் தாங்களே செய்ய ஸாமர்த்ய முள்ளவர்களா யிருந்தா லொழிய, குடும்பநிர்வாகம்சிக்கனமாயும் ஸரியாயுமிராது. ஒவ்வொரு வேலையின் தன்மையும் அதைசெய்வதிலிருக்கும் ச்ரமும் வீட்டு யஜமானி அறிந்திருக்காவிட்டால் வேலைக்காரர்கள் ஏமாற்றி விடுவார்கள். யஜமானிக்கு ஸகலமும் தெரியுமென்றிருந்தால் வேலைக்காரர்கள் மிகவும்ஜாக்ரதையா யிருப்பார்கள். தற்காலத்திர் அனேக பெரியகுடும்ப ஸ்த்ரீகள் வீட்டுக்கார்யங்களில் பழக்கமில்லாதவர்களாய் ஒவ்வொரு கார்யத்துக்கும் பிறர் உதவியையே எதிர் பார்த்தவர்களாயிருக்கிறார்கள். என்னதான் கொடுத்தபோதிலும்,ஒருவேலையை நாம் எவ்வளவு நன்றாய்ச் செய்வோமோ அப்படி வேலைக்காரர்கள் செய்யமாட்டார்கள். எப்பொழுதும் நம்மை ஏமாற்றிப் பணம் பறிப்பதிலேயே அவர்கள் கண்ணாயிருப்பார்கள்.

ஆகையால்,நமது பெண்களுக்கு முக்யமான பயிற்சிவீட்டுக் கார்யங்களைப்பற்றின தாயிருக்கவேண்டும். சில பெண்கள் 'எனக்கு சமைக்கத்தெரியாது,' என்று சொல்வது கௌரவமென நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சுத்தப்பிசகு. இதற்குக் காரணம் பெண்களைப்பயிற்றுவதில் நம்மவர்களுக்குள்ளிருக்கும் தப்பபிப்ராயமே. அநேகர் பெண்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்துவிட்டால் போதுமென்றிருக்கிறார்கள்.

மேலும், இன்னொரு விஷயம். ஸர்க்காரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பெண் பாடசாலைகளில் நமது பழக்க ஒழுக்கங்களைத் தழுவிபடி

ப்புமுறை ஏற்பாடாகவில்லை. முக்யமாய்குடும்ப நிர்வாகம், சமையல், ஸுகாதாரம், வைத்யம், ஆகியஇவைகளையும்இவை போன்றவைகளையும் நமது பெண்கள் கற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்து கொடுக்கவேண்டும். பெண்கல்வியில் ச்ரத்தையுள்ளவர்கள் நம்ஸ்த்ரீகளின் நன்மையைக் கருதிய விஷயங்களை எடுத்து கல்வியிலாகா அதிகாரிகளிடம் தெரிவித்து கல்விமுறையில் வேண்டிய மாறுதல்களைச் செய்ய முயற்சிகள் செய்யவேண்டும்.

எம். வி. ஈச்வரய்யர்.

FAT BABIES.

ஸ்தூல சரீரமுள்ள குழந்தைகள்.

குழந்தைகள் தேகம் பெருத்து ஸ்தூலமாய் இருந்தால் அவைகள் எப்போதும் ஸுகதேகிகளாக இருக்கவேண்டு மென்பதில்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் பெருத்துவிட்டால் குழந்தை வ்யாதி யுள்ளதென்று சொல்லவேண்டும்.

பிறக்கும்போது குழந்தையானது ஸராஸரி $6\frac{3}{4}$ ராத்தல் நிறையுள்ளதாயிருக்கும். முதல் மாஸத்தில் 27 ஔன்ஸ் நிறையதிகமாகும். இரண்டாவது மாஸத்தில் 25 ஔன்ஸ் நிறையதிகமாகும். மூன்றும் மாஸத்தில் 23 ஔன்ஸ் நிறையதிகமாகும். இப்படியே ஒவ்வொரு மாஸமும் நிறை குறைவாகவே அதிகரித்துக் கொண்டுபோய் 12-வது மாஸக்கடைசியில் பிறந்தபோது இருந்த நிறையைப்போல் மூன்று மடங்குக்கு சற்றுக் குறைவாக இருக்கவேண்டும். 12-வது மாஸத்தில் 7 ஔன்ஸ் தான் நிறையதிகரிக்க வேண்டும். அதற்கடுத்த வருஷங்கள் ஒவ்வொன்றிலும் 3 ராத்தல் முதல் $4\frac{1}{2}$ ராத்தல் வீதமாக அதிகரிக்கவேண்டும். நாலாவது வருஷக்கடைசியில் பிறந்தபோது இருந்த நிறையைப்போல் நாலைந்து மடங்கு நிறையுள்ளதாக குழந்தை யிருக்கவேண்டும். அதாவது, குழந்தை கிட்டத்தட்ட 30 ராத்தல் நிறையுள்ளதாக இருக்கவேண்டும். ஒரு குழந்தைமுதல் வருஷக்கடைசியில் 26-ராத்தல் நிறையாவது, நாலாவது வருஷக்கடைசியில் 40-ராத்தல் நிறையாவது இருந்தால் அது வ்யாதியுள்ளதென்று அறிந்து அதற்கு வைத்யம் பார்க்கவேண்டும்.

குழந்தையானது பாலிலுள்ள கொழுப்பை ஜீர்ணம் செய்யமுடியாமற் போவதனுலும், பாலில் அதிக கொழுப்பு இருப்பதனுலும் குழந்தை ரொம்ப பருமனுய்க் காணப்படுவது ஸகஜம். இதை ஸுலபமாய் ஸரிப்படுத்தி விடலாம். எவ்வளவு அவச்யம் தேவையோ அதைவிட அதிகமான கொழுப்பு தேகத்தில் சேருவதால், சிறங்குகள், கொப்புளங்கள், தோலின்மேல் எரிச்சல், ஆகியஇவைகள் உண்டாகின்றன. குழந்தையின் இரண்டாவது வயஸில் தொண்டைநோவும் தொண்டையில் வீக்கமும், எரிச்சலும், ஆகிய இந்த வ்யாதிகள் காணுவதுண்டு.

குழந்தைகளுக்குக் காணும் இந்த வ்யாதிகளுக்கு வைத்யம் ரொம்ப ஸுலபமானது. குழந்தைகளுக்கு பாலுக்கு பதிலாக வெண்ணெய் அதாவது கொழுப்புஸத்து இல்லாத ஆகாரம் கொடுக்கவேண்டும். அல்லது பாலில் அதிகவெண்ணெய் இல்லாதபடி குறைத்துக் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு இந்தவித வ்யாதியிருக்கும்போது அம்மை குத்தக்கூடாது. குழந்தைகளின் பருமன் குறைந்து ஸரியான ஸ்திதியடையும் வரையில் அம்மை குத்தாமலிருந்து பிற்பாடுதான் அம்மை குத்தவேண்டும். எந்தக்குழந்தையாவது ஸாதாரணமாயிருக்க வேண்டியதைவிட அதிக நிறையுள்ளதாக இருந்தால் அப்படி யிருப்பதைப்பற்றி ஸந்தோஷப்படாமல் அப்படியிருப்பது வ்யாதிக் குறியென்றறிந்து தக்கவைத்யம் செய்து குழந்தை தேகஸுகத்தை ஸரிப்படுத்த முயலவேண்டும்.

FEMALE EDUCATION.

பெண் கல்வி.

சென்னை பச்சையப்பன் காலேஜ் கல்விஸங்கத்தில் "பெண் கல்வி" விஷயமாய் ப்ரஸங்கம் ஒன்று ஸமீபத்தில் நடந்தது. அப்போது ஸ்ரீமதி ஜி. பாருக்குட்டி அம்மாள் அக்ராஸனமவகித்து பெண்கல்வியின் முக்ய அம்சங்களைப்பற்றிப்பேசினார். யுனிவர்ஸிடி ஏற்பட்டு 50 வருஷகாலமாகியும் உயர்தரக் கல்வி அபேக்ஷிக்கும் ஸ்த்ரீகள் மிகவும் ஸ்வல்பமாகவேயிருக்கிறார்கள். இதற்குக் காரணம் ஸ்த்ரீகளுக் கென்றே ப்ரத்யேகமான முதல் க்ரேட் காலேஜ் இல்லாமையாகும். மைஸூர், திருவாங்கூர் ஸமஸ்தானங்களில் கூட இரண்டாவது க்ரேட் காலேஜ்கள்தானிருக்கின்றன. மேலும், ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிப்பது பூர்வ கால வழக்கமேயல்லாது புதிய வழக்கமல்லவென்று புராண இதிஹாஸங்களால் தெரியவருகிறது. இந்தியர்கள் ஒவ்வொருவரும் தங்கள் மனைவி மக்களுக்கும் ஸகோதரிகளுக்கும் கல்வி கற்றுக்கொடுத்துநல்லொழுக்கத்திற்குக்கொண்டு வருவது அவர்களுடைய கடமையென்று உணரவேண்டும். மேலும், இந்தியாவின் முன்னேற்றம் ஆண்மக்களின் ப்ரயத்தனத்தால் மட்டும் ஏற்படும் என்று நினைப்பது பிசகு. ஸ்த்ரீகளும் கலந்து உழைத்து வரவேண்டும். அவர்களுக்கு படிப்பு முதலியவைகளைக் கொடுத்து அவர்களுக்குள்ள மௌட்டீகமென்ற அந்தகாரத்தை நீக்க ப்ரயத்தனப்படாவிட்டால், புருஷர்கள் தங்கள் கடமைகளைச் செய்தவர்கள் ஆகமாட்டார்கள் இங்க்லீஷ் பாஷை கம்பீரமானதும் உலகம் முழுதும் பரவினதுமாயிருக்கிறது. இந்த பாஷை, இந்திய நூல்களில் சொல்லியிராத பலவித சாஸ்த்ர அறிவைப் புகட்டும் பொக்கிஷமாகும். ஆனால் எல்லாருக்குமே அது கிட்டும் என்று சொல்லுவதற்கில்லை. ஸ்த்ரீகள் ஆங்கிலங் கற்று பி. ஏ. பரிக்ஷைகளில் தேறுவதற்கு ப்ரயத்தனப்படாவிட்டாலும், மெட்ரிகுலேஷன் பரீக்ஷை வரையிலாவது வாசித்து தேறவேண்டும்—என்றுசொன்னார்.

SOCIAL REFORM LECTURES.

ஆசார சீர்திருத்த ப்ரஸங்கங்கள்,

தியஸாபிகல் ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்ஸஸ் பெஸண்ட் ஆசார சீர்திருத்த ஸம்பந்தமாய் சென்னையில் சில ப்ரஸங்கள் செய்தார். அவைகளில் அந்யதேச ப்ரயாணத்தைப்பற்றிப் பேசியபோது, இந்தியர்கள் முற்காலத்தில் அந்யதேச ப்ரயாணம் ரொம்ப செய்துவந்தார்கள் என்றும், இப்போது இந்தியர்கள் அந்ய தேசங்களுக்குப் போய் கல்விகற்று, வ்யாபாரம் முதலியவைகளில் அபிவ்ருத்தியடைய முயலவேண்டும் என்றும், சொன்னார். பால்ய விவாகத்தின் கெடுதியைப்பற்றிப் பேசினபோது, ஹிந்துக்கள் விவாக விஷயங்களில் வேதத்தையே ஆதாரமாகக் கொள்ளவேண்டு மென்றும், வேதத்தை ஆராய்ந்து பார்த்தால் பெண்களுக்கு வயஸான பிறகே கல்யாணம் செய்யவேண்டுமென்று தெரியவருகிற தென்றும், பால்ய விவாகத்தால் பெண்களின் தேகத்துக்கும், அந்தப் பெண்களின் குழந்தைகளுடைய தேகத்துக்கும், கெடுதி யேற்படுவதோடு, பால்ய விதவைகள் அதிகரிக்க ஹேதுவாகிறதென்றும், தற்காலம் பால்ய விதவைகள் ரொம்பவும் அதிக மாயிருப்பதற்கு இந்தபால்ய விவாகமே காரணமாகும்என்றும், ஆகையால் பால்ய விவாகத்தை ஒழித்துவிடவேண்டுமென்றும், சொன்னார். வீட்டிலுள்ள பாட்டிமார்களும் தாய்மார்களும் "சின்னம் சிறுசாக" இருக்கும் போதே கல்யாணம் செய்து பார்க்க வேண்டுமென்று புருஷர்களைத் தொந்தரை செய்யாவிட்டால் முக்கால் வாசி பால்ய விவாகங்கள் நடக்கமாட்டா.

GIFT BY A HINDU LADY.

ஒரு ஹிந்து ஸ்த்ரீயின் நன் கோடை.

அல்லகபாத்திலுள்ள (ப்ரயாகை) சந்துராணி மகாதேவ ப்ராஸாத் ஸாஹிப் என்பவரின் கடைசி தங்கைக்கு ஒரு ஜமீன்தாரியுண்டு. அந்த ஸ்த்ரீ ஸமீபத்தில் இறந்துபோனபோது தனது ஆஸ்தியை யெல்லாம் காயஸ்த ஜாதி மாணவர்களுடைய உதவிக்காகக் கொடுத்து உதவினுள். ஸொத்து முழுமையும் 5-லக்ஷம் ரூபாய் பெறுமாம். அதலிருந்து வருஷம் ஒன்றுக்கு 20,000 ரூபாய் வரும்படி கிடைக்கிறதாம். அந்த ஸ்த்ரீயின் ஸொந்த ஊராகிய பீவானில் கட்டப்பட்டுவரும் ஒரு சிவன் கோவில் செலவுக்காக வருஷம் ஆயிரம் ரூபாய் அந்த வரும்படியிலிருந்து கொடுக்கவேண்டுமாம். அந்த ஹிந்துஸ்த்ரீ வித்யாபிவ்ருத்தியில் நோக்கம் கொண்டிருந்தது மிகவும் புகழத்தக்கது.

JILAPY.

ஜிலேபி.

22ரூ எடை கோதிமிரவை, 2ரூ-எடை அரிசிமா, 5 ரூ எடை உளுந்துமா, இவைகளை ஒரு பாத்ரத்தில் போட்டு கலந்து, 4½ரூ-எடை நெய்யும் கொஞ்சம் பாலும் சேர்த்து நன்ருய்ப் பிசையவேண்டும். மாவைக் கையிலெடுத்துப்பார்த்தால் ஒருமுழம் நீளம் அறுந்து விழாமல் தொங்கும் வரையில் கெட்டியாய்ப்பிசையவேண்டும். இதற்குப்பிறகு 24ரூ எடை சர்க்கரையில் 6 ரூ எடை பாலைச் சேர்த்துக் கரைத்து பாணவிபை அடுப்பில் வைத்து ஜீரா செய்துகொள்ளவேண்டும். மாவை ஜிலேபி பிழிவதற்காக த்வாரம் செய்த கெட்டித்துணியில் வைத்து அடுப்பில் கொதிக்கும் நெய்யில் வட்டமாகப் பிழியவேண்டும். நன்ருய் வெந்த பிறகு இதையெடுத்து நெய் வடிந்துபோன பின் ஜீராவில் போட்டால் தித்திப்பு இதற்குப் பிடிக்கும்.

MEDICAL HELP FOR WOMEN.

ஸ்த்ரீகளுக்கு வைத்ய உதவி.

30 வருஷங்களுக்கு முன் நமது வைஸ்ராயாக இருந்த லார்ட் டப்பரினுடைய மனைவி பார்யையாகிய வுண்டஸ் ஆப் டப்பரின் ஹிந்து ஸ்த்ரீகளுக்கு வைத்ய ஸஹாயம் இருக்கவேண்டிய தன் அவச்யத்தை அறிந்து ஒரு நிதி ஏற்படுத்தினர். அந்த நிதியிலிருந்து உதவி பெற்று வைத்யப் பரிக்ஷைகளுக்குப்போய் தேறி வைத்யர்களாக அனேகர் வருகிருர்கள். இந்த நிதிக்கு ப்ரவிடெண்டாயிருக்கும் லேடி ஹார்டிஞ்ச் நிதி போதாதிருக்கிற விஷயத்தை இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தார். அதன் பலனுக வருஷம் ஒன்றுக்கு 1½ லக்ஷம் ரூபாய் ஸாங்ஷனுயிருக்கிறது.

AN INDUSTRIAL SCHOOL FOR GIRLS.

பெண்களுக்காக கைத்தொழில் பாடசாலை.

தையல்வேலை, பிரம்பு வேலை, பாய்பின்னல் முதலிய கைத்தொழில்களையும், சித்ரம் எழுதல், வர்ணம் தீட்டுதல் ஆகிய சித்ரத்தொழில்களையும், குடும்பநிர்வாகம், ஸுகாதாரம், ஆகிய பொதுக் கல்வியையும், பெண்களுக்குக் கற்பிக்கும் உத்தேசத்தோடு சீக்ரத்தில் மைஸூரில் ஒரு பாலிகாபாடசாலை ஏற்படுத்தப்போகிருர்களாம். பாடசாலை மானேஜர்கள் கவர்ன்மெண்டாரை இந்தப் பாடசாலை நடப்பதற்கு முதல் வருஷத்துக்கு 4500 ரூபாய் க்ராண்ட் கொடுக்கும்படி வேண்டிக் கொள்வார்கள் என்று ப்ரஸ்தாபம்.

A LADY JUDGE.

ஒரு ஸ்த்ரீ ஜட்ஜ்.

நார்வே என்பது ஐரோப்பா கண்டத்திலுள்ள ஒரு தேசம். இந்த தேசத்தைச்சேர்ந்த மிஸ்ருத்ஸொரென்ஸன் 1900 ஆம் வருஷத்தில் சட்டப்பரிக்ஷையில் தேறினர். வக்கீலாக ப்ராக்டிஸ்செய்து கொண்டிருந்த இவருக்கு ஹெம்பர்பெஸ்ட் என்னும் பட்டணத்தில் ஜட்ஜாயிருக்கும்படி நியமனமாயிருக்கிறது. முதன் முதலாய் ஜட்ஜ் உத்யோகத்துக்கு நியமிக்கப்பட்ட ஸ்த்ரீ இவர்தான்.

Story and Biography.

கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

THE CHASTITY OF RUPAVATI

BY.
T. S. VAIDYANATHAN.

ரூபாவதியின் கற்பு மகிமை.

நமது தேசத்தின் வடபாகத்திலே 'காளி' என்றொருநதி யுண்டு. அந்நதிதீரத்தில் பசுமையான வயல்களையுடையதும், வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புகளும், ஆல், அரசு, பிலா முதலிய விருக்ஷங்கள் ஏராளமாய் உள்ளதும், நல்ல யோக்யர்களும், க்ருஹஸ்தர்களும், வாஸம் செய்யத் தகுந்தது மான 'சாரங்கபுரம்' என்றொரு க்ராமமுண்டு. அப்படிப்பட்ட க்ராமத்தில் சற்றேறக்குறைய 500 வருஷங்களுக்கு முன்னே ஒரு சிறந்த வைச்யகுலத்திலே திவ்ய அழகோடு கூடின ஒரு பெண் ஜனித்தாள். அந்தப் பெண் அதிக ரூபலாவண்யமுடையவளா யிருந்தபடியால் அவளுடைய பெற்றோர்கள் அந்தக் குழந்தைக்கு 'ரூபாவதி' என்று நாமகரணமிட்டு அழைத்து வந்தார்கள். குழந்தைக்கு வயது ஆக ஆக, பெருந்தன்மையும், அழகும் வ்ருத்தியாகிக் கொண்டே வந்தன. கல்யாணத்துக்கு ஸரியான பருவகாலம் வரவே, பெற்றோர்கள் மாப்பிள்ளைதேட ஆரம்பித்தார்கள்.

நிற்க, ரூபாவதியின் பெயர் தேசம் பூராவும் பரவி விட்டது. அதற்குக் காரணம் அவள் அதிகரூபவதியா யிருந்தாளென்றாவது அல்லது மெலிந்த தேகத்தையுடையவளாய், பெருந்தன்மையோடு கூடினவளா யிருந்தாளென்றாவ தல்ல. முக்ய காரணம் யாதெனில் அவளது கண்டத்திலிருந்து வெளிப்படும்தொனியானது குயிலும் கேட்டு வெட்கமடையும்படி அவ்வளவு இனிமையாயிருந்தது. ஸங்கீதத்தில் அபாரமான ஞானத்தை ஈச்வரன் அவளுக்கு அளித்திருந்தார். நமது தேசத்து கர்னாடக ஸங்கீதத்தில் ரத்னாகரம் முதலிய அரிய க்ரந்தங்களை நன்றாய் படித்திருந்தாள். ஆகவே இது ஒன்று மாத்ரமே அவளது கீர்த்தியைப் பரவச்செய்தது. தேசத்தில் இவளுக்கு ஸமானமாக பாடப் பட்டவள் கிடையாது என்று க்யாதிபரவி விட்டது.

இது இப்படியிருக்க, மேற்கு துலுக்கநாடுகளிலிருந்து வந்த பட்டாணிய யுத்த வீரனான 'பாஸ்பஹதூர்' என்பவன் கொடிய யுத்தம் புரிந்து மாளவதேசத்து ராஜாவை யுத்தகளத்தில் தோற்கடித்து க்ஷ தேசத்தைக்கைப் பற்றிக் கொண்டான். இவனிடத்தில் இருந்த சிறந்த குணமாவது, யுத்தங்கள் முடிந்த பிற்பாடும், ராஜ கார்யங்கள், அதாவது தான் செய்யவேண்டிய கார்யங்கள் செய்து முடித்த பிற்பாடும், இன்னும் மற்றப்படி ஒழிந்த நேரங்களிலும், ஸங்கீதத்தில் அளவற்ற ஆசையைக் கொண்டவனாய் பிடில், வீணை முதலிய வாத்யங்களை வாசிப்பது வழக்கம். அவைகளை எடுத்து வாசிக்கத்தொடங்கி விட்டானென்றால் சாப்பாட்டுஞாபகம் கூடஇராது. யாதொருசளைப்புமில்லாமல் மணிக்கணக்காக வாசிப்பான். பாட்டுகளும் கவனம் செய்வான். இவன் இப்படி யிருந்து கொண்டிருக்கையில், மேலே சொன்ன ரூபாவதியின் பெயர் இவன் காதுக்கு எட்டிற்று. அவளுக்கும் ஸங்கீதத்தில் அபாரமான ஞானம் இருப்பதை அறிந்தோ, அல்லது அவள் அழகாயிருப்பதை உத்தேசித்தோ, இன்னும் என்ன காரணத்தைக் கருதியோ, பாஸ்பஹதூர் ரூபாவதியையே பத்னியாயடைய வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, ரூபாவதியின் பெற்றோர்களுக்கு தனது விருப்பத்தைத் தெரிவித்தான். உடனே

அவர்களும் ஸம்மதித்து ஒரு நல்ல தினம் பார்த்து இருவருக்கும் பாணிக்ரஹணம் செய்வித்தார்கள். பாஸ்பகதூருக்கு தனது மனோரதம் நிறைவேறவே, ரூபாவதியும் இவனும் ஒரே மனமாக ஒத்து வாழ்ந்துவந்தார்கள். சரீரம் மாத்ரம் இரண்டாக இருந்தனவேயொழிய, இவள் மனம் எப்பொழுதும் அவனிடத்திலேயும், அவன் மனம் இவளை விட்டு அகலாமலும் இருந்து கொண்டே யிருந்தன. இருவரும் ஸங்கீத வித்வான்களாதலால், ஸதா ஸங்கீதத்திலேயே காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். பாஸ்பஹதூர் ரூபாவதியிடம் அதிக ப்ரியம் வைத்திருந்ததால் அரண்மனையிலும் ராஜ்யத்திலும், அவள் வைத்ததே சட்டமாக நடந்துவந்தது. இவள் மனஸுக்கு விரோதமாக அவன் ஒரு கார்யமும் செய்கிறதில்லை. அவளது புத்திசாலித்தனமோவென்றால், தன் பர்த்தா சொன்னதற்கு அன்னிதா சொல்லாமலும், எப்பொழுதும் அவன் மனம் குளிர்ந்திருக்கும்படி அவனுக்கு ரம்யமாயிருக்கிற கானங்களைப் பாடிக்கொண்டும் மஹாபதிவ்ரதை என்றுபேர் பெற்றிருந்தாள். அவள் அணிந்திருந்த நகையெல்லாம் ஏராளமான த்ரவியம் செலவழித்து வந்ததாயிருக்கும். உடுத்தியிருந்த வஸ்த்ரம் அபூர்வமான நெசவாயிருக்கும். அவள் இருந்த அரண்மனை பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருந்தது. இவர்கள் இருவரும் இந்த ப்ரகாரம் ராஜ்ய வ்யவஹாரங்களைக்கூட கவனியாமல் ஸங்கீதத்திலேயே காலத்தைப் போக்கினார்கள். ஆகவே பாஸ்பஹதூருக்கு இருந்த கௌரவம் குன்ற ஆரம்பித்துவிட்டது. வெளியில் மந்த்ரிகள் காத்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் காத்துக்கொண்டிருக்கவேண்டியது தான். பாஸ்பஹதூருக்கு அந்த ஞாபகமேயிராது. ரூபாவதியும் அவனைவெளியில் போகவிடாமல் திவ்யமான கானங்களினால் அவன் மனஸைக்குளிரச்செய்து ராஜ்யத்தைப் பற்றின விசாரமேயில்லாமலிருந்து விட்டாள். வீணை, தம்பூரு, ம்ருதங்கம், முதலிய வாத்யங்கள் இருந்தால் போதுமானது. வேறு ஒன்றும் வேண்டியதில்லை. கொஞ்சகாலம் இப்படியிருந்தது. பாஸ்பஹதூருடைய வேலையெல்லாம் ஒரு புத்தி கூர்மையுள்ள திவான் கவனித்து வந்தான். இப்படி ராஜ்ய கார்யங்களை கவனிக்க ஒரு திவான் இருந்து விட்டானென்றால், பாஸ்பஹதூரும் ரூபாவதியும் ஏன் ஒய்ச்சல் ஒழிவு இல்லாமல் பாடிக்கொண்டிருக்கக் கூடாது? ஆனால் இப்படி எவ்வளவு காலந்தான் நடக்கும் மந்த்ரியும் 7-வருஷகாலம் தன்னாலான மட்டிலும் புத்திசாலித்தனமாகவே வேலையை நடத்தி வந்தான். என்ன இருந்த போதிலும், ராஜா சொல்லுக்குக் கீழ்ப்படிகிறது போல் திவான் சொல்லுக்கு ஜனங்கள் கீழ்ப்படியவில்லை. ராஜ்யம் நசித்துப் போய்விடும் போலாய் விட்டது.

இப்படி ஓர் ராஜ்யம், ஸரியான ராஜா இல்லாமல் பாழடைகிறதென்றும், ஒரு திவானால் மேல்பார்வை யிடப்பட்டு வருகிறதென்றும், ஆகவே சீக்ரத்தில் ஒரு ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு வந்தால் உடனே ராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்றும் ஸமாசாரம் டில்லியில் அரசு புரிந்து கொண்டிருந்த ஆக்பருக்கு எட்டிற்று. உடனே ஆக்பர்தன்னிடம் ஸர்தார் வேலை பார்த்துக்கொண்டிருந்தவனும் மிகுந்த தைர்யசாலியுமான ஆதாம்கானை ஒரு ஸைன்யத்துடன் அனுப்பி, மாளவ தேசத்தைக் கைப்பற்ற உத்தரவு கொடுத்தான். சீக்ரத்தில் பெரிய ஸைன்யத்துடன் ஆதாம்கான் மாளவ தேசத்துக்கு வந்து சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தான். ஒரு நாள் பாஸ்பஹதூர் வெகு ஸ்வாரஸ்யமாக ரூபாவதியுடன் பாடிக்கொண்டிருக்கும்பொழுது அரண்மனைக்கு வெளியில் அழுகைக்குரலும், கதறுகிறவர்கள் குரலும் கேட்டன. பாஸ்பஹ

தூர் கவனிக்காமலிருந்து விட்டான். ஜனங்கள் ஸஹிக்கமாட்டாமல் அரண்மனைக்குள் நுழைந்து கதவை உடைத்துக் கொண்டு பாஸ்பஹாதூர் இருந்த இடம்சேர்ந்து "ஐயையோ, மஹாராஜா, சத்ரு வந்து எங்களையெல்லாம் கொல்லுகிறான். தாங்கள் பாடிக்கொண்டிருக்கிறீர்களே. எங்களைக் காப்பாற்றவேண்டாமா?" என்றுகட்டிடம் நடுங்கும்படியாக அழுதார்கள். அப்பொழுதுதான் பாஸ்பஹாதூருக்கு விஷயம் இன்னதென்று தெரியவந்தது. உடனே யுத்த வீரன் அணிய வேண்டிய உடுப்புகளை அணிந்து கொண்டு, பளபள வென்று மின்னும் கத்தியைக் கையில் உருவி எடுத்துக்கொண்டு, தனது ப்ரியமான குதிரையின் பேரில் ஏறிக்கொண்டவனாய், அநேக நாட்களாய் பார்த்திராத தனது ஸைன்யத்தை ஒருங்கு சேர்த்து யுத்த களத்தில் போய் தயாராயினான். யுத்தமும் அதிகோரமாகவே நடந்தது. இருந்த போதிலும் பாஸ்பஹாதூர் ஸைன்யம் பின்வாங்க ஆரம்பித்து விட்டது. இதற்குக் காரணம் என்னவெனில்,பாஸ்பஹாதூர், அநேகவருஷங்களாக தனது ஸைன்யத்தைப் பற்றியே கவனமில்லாதவனாயிருந்ததும், ஆகவே அவர்கள் தங்களது யுத்த அப்யாஸங்களையெல்லாம் மறந்திருந்ததுமே. கடைசியில் பாஸ்பஹாதூர் தோற்றுப்போய் ஏதோ ஒரு துஷ்ட ம்ருகங்கள் ஸஞ்சாரம் செய்யும் அரண்யத்துக்குள் புகுந்து தப்பித்துக் கொண்டான். ஆனால் அவன் பிற்பாடு என்ன கதியடைந்தான் என்பது விளங்கவில்லை. நிற்க அரண்மனையில் ரூபாவதி புன்சிரிப்புடன் மிக்க ஆவலோடு தன் பர்த்தா யுத்தத்தில் ஜயித்து விட்டு வருவார் என்று நினைத்து அவரை எதிர்கொண்டு அழைக்கக் காத்துக்கொண்டிருந்தாள். ஒரு நாளும் காதில் கேட்டிராத காலடி சப்தம் ரூபாவதியின் காதில்விழுந்தது. என்னவோ வென்று பயந்தாள். துடித்தாள். கதறினாள். தீடிரென்று படுதா தூக்கப்பட்டது. ரூபாவதியின்முன்னால் ஆஜானபாஹுவாயும், சிறந்த உடுப்புகளை அணிந்தவனாயும், யுத்த சின்னங்களை யுடையவனாயுமுள்ள ஆதாம்கான் நின்றான். அவன் தேகத்தைப்பார்த்தவுடனேயே கதலி வ்ருக்ஷம்போல் நடுக்கங் கொண்டாள். ஆனால் ஆதாம் கானோ வென்றால் புன் சிரிப்புக்கொண்டவனாய், ரூபாவதியைப் பார்த்து, 'என் கண்மணியே, நீ ஏன் பயப்படுகிறாய்? உன்னுடைய பர்த்தாவோ இறந்து போய் விட்டான். இனிமேல் உன்னை ஆதரிக்க நானிருக்கிறேன். ஆகையினால் இன்றைய ராத்திரி உன்னை மணம் செய்துகொள்கிறேன், என்று சொன்னான். ரூபாவதிக்கு ஒன்றும் சொல்ல நாவெழவில்லை. பிற்பாடு தனது துக்கம் தாங்கமுடியாமல் போகவே, 'ஹா ! நாதா' நீங்கள் எங்கே போய் விட்டீர்கள் ? என்னை ஏன் இப்படி நிர்க்கதியாகவிட்டு விட்டீர்கள் ? நீங்கள் இறந்த பிற்பாடு எனக்கு எதற்காக உயிர் இருக்கிறது? நீங்கள் எந்தலோகம் செல்கிறீர்களோ அந்தலோகத்துக்கு நானும் வருகிறேன், என்று கதறினவளாய் மூர்ச்சைவிட்டுக் கீழே விழுந்தாள். இப்படி ஒருமணி நேரம் ப்ரக்ஞையில்லாமலிருந்தாள். பிற்பாடு ஒரு யோசனை செய்துகொண்டு எழுந்திருந்து, புன் சிரிப்போடு கூடினவளாய் ஆதாம் கானைப் பார்த்து உங்கள் இஷ்ட ப்ரகாரம் இன்று ராத்ரி நடக்கிறேன்' என்று சொல்லிவிட்டு தான் இருந்த ஹாலை விட்டு தாதிகள் இருக்குமிடம் சென்று, 'தாதிமார்களே, இன்றையதினந்தான் என் மனோரதம் நிறைவேறியது. என் புதுபர்த்தாவுடன் இன்று ராத்ரிகளித்திருக்கப் போகிறேன். ஆகையினால்தாமஸமில்லாமல் எனக்கு இருக்கும் நகைகளை யெல்லாம் எனக்குப் போட்டு, விலை யுயர்ந்த பட்டாடைகளை எனக்கு உடுத்துங்கள்' என்று ஏவினாள். அவர்களும் இது ஏன்னமோ விபரீதம் நடக்கப்போகிறதென்று நினைத்து ரூபாவதியின் இஷ்ட ப்ரகா

ரம் அவளை அலங்கரித்தார்கள். ரூபாவதி வாஸனைமிகுந்த அத்தர், பன்னீர் முதலியவாஸனை த்ரவ்யங்களை தேகத்தில் பூசிக்கொண்டாள். முகத்தில்மாத்ரம் த்ருஷ்டிப்பட்டுப் போய்விடாமலிருப்பதற்காக ஒரு மெல்லிய பட்டுக்குட்டையைக்கொண்டு முகத்தை மூடிக்கொண்டாள். இவ்வளவு வேஷத்தோடு படுக்கையறை சேர்ந்து ஏதோ ஒரு த்ராவகத்தை அருந்திவிட்டு படுக்கையில் சாய்ந்தாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஆதம்கானும் தனது கார்யம் கைகூடிவிட்டது என்று எண்ணி, உயர்ந்த உடுப்புகளை அணிந்துகொண்டு ரூபாவதியிருந்தஅறையைநோக்கிவந்து, அவளருகில்போனான். வாசல்படி கதவில் தாதி ஒளிந்து நின்றுகொடிருந்தாள். அருகில் போனான். ரூபாவதியின் முகம் புன் சிரிப்பு முகமாகவேயிருந்தது. உடனே என் கண்மணியே, 'ஏன் தூங்குகிறாய்?' என்று சொல்லி அவள் கையைத்தொட்டான் ஆனால் அந்தக்கையோ பனிக்கட்டிக்கு ஸமானமாயிருந்தது. உடனே பயந்தவனாய் அவள் நாசியில் ச்வாஸம் வருகிறதாவென்று பார்த்தான்; மூச்சையும் காணோம், பேச்சையும் காணோம். அலறிக்கொண்டு வெளியில் வந்தான். ரூபாவதி ஒரே தூக்கமாகத் தூங்கிவிட்டாள். த்ராவகம் தன் வேலையை நன்றாய்ச்செய்து விட்டது. பிற்பாடு தாதிமார்கள் அவளருகில் வந்து பார்த்தார்கள். ரூபாவதியின் தலையணையின் அடியில் ஒரு கடிதம் கண்டெடுத்தார்கள். அதில் "பாஸ்பஹதூரை விட்டுவிட்டு மனமே, உனக்கு இந்த லோகத்தில் என்ன ஸுகம் இருக்கிறது. ஒன்றும் கிடையாது. ஆகையினால் நானும் அவர் போகும் லோகம் போகிறேன், போகிறேன்." என்று கண்டிருந்தது. எல்லாரும் ஆச்சர்யப் பட்டார்கள். ஆதாம் கான் ஏமாந்து போனான். ரூபாவதியோ சாகும்வரையில் பதிவ்ரதையாகவேயிருந்தாள்.

டி. எஸ். வைத்யநாதன்.

MR. ROCKEFELLER & SHEEP.

மிஸ்டர் ராக்பெல்லரும் ஆடும்.

கால்ப் என்பது பந்தைக்கொண்டு ஆடும் ஒரு விளையாட்டு. இதற்கு புல் நிலமே உபயோகமுள்ளது. ஆனால் புல் அடர்த்தியாய் வளராமல் குட்டையாயிருக்கவேண்டும். இதற்காக யந்த்ரங்களைக் கொண்டு அடிக்கடி புல்லை அரிவது வழக்கம். உலகத்திலுள்ள பணக்காரர்களெல்லாரையும்விடப் பணக்காரர் அமெரிக்கா வாஸியாகிய மிஸ்டர் ராக்பெல்லர். ஒரு நாள் இவர் கால்ப் விளையாடிக்கொண்டிருக்கையில் ஒரு ஸ்நேகிதர் ராக்பெல்லரிடம் "இங்கேயுள்ள புல்லை வெட்டுவதற்குப் பிடிக்கும் செலவு அனாவச்யம். தாங்கள் 400 ஆடுகள் வாங்கி மேயவிட்டால் புல் வெட்ட செலவாகும் பணம் மீதியாகுமே!" என்று சொன்னார். ராக்பெல்லர் "என்னவாகும்?" என்று கேட்டார். அதற்கு 480 பவுன் ஆகுமென்றார். ராக் பெல்லர் "அவ்வளவா? ரொம்ப அதிகமாயிருக்கிறதே!" என்று சொன்னார். கொஞ்சகாலத்துக்குப் பிறகு ஆடு வாங்கும் விலையையும், புல்வெட்டும் மோடாருக்குப் பிடிக்கும் செலவையும் கணக்குப் போட்டுப் பார்த்ததில் ஸ்நேகிதன் சொன்னதின் உண்மை விளங்கினதாம். உடனே அவர் 400 ஆடுகள் வாங்க உத்திரவு செய்தார். இவைகள் புல் நிலத்தில் மேய்வதால் யந்த்ரம் புல்லை அரிவதைப்போல் மேய்ந்து விடுகின்றன.

Departmental Notes.

பகுதிக்குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

AN EDITOR AND HIS REPORTER.

பத்ராதிபரும் ரிபோர்டரும்.

ஒரு பத்ராதிபர் தமது கொள்கை எப்போதும் உண்மையையும் பிழைகள் இல்லாமலும் எழுதவேண்டுமென்பதென்று ப்ரதிக்ஞை செய்துகொண்டு அப்படியே தமது உதவி ஆசிரியர்களும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று சொல்லியிருந்தார். அதன்படியே தமது மேஜைக்கருகில் "பிழையின்மை; பிழையின்மை; பிழையின்மை." என்று ஒரு அட்டையில் எழுதித் தொங்கவிட்டிருந்தார். ஒருநாள் ஒரு ரிபோர்டர் ஒரு மீட்டிங்கைப்பற்றிய விவரமடங்கிய வ்யாஸம் ஒன்று எழுதிக்கொண்டுவந்து பத்ராதிபரிடம் கொடுத்தார். அதில் "மூவாயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது கண்களும் ப்ரஸங்கியைப் பார்த்த வண்ணமாகவே இருந்தன" என்று ஒருவாக்யம் இருந்தது.

"இதென்னது ரொம்ப அஸந்தர்ப்பமான வாக்யம்" என்று பத்ராதிபர் கேட்டார்.

"அங்கே வந்திருந்தவர்களில் ஒருவருக்கு ஒருகண் பொட்டை" என்று பதில் சொன்னார், ரிபோர்டர்.

FINANCIAL IGNORANCE.

அர்த்தசாஸ்த்ரம் தெரியாமை.

மிஸ்டர் லேவாதேவி:—சொல்லுவதில் ப்ரயோஜமென்ன. என்ன படித்துப் படித்துச் சொன்ன போதிலும் செல்வ சாஸ்த்ரத்தின் ப்ரதம அம்சங்கள் ஒரு நாளும் ஸ்த்ரீகளுக்கு பிடிபடப் போகிறதில்லை.

மிஸ்டர் ராமஸ்வாமி:—ஸமாசாரம் என்ன, என்ன நடந்துவிட்டது?

மிஸ்டர் லேவாதேவி:—ஸமாசாரமா? நேற்று நான் ஊரில் இல்லை. குழந்தை ஒரு அரைக்கால் ரூபாயை விழுங்கிவிட்டது. அரைக்கால் ரூபாய்போய்விட்டால் என்ன ப்ரமாதம் வந்துவிட்டது? என் மனைவி வைத்யரைக்கூப்பிட்டு அவருக்கு 5-ரூபாய்கொடுத்து அந்த அரைக்கால் ரூபாயை வெளியிலே எடுத்திருக்கிறாள்!

I DON'T HEAR WELL.

சொல்லுகிறது நன்றாய்க் கேட்கவில்லை.

யாராவது ஒருவர் தன்னை ஒருவிஷயத்தைப் பற்றிக்கேட்டு அதற்குத்தான் பதில் சொல்ல இஷ்டப்படாவிட்டால் தனக்குக்காது மந்தம் என்று ஒரு குடியானவன் பாசாங்கு செய்துவந்தான். ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரன் அவனைப்பார்த்து, "எனது வண்டி ரிபேராய்க் கொண்டிருக்கிறது. உன் வண்டியைச்சற்றுக் கொடுக்கிறாயா? என்று கேட்டான்.

குடியானவன்:—"நீ உரத்துப்பேசவேண்டும். நீ சொல்வது நன்றாய்க் கேட்கவில்லை—எப்படியும் எனது வண்டியைக்கொடுக்கமுடியாது."

WEIGHT OF LETTER

கடிதத்தின் நிறை.

போஸ்ட் மாஸ்டர் :—உம்முடைய கடிதம் போகாது. அதிக நிறையிருக்கிறது.

நாட்டுப்புறத்தான்: அப்படியென்றாலென்ன? ஏனையா?

போஸ்ட் மாஸ்டர் :—கடிதம் அதிக நிறையிருக்கிறது. இன்னொரு ஸ்டாம்ப் ஒட்டவேண்டும்.

நாட்டுப்புறத்தான்:—என்ன, ஐயா, கேலியா செய்கிறீர்? மறுபடியும் ஒரு ஸ்டாம்பை ஒட்டினால் கடிதம் இப்பொழுதிருப்பதைவிட அதிக நிறைவுள்ளதாகவல்லவா ஆய்விடும்!

CURIOSITIES.
விநோதங்கள்.

ONE GRAIN OF WHEAT.
ஒரு கோதுமை தான்யம்.

ப்ராம்மணார்த்தம் சாப்பிட்டுவிட்டு குட்டித் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்த ஒரு ப்ராம்மணன் தனது தலையில் இருந்த எள்ளைப் பார்த்து அதை விதைத்தால் ஒரு செடியாகி, அதிலிருந்து கிடைக்கும் எள்ளை மறுபடியும் விதைத்து, இப்படியே விதைத்து வந்த பலனை மறுபடியும் விதைத்து, கடைசியில் ஏராளமான ஸொத்து, வீடு, வாசல், பணம், முதலியவை ஸம்பாதிக்கலாம் என்று எண்ணிக் கடைசியில் யோசனை பலமாகித்திண்ணையிலிருந்து கீழே விழுந்து விட்டான் என்று ஒரு கதை சொல் வார்கள். ஜெர்மெனியில் ப்ராமணார்த்தம் கிடை யாததால் அங்குள்ள ஒரு தத்வ சாஸ்த்ரி எள்ளுக்குப் பதிலாக கோதுமையை எடுத்துக் கொண்டு கணக்குப் போட்டிருக்கிறாராம்.

ஒரு கோதுமை தான்யத்தை விதைத்தால் அதிலிருந்து 50 தான்யமணிகள் கிடைக் கின்றன. இந்த 50 மணிகளும் ஒவ்வொன் றும் 50 மணிகள் வீதம் கொடுக்கும். இப்படி யே பயிர் செய்தால் மூன்றுவது வருஷத்தில் அந்தப் பயிரிலிருந்து கிடைக்கும் மாஸலில் 300 பேருக்கு ஒரு வேளைச் சாப்பாடாகும் என்றும், கோதுமையின் தவிடு 8 பன்றி களுக்கு ஆகாரமாகு மென்றும், கணக்கிட்டி ருக்கிறார். 12-வது வருஷத்தில் கிடைக்கும் மாஸலில் இந்த உலகத்திலுள்ள ஜனங்களுக் கெல்லாம் அவர்களுடைய வாழ்நாள் முழு வதும் போதுமான ஆகாரமாகுமாம்! ஆனால் கிடைத்த மணிகளில் ஒன்றையேனும் சிதறி விடாமல் ஜாக்ரதையாக வைத்திருந்து பயிரிட வேண்டும். மீற்க, ஒரு அமெரிக்கன் பத்ரிகை ஒரு பெட்டைக்கோழியின் ஸந்ததி எப்படி வ்ருத்தியாகும் என்று கணக்கிட்டிருக்கிறது. ஒரு கோழி வருஷத்தில் 100 முட்டையிடும். அந்த நூறு முட்டையும் நூறு குஞ்சுகளா கும். அவற்றில் 50 பெட்டைகளாக இருக்க லாம். இவைகள் முட்டையிட்டால் இரண்டா வது வருஷத்தில் 5000 முட்டைகளாயின. இதில் 2500 பெட்டைகளாகும். இவை மூன்று வது வருஷத்தில் 2,50,000 முட்டைகளாகும். 5-வது வருஷத்தில் முதலில் கூறிய ஒரு பெட்டைக் கோழியின் ஸந்ததிகளால் கிடைக் கும் முட்டைகளையும், குஞ்சுகளையும் கொண்டு, அமெரிக்கா ஐக்ய மாகாணத்தில் உள்ள ஆண், பெண்குழந்தைகள் ஆகிய யாவருக்கும் தலை க்கு $3\frac{1}{2}$ முட்டைகளும், வறுத்த, வேகவைத்த அல்லது பொறித்த $3\frac{1}{2}$ கோழிக் குஞ்சுகளும் வீதம் கொடுக்கலாம். ஆனால் விதைத்ததெல் லாம் முளைக்கவேண்டுமே, இட்டதெல்லாம் பொறிக்க வேண்டுமே!

A NOVELIST'S ADVERTISEMENT.
ஒரு நாவலிஸ்டின் விளம்பரம்.

மிஸ்டர் கட்க்ளிப் ஹின் என்னும் "நாவல்" எழுதும் ஆசிரியர் ஸமீபத்தில் தாம் வஸிக்கும் ஊரில் உள்ள போஸ்டாபீஸில் பின் வரும் விளம்பரத்தை எழுதித்தொங்க விட்டாராம். "நேற்று என்னிடமிருந்து திருட்டுப்போன ஆப்பிள் பழங்களில் எல்லாம் பக்ஷிகள் கொல் வதற்காக எட்டி ஸத்து சேர்த்திருக்கிறதென் பதை பழங்கள் திருடியவருக்குத் தெரிவிக்க விருப்புகிறேன்.—வி. ஜே. கட்க்ளிப் ஹின்"

A NEST ON FIRE.
ஒரு கூடு நெருப்புப் பிடித்தது.

பம்பாய்க்கு ஸமீபத்திலுள்ள கொலாபா வில் சில நாட்களுக்கு முன்னால் ஒரு காக்கை யின் கூடு நெருப்புப் பற்றி யெரிந்தது. கூடு எப்படி நெருப்புப்பிடித்த தென்பது தெரிய வில்லை. காகங்கள அதைச்சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டு கூச்சலிட்டன. கூடோ வெகு சீக்ரம் சாம்பலாய்ப் போய்விட்டது. அக்னிபகவானுக்கு வேறொன்றும் அகப்பட வில்லை போலும்!

HINTS AND RECIPES.

யுக்திகளும் முறைகளும்.

TO TEST WOOLLEN GOODS.

கம்பளித்துணிகளைப் பரீக்ஷிக்க.

கம்பளி வஸ்த்ரங்களில் எவ்வளவு பருத்தி கலந்திருக்கிற தென்பதை யறிய பின் வருமாறு செய்யவேண்டும்.

ஒரு பீங்கான் பாதிரத்தில் ஜலம் ஊற்றி அதில் காஸ்டிக் ஸோடா என்னும் மருந்தை கொஞ்சம் ஜாஸ்தியாகப் போட்டுக்கரைத்து, அதில் பரீக்ஷிக்க வேண்டிய கம்பளித் துணியில் ஒரு துண்டைப்போட்டுக் காய்ச்சவேண்டும். இப்படிச் செய்வதால் அஸல் கம்பளியான பாகம் எரிந்து போய்விடுகிறது. பருத்தி பாகம் மாத்ரம் கெடாதபடி யிருக்கும். இதனுல் எவ்வளவு பாகம் சுத்த கம்பளியும் எவ்வளவு பாகம் பருத்தியும் இருக்கின்றன என்பதை ஸுலபமாய் அறிந்து கொள்ளலாம். பருத்தியைப் போக்கடித்து கம்பளி பாகத்தைக் கெடாமல் இருக்கும்படி செய்யவேண்டு மானல் ஸல்ப்யூரிக் ஆஸிட் என்னும் கந்தக த்ராவகத்தை அதிக ஜலத்தில் கரைத்து அதில் கம்பளித் துணித்துண்டைப் போட்டுக்காய்ச்ச வேண்டும். இந்த இரண்டு மருந்துகளும் இங்க்லீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

CLOCKS WHEN NOT IN USE.

உபயோகத்திலில்லாத கடியாரங்கள்.

கடியாரம் உபயோகத்திலில்லாத போது அது ஓடிக்கொண்டேயிருக்கும்படி விடுவதா அல்லது அது நின்று போகும்படி விட்டுவிடுகிறதா? கடியாரம் செய்பவர்கள் கடியாரங்கள் நின்று போகும்படி விடக்கூடாதென்று சொல்லுகிறார்கள். ஏனென்றால் கடியாரத்தில் பல பாகங்களிலுள்ள எண்ணெய்ப் பசையானது சக்கரம் முதலியவைகளில் கெட்டியாய்ப் போய் பிற்பாடு கடியாரத்துக்கு சாவி கொடுத்து அது ஓடினல் அது ஸரியாக மணி காட்டாது. மறுபடியும் ஒரு தடவை கடியாரத்தின் உட்புறத்தை சுத்தம் செய்து எண்ணெய் போட வேண்டியிருக்கும்.

WATER PROOFING BLOCKS OF WOOD.

மரத்துண்டுகள் ஜலத்தை உரிஞ்சாமலிருக்க.

மரத்துண்டுகளை ஜலத்தில் அமிழ்த்தி வைத்தால் அவைகள் ஜலத்தை உரிஞ்சியும் வேறு விதமாகவும் ஜலத்தால் பாதிக்கப்படுகின்றன. அந்தச் சிறிய மரத்துண்டுகளை ஆலிவ் ஆயில் என்னும் எண்ணெயில் போட்டு, 5 அல்லது 10 நிமிஷம் காய்ச்சினல் மரத்துண்டுகள் கெட்டியாகப் போவதோடு ஜலத்தால் மாறுபடக்கூடாதபடி ஆய்விடுகின்றன. இவைகளை முதலில் பாரபின் என்னும் மருந்தில் போட்டுக்காய்ச்சிப் பிறகு ஆலிவ் எண்ணெயில் போட்டுக்காய்ச்சினல் இன்னம் கெட்டியாவதோடு, ஜலத்தை உரிஞ்ச முடியாதபடி ஆகிவிடுகின்றன.

TO TEST TEA.

தேயிலையைப் பரீக்ஷிக்க.

தேயிலை ரங்காயிருப்பதற்காக ஏதாவது சாயமேற்றி யிருக்கும் பக்ஷத்தில் அதைக் கண்டுபிடிக்க ஒரு ஸுலபமான வழி இருக்கிறது. வெண்மையான கடுதாசியில் பரீக்ஷிக்க வேண்டிய தேயிலையில் கொஞ்சம் போட்டு ஸாதாரண அகன்ற கத்தியால் அந்தத் தேயிலையைத் தேய்க்க வேண்டும். இப்படிச் செய்வதினல் தேயிலை தூளாகிவிடும். நன்ருய்ப் பொடியாய் விட்டபிறகு அந்தப் பொடியைக் கீழே கொட்டிவிட்டு ப்ரஷ்ஷினல் கடுதாசியை நன்ருய்த் துடைத்து விடவும். தேயிலையில் ஏதாவது, செயற்கை வர்ணம் கலந்திருந்தால் கடுதாசியில் நீல நிறமான புள்ளிகள் அல்லது கோடுகள் காணப்படும். இவைகளை பூதக்கண்ணுடி கொண்டும், ஸாதாரணமாகவும் பார்த்தால் நன்ருய்த் தெரியும்.

TAMIL LITERATURE.
தமிழ்க் கல்வி.

ELEMENTS OF ECONOMICS.
செல்வ விருத்தி விளக்கம்.

இது சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜில் சரித்ர பாட உபன்யாஸகராகிய மிஸ்டர் டி. எஸ். ஸுப்ரமண்ய அய்யர் எழுதியது. இது பொருளாதார சாஸ்த்ரத்தைப்பற்றி விளக்கிக் கூறும் ஓர் புஸ்தகமாகும். நாகரீகமற்ற நிலைமையிலிருந்து நாளடைவில் ஜனங்கள் நாகரீகத்தை அடையும்போது எவ்விதம் செல்வ அபிவ்ருத்தி ஏற்படும் என்பதை ஆசிரியர் முதல் பாகத்தில் கதாரூபமாய் விளக்கிக் காட்டியிருக்கிறார். பிறகு செல்வத்தின் உற்பத்தி, பண்டம் கைமாறுதல், செல்வ விபாகம், தரித்ரத்தின் காரணங்கள், அதை ஒழிக்கும் வழிகள், கோவாபரேஷனால் தரித்ரத்தை எம்மட்டில் ஒழிக்கலாம் என்பது ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தாரமாய் எழுதியிருக்கிறார். நடை ஸுலபமாயும் இனிமையாயும் இருக்கிறது. விஷயங்கள் நன்கு விளங்கும்படி சித்ரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நமது நாட்டின் அபிவ்ருத்தியில் நோக்கமுடைய எவரும் இந்தப் புஸ்தகத்தை வாங்கி வாசித்துப் பயனடைவார்கள் என்று எண்ணுகிறோம். இதன் விலை ரூ. 1 வேண்டுவோர் சென்னை வேப்பேரி, எஸ். பி. ஸி. கே. புக் டெபோவுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

VAIDYA KALANIDHI.
வைத்ய கலாநிதி.

இது பண்டிதர் எம். துரைஸாமி அய்யங்காரால் நடத்தப்படும் ஒரு வைத்ய பத்ரிகை. இது நாற்பது பக்கம் கொண்டது. முதல் ஸஞ்சிகையில் வாதபித்த கபங்கள், ஹிந்துக்களின் நேத்ர ரோகம், ஆயுர் வேதத்தைப் படிக்கும் முறை, தேள் விஷம், க்ராமங்களில் நல்ல ஜலம் கிடைக்கச் செய்வது, முதலிய பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சார்ங்கதரஸம்ஹிதை என்னும் வைத்ய நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அதில் ஒரு பாகம் வெளியாகியிருக்கிறது. இதன் வருஷ சந்தா 3 ரூ. 12. அணா.

வேண்டுவோர் மானேஜர், வைத்ய கலாநிதி ஆபீஸ், 1, வெங்கையர் தெரு, மதராஸ், இ. என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Sri SOOTHAVANESWARAR PADHIKAM.
ஸ்ரீ சூதவனேசுவரர் பதிகம்.

இது திருநயம் அ. நரஸிம்ம பாரதியால் இயற்றப்பட்டது. இது கொத்தமங்கலம் என்னும் ஊரில் எழுந்தருளிய ஸூதவனேச்வரஸ்வாமிமேல் பாடப்பட்ட பதிகமாகும். அதே ஊரில் உள்ள ஸௌந்தரநாயகிமேல் அவர் பாடிய "ஸௌந்தரநாயகி" பஞ்சரத்னமும் இதில் சேர்ந்திருக்கிறது இவை இரண்டும் சொல்நயம் பொருள் நயத்தோடு இனிமையாய் இயற்றப்பட்டிருக்கின்றன. இதன் விலை. அணா 2. வேண்டுவோர் மதுரையில், மதுரை தமிழ்ச் சங்கம் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

REMARRI AGE.
புனர் விவாக போதம்.

இது மிஸ்டர் வரகவி-ந-பாஷா ஸாஹிபு "ரஞ்சித போதினி"க்கு புனர் விவாகத்தைப் பற்றி எழுதியிருந்த வ்யாஸத்தின் புஸ்தகரூபப் பதிப்பாகும். இதில் சிறு பெண்கள் விவாகத் தீங்கு என்னும் வ்யாஸமும் அடங்கியிருக்கிறது. இது தமிழ் நாட்டிலுள்ளார் இயற்கை ப்ரமாண நாகரீக நிலைமையைக் கைக்கொண்டு புனர் விவாகம் செய்வதால் ஏற்படும் நன்மையையும் அதில்லாததால் உண்டாகும் தீமைகளையும் பற்றிக் கூறுகிறது. இந்தப் புஸ்தகம் வேண்டுவோர் திருநாகேச்வரம் நா. பாஷா ஸாஹிப் அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

MISCELLANEOUS NEWS.

நாநா ஸங்கதி.

AN INDUSTRIAL ASSURANCE COMPANY.

ஒரு கைத்தொழில் இன்ஷுரென்ஸ் கம்பெனி.

சிறு தொழிலாளிகளுக்கும், பெரிய தொழிற்சாலைகளில் வேலையிலமர்ந்திருக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் ப்ரத்யேகமாய் ஒரு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனியும் இந்தியாவில் இதுவரையில் ஏற்படவில்லை. ஸமீபத்தில் அவர்களுக்கென்றே ஒரு இன்ஷுரென்ஸ் கம்பெனி பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதை யறிய ஸந்தோஷப்படுகிறோம். இங்லண்டிலும் அமெரிக்காவிலும் தொழிலாளிகளுடைய ஸௌகர்யத்திற்காக இன்ஷுரென்ஸ் கம்பெனிகள் இருந்து உதவிசெய்து வருகின்றன. லண்டனிலுள்ள ப்ருடன்ஷியல் இன்ஷுரென்ஸ் கம்பெனி ரொம்ப ப்ரபலமானது. அதில் சென்ற வருஷக்கடைசியில் 1-கோடியே 91-லக்ஷத்துச் சொச்சம் கைத்தொழிலாளிகள் இன்ஷ்யூர் செய்திருந்தார்கள். இத்தனை பேருக்கும் கம்பெனியார் நாளாவட்டத்தில் 150 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். இந்தத்தொகை கொடுத்த பிறகும் கூட அந்தக் கம்பெனிக்கு கோடிக் கணக்கான பணம்மிச்சமாயிருக்குமாம். இதைப்போலவே அமெரிக்காவிலுள்ள ந்யூ யார்க்கில் இருக்கும் மெட்ராபாலிடன் லைப் இன்ஷுரென்ஸ் கம்பெனியில் பாலிஸி யெடுத்துக் கொண்டிருப்பவர்கள் ஸுமார் $1\frac{1}{4}$ கோடியாகும். இந்தக் கம்பெனிகளும் மற்றவைகளும் மேல் நாடுகளில் இருப்பதால் தொழிலாளிகளுக்கு ரொம்ப நன்மை ஏற்பட்டு வருகிறது. நமது நாட்டில் இதுவரையில் இத்தகைய தொழிலாளிகள் இன்ஷுரென்ஸ் கம்பெனி யில்லாதிருந்த குறையை நீக்கவே பம்பாயில் மேற்படி கம்பெனி ஏற்பட்டிருக்கிறது. சிறு தொழிலாளிகளும், பெரிய தொழிற்சாலைகள், கப்பல் கட்டுமிடங்கள், ரெயில்வேக்கள் ஆகிய இவைகளில் வேலைசெய்யும்தொழிலாளிகளும், குடும்பங்களில் வேலை செய்யும் வேலையாட்களும், இன்னம் மற்ற வேலையாட்களும் இந்த இன்ஷுரென்ஸ் கம்பெனியில் இன்ஷுர் செய்து நன்மையடையலாம். இதில் இன்ஷுயூர் செய்பவர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய ப்ரீமியத்தை ஒரே தடவையாகவாவது, ஆறு அல்லது மூன்று மாஸத்துக்கு ஒரு தடவையாகவாவது செலுத்த வேண்டுமென்பதில்லை. ப்ரீமியத்தை மாஸம் மாஸம் ஒரு பாகமாகக் கொடுத்து வரலாம். இந்த ஏற்பாடு தொழிலாளிகளுக்கு ரொம்ப அனுகூலமாக இருக்கும். இந்தக் கம்பெனியின் மூலதனம் 25 லக்ஷமென்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. பங்கு ஒன்று 50 ரூபாய் வீதம் 5000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 25,000 பங்குகள் தான் இப்போது விற்கப்படுகின்றன. இந்த கம்பெனியின் டிரெக்டர் போர்டுக்கு பம்பாயில் ப்ரபல ப்ரமுகரான ஆனரபில் ஸர் பிரோஷாமேட்டா சேர்மனாயிருக்கிறார். இந்தியாவின் நானா பாகங்களில் உள்ள பல ப்ரமுகர்களடங்கிய ஒரு ஆலோசனை ஸபையும் இதற்கு இருக்கிறது. இது நன்றாய் செழித்தோங்கி நமது தேசத்து தொழிலாளிகளுக்கு ரொம்ப உதவியாயிருந்து அவர்களை க்ஷேமப்படுத்துமென்று நம்புகிறோம்.

A POSTAL NOTICE.

ஒரு தபாலாபீஸ் நோட்டீஸ்.

வேண்டிய அளவு ஸ்டாம்பு ஒட்டாத கடிதங்களை அனுப்புவோர் அவைகளுக்கு கவர் இருந்தாலும் இராவிட்டாலும் அக்கடிதங்களை செவ்வையாய் ஒட்டி அனுப்பவேண்டியது. அப்படி செவ்வையாக ஒட்டப்படாத கடிதங்கள் கிழித்துவிடப் படும் என்று ஒரு தபாலாபீஸ் நோட்டீஸ் வெளியிடப் பட்டிருக்கிறது.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

நிலஸெஸ்.

அக்டோபர்மீ 1-தேதி.—

பாபட்லா தாலுக்கா அஸோஸியேஷன் ஆதீனத்தில் ஜனங்கள் ஒருபொது மீட்டிங்கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

4-தேதி:—

தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள ரயத்துகளில் அநேகர் ஜில்லாகலெக்டரின் அக்ராஸனத்தின்கீழ் ஒருமீட்டிங்கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக் கூடாதென்று தீர்மானித்தார்கள்.

5-தேதி:—

பல்லாரியில் ஒரு பொதுஜன மீட்டிங்கில் நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

கோபிசெட்டி பாளையத்தில் விவஸாயிகள் ஒருமீட்டிங்கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா ஸங்கத்தார் இன்று கும்பகோணத்தில்கூடி நில ஸெஸ் உயர்த்துவதை ஆக்ஷேபித்தார்கள்.

6-தேதி.

மாயவரமும் அதைச்சுற்றிலுமுள்ள மிராசுதார்கள் மாயவரத்தில் கூடி லாண்ட்ஸெஸ்ஸை உயர்த்துவதை ஆக்ஷேபித்துத் தீர்மானம் செய்தார்கள்.

7-தேதி.

காவேரிப்பாக்கத்தில் ஜனங்கள் ஒருபொது மீட்டிங்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்துவதை ஆக்ஷேபித்துத் தீர்மானங்கள் செய்தார்கள்.

8-தேதி.

பல்லாரியில் இன்று கூடின ஒரு பொதுஜன மீட்டிங்கில் நிலஸெஸ்ஸை உயர்த்துவது கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

9-தேதி.

ராணிப்பேட்டையில் ஸுமார் 500 விவஸாயிகள் ஒரு மீட்டிங்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்தக் கூடாதென்று தீர்மானித்தார்கள்.

10-தேதி.

ராமனுதபுரத்தில் நில ஸெஸ்ஸைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஸப் டிவிஷனல் ஆபீஸர் மிஸ்டர் ஸ்ட்ராதியின் அக்ராஸனத்தின்கீழ் ஒரு மீட்டிங் நடந்தது. ராமனுதபுரம் ஸப் டிவிஷனிலுள்ள 27-க்ராமங்களிலிருந்து ஸுமார் 400 ஜனங்கள் வந்திருந்தார்கள். திருச்சினுப் பள்ளிக்கும் ராமனுதபுரத்துக்கும், விருதுபட்டிக்கும் ராமனுதபுரத்துக்கும் ரயில் பாதைகள் போடும்வரையில் நிலஸெஸ உயர்த்தும் விஷயத்தில் ராமனுதபுரம் ஜில்லாவை சேர்த்துக்கொள்ளக்கூடாதென்றுமீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்டது.

சீர்காழி தாலுக்கா மிராசுதார்கள் சீர்காழியில் ஒரு மீட்டிங்கூடி லாண்ட் ஸெஸ்ஸை உயர்த்துவதை ஆக்ஷேபித்து தீர்மானங்கள் செய்தார்கள்.

11-தேதி.

மதுரை தாலுக்கா போர்டார் இன்றையதினம்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்துவதைப் பற்றி ஆலோசித்தார்கள். நான்கு மெம்பர்கள் ஸெஸ்ஸை உயர்த்தலாம் என்றும் 10 மெம்பர்கள் கூடாதென்றும் அபிப்ராயப்பட்டார்கள்.

நாமக்கல் தாலுக்கா வெங்கரை க்ராமத்திலுள்ள ரயத்துகள் ஒரு மீட்டிங்கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

12-தேதி.

திருத்தருப்பூண்டி தாலுகாவிலுள்ள நிலஸ்வான்கள் ஆலத்தம்பாடியில் ஒரு மீட்டிங்கூடி

நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

13-தேதி

விஜயநகரம் தாலுக்காவிலுள்ள நிலஸ்வான்ன்கள் இன்று ஒருமீட்டிங்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

14-தேதி.

இன்றையதினம் குண்டூர் ஜில்லாவிலுள்ள கொல்லூரில் ஜனங்கள் ஒரு பொதுமீட்டிங்கில் நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

15-தேதி.

நெல்லூர்ஜில்லா உதயகிரி, ஆத்மகூர் தாலுக்காக்களிலுள்ள நிலஸ்வான்கள் ஆத்மகூரில் ஒரு மீட்டிங்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தாகள்.

25-தேதி.

சத்ரபுரம் தாலுக்காவில் சிலக்ராமத்து ரயத்துகள் தெங்கனபள்ளியில் ஒரு மீட்டிங்கூடி நில ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள்.

26-தேதி.

மஸூலிப்பட்டணத்தில் க்ருஷ்ண டிஸ்ட்ரிக்ட் அஸோஸியேஷனின் ஆதரவில் நிலஸ்வான்கள் ஒரு மீட்டிங்கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று தீர்மானித்தார்கள். மீட்டிங்கில் சேர்மனாகஇருந்த ஆனரபில் மிஸ்டர் நாஸிம்ம ராஜூவும் ஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று அபிப்ராயப்பட்டார்.

அக்டோபர்மீ 1-தேதி.

ஸ்த்ரீகளுக்கு வைத்யஉதவி.—ஸ்த்ரீகளுக்கு வைத்ய உதவிக்காக இந்தியா கவர்ன்மெண்டார் வருஷத்துக்கு $1\frac{1}{2}$லக்ஷப்ரூபாய் வீதம் க்ராண்ட்கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

அல்பானியா.—அல்பானியாவின் தற்கால கவர்ன்மெண்டுக்கும் எஸ்ஸட் பாஷாவுக்கும் சில மனஸ்தாபங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. எஸ்ஸட் பாஷா மந்த்ராலோசனை ஸபையை சீர்த்திருத்த வேண்டுமென்றும், கவர்ன்மெண்டை டுர்ராஸோவுக்கு மாற்றவேண்டுமென்றும் சொல்லுகிறார்.

2-தேதி.

பாங்கி முறிவு.—முல்டானிலுள்ள ஹிந்துஸ்தான் பாங்கி முறிந்துபோய்விட்டது.

ஒரு புதிய பாங்கி.—மைஸூர் ஸமஸ்தானத்து உதவிபெற்று பெங்களூரில் ஒருபாங்கி இன்று திவான்பஹதூர் புட்டண்ண செட்டியாரால் திறந்து வைக்கப்பட்டது. செட்டியாரவர்கள் பாங்கியினால் ஜனங்களுக்குண்டாகும் ப்ரயோஜனங்களைப் பற்றிப்பேசினார்.

3-தேதி.

பாங்கிகள் மூடப்பட்டன.—பம்பாயிலுள்ள இந்தியா க்ரெடிட் பாங்கியும், கராச்சியிலுள்ள க்ரெடிட் பாங்கியும் இன்று மூடப்பட்டன.

மைஸூர் தஸ்ஸரா பொருள்காட்சி— இன்றையதினம் மைஸூரில் 7-வது தஸ்ஸரா விவஸாய கைத்தொழில் பொருட்காட்சி மைஸூர் திவான் மிஸ்டர் விச்வேச்வரய்யாவால் திறந்து வைக்கப்பட்டது.

இந்திய பத்ரிகைகள் ஸங்கம்.—இன்றையதினம் கல்கத்தாவில் இந்திய பத்ரிகைகளின் ப்ரதிநிதிகள் ஒரு மீட்டிங்கூடி இந்திய பத்ரிகை ஸங்கம் ஏற்படுத்துவதற்காக ஒரு கமிட்டி ஸ்தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

6-தேதி.

மா. பாயின்கரே.—ப்ரெஞ்ச ப்ரெஸிடெண்ட் மா. பாயின்கரே ஸ்பெயின் தேசத்து அரசரை மாட்ரிட்டில் பார்த்து வருவதற்குப் புறப்பட்டிருக்கிறார்.

சீனக் குடியரசு —இதுவரையில் யுவான்-ஷி-கே சீனக்குடியரசின் ப்ரொவிஷனல் ப்ரெஸிடெண்டாக இருந்தார். இன்று ப்ரெஸிடெண்ட் ஸ்தானத்துக்கு எலெக்ஷன் நடந்தது.

பேர் அபேக்ஷகர்களா யிருந்தார்கள். யுவான்-ஷி-கே ப்ரெஸிடெண்டாகவும், லி யுவான் ஹெங் வைஸ் ப்ரெஸிடெண்டாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கோவாபரேடிவ் கான்பரென்ஸ்.—இன்றைய தினம் மைஸூர் ப்ரொவின்ஷியல் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் யுவராஜாவால் மைஸூரில் திறந்து வைக்கப்பட்டது. திவான் பகதூர் புட்டண்ணசெட்டி கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். 500 டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள்.

7-தேதி.

லங்கையில் வெள்ளம்.—லங்கையில் சென்ற 4-தேதி முதல் 6-தேதி வரையில் அதிகமாக மழை பெய்ததால் வெள்ளம் வந்ததென்று சொல்லப்படுகிறது. 48மணி நேரத்தில் 30 அங்குலம் மழை பெய்திருக்கிறது. ஒரு இடத்தில் மாத்ரம் 36-மணி நேரத்தில் 25-அங்குலம் மழை பெய்ததாம். அநேக க்ராமங்களில் ரொம்ப சேதமாம். ரத்னபுரம் என்னும் பட்டணம் அநேகமாய் அழிந்து போய்விட்டது.

9-தேதி.

நபா ஸமஸ்தானம்.—இன்றையதினம் நபா ஸமஸ்தானத்து மகாராஜா அவர்கள் ஒரு தர்பார்நடத்தினர். அந்த ஸமயத்தில் மகாராஜா அவர்கள் அந்த ஸமஸ்தானத்தில் இனி கீழ்தரக் கல்வி இலவசமாகக் கொடுக்கப்படும் என்றும், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு ஆலோசனை கமிட்டி நியமிக்கப்படும்என்றும், ராஜதானிப் பட்டணத்தில் ஒருபெரிய ஆலோசனை கமிட்டி ஏற்படுத்தி அதற்கு ஒவ்வொரு ஜில்லா கமிட்டியிலிருந்தும் ஒரு ப்ரதிநிதி வரவேண்டும் என்றும், ராஜதானிப் பட்டணத்திலுள்ள மாடுகள் மேய்வதற்காக ஸமஸ்தானத்து நிலங்களில் ஒன்றுக்கு ஒருவரியும் இல்லாமல் செய்யப்படுமீ என்றும், இன்னும் சில ஸெளகர்யங்கள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

10-தேதி.

ஒரு டெபுடேஷன்.—காவேரி ரிஸர்வாயர் விஷயமாய் கவர்னரைப் பார்க்கப்போகும் தஞ்சாவூர் டெபுடேஷனோடு கூடப்போவதற்காக இன்று திருச்சி டிஸ்ட்ரிக்ட் காங்க்ரெஸ் கமிட்டியார் 10 கனவான்களைத் தெரிந்தெடுத்தார்கள்.

11-தேதி.

ஒரு கப்பல் விபத்து.—வால்டர்னோ என்ற ப்ரிட்டிஷ் புகைக்கப்பல் அமெரிக்காவிலுள்ள ஹாலிபாக்ஸ் என்ற பட்டணத்துக்கு ப்ரயாணம் செய்துகொண்டிருக்கையில் நடுவழியில் அதில் நெருப்புப் பற்றிக்கொண்டது. உடனே நாலு திக்குகளிலும் சென்றுகொண்டிருக்கக் கூடிய கப்பல்களுக்குக் கம்பியில்லாத் தந்தி ஸமாச்சாரம் அனுப்பப்பட்டது. 78-மைலுக் கப்பால் போய்க்கொண்டிருந்த கார்மேனியா என்ற கப்பல் இந்த ஸமாசாரத்தைக் கேட்டவுடன், அதி விரைவாகப் ப்ரயாணம்செய்து வால்டர்னோ இருக்குமிடம் வந்துசேர்ந்தது. ஆயினும் கடல் மிகக் கொந்தளிப்பா யிருந்ததால், கார்மேனியாவிலிருந்து வால்டர்னோவுக்குப் படகுகளை அனுப்ப முடியவில்லை. அலை கொஞ்சம் அடங்கினதும் இருள்வந்து மூடிக்கொண்டது. வேறு திக்குகளிலிருந்தும் உதவி செய்ய பல ஜாதிகளுக்கும் ஸொந்தமான வேறு கப்பல்களும் வந்து சேர்ந்தன. இரவு 9 மணிக்கு எஞ்சின் வெடித்துப் போய்விட்டது. இருட்டிப் போய்விட்டதால் மறுநாள் காலை 9 மணிவரையில் ஒன்றும் உதவி செய்ய முடியவில்லை. அதிலிருந்த 756 பிரயாணிகளில் 236 பேர்களுடைய கதிதெரியவில்லை. மற்றவர்கள் காப்பாற்றப் பட்டார்கள். வால்டர்னோ தீக் கிரையாகி நாசமாய்ப் போய்விட்டது.

12-தேதி.

காவேரி அணை.—மைஸூர் கவர்ன்மெண்டார் காவேரியில் ஒரு தேக்கங் கட்டுவதைப் பற்றி ஆலோசிக்கும் பொருட்டு இன்று தஞ்சாவூர்ஜில்லா ஸங்கத்தார் கும்பகோணத்தில் ஒரு மீட்டிங்கூடி மைஸூர்காவேரி ஸ்கீம் ஸம்பந்தமான விஷயங்களை கவர்னர் லார்ட் பெண்ட் லண்டினிடம் நேரில் சென்று தெரிவிப்பதற்காக டெபுடேஷன் அனுப்புவதாக தீர்மானஞ் செய்தார்கள். திருச்சினப்பள்ளி பொது ஜனங்களால் நியமிக்கப்பட்ட மெம்பர்களையும் சேர்த்துக்கொண்டு, மேற்கண்ட விஷயத்தை எழுத்து மூலமாக எழுதிக்கொண்டு போய் கவர்னருக்குக் கொடுப்பார்கள்.

13-தேதி.

பம்பாய்ஹைகோர்ட்.—பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராகிய ஸர் என். ஜி. சந்தவர்க்கர் வேலையிலிருந்து விலகி விட்டதினால் அவருடைய ஸ்தானத்தில் ஆனரெபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷா நியமனம் பெற்றிருந்தார். அவருடைய நியமனத்தை சக்ரவர்த்தி அங்கீகரித்து விட்டார்.

ஒரு வ்யாபாரி நஷ்டமடைந்தது.—கராச்சியில் ப்ரபல பீஸ்துணி வ்யாபாரிகளாகிய லேக்ராஜ் ஹாஸ் மாட்ராய கம்பெனி பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டது.

திபேத்திய கான்பரேன்ஸ்.—திபேத்து, இங்க்லண்ட், சைனா ஆகிய மூன்று தேசங்களுக்கும் உள்ள தகரார்களைத் தீர்ப்பதற்காகக் ஒரு கான்பரென்ஸ் இன்று ஸிம்லாவில் கூடிற்று.

15-தேதி.

ராஜ குடும்பத்தில் கல்யாணம்.—கனாட் ட்யூக்கின் புத்ரராகிய ப்ரின்ஸ் ஆர்தருக்கும், டச்சஸ் அப்பைக்கும் இன்று விவாகம் லண்டனில் நடந்தேறிற்று. காண்டர்பரியிலுள்ள ஆர்ச்பிஷப் கல்யாணத்தை நடத்திவைத்தார். அநேக ராஜ வம்சத்தார்கள் வந்திருந்தார்கள்.

பாங்கிமுறிவு.—அம்ரிட்ஸாரிலுள்ள டோவாபா பாங்கி பணம் பட்வாடா செய்வதை நிறுத்திவிட்டது.

பால்கன் நிலைமை.—க்ஸாந்தியென்ற இடத்தில் துருக்கிய ஸைன்யங்களுக்கும் க்ரீஸ் ஸைன்யங்களுக்கும் சண்டை நடந்ததாகவும் துருக்கியர்கள் துரத்தியடிக்கப் பட்டதாகவும் ஸமாசாரம் எட்டுகிறது.

பவானி நதிக்குப் பாலம்.—சென்னை நிர்வாக கௌன்ஸில் மெம்பரான ஆனரபில் ஸர் ஹாரோல்ட் ஸ்டூவர்ட் இன்றையதினம் மேட்டுப்பாளையத்தில் பவானி நதிக்குக் கட்டப்பட்டிருக்கும் பாலத்தைத் திறந்து வைத்தார். அப்பொழுது அவர் செய்த ப்ரஸங்கத்தில், "கவர்ன்மெண்டார் லோகல் போர்டுகளுக்கு, ரோடுகளைப்பற்றிய செலவுகளுக்கு 8-லக்ஷம் ரூபாயும், பாலங்களுக்கு 3-லக்ஷமும், ஸுகாதார வேலைகளுக்கு $6\frac{1}{2}$ லக்ஷமும், கிணறுகளுக்காக 5-லக்ஷமும் வைத்யசாலைகளுக்காக 6. 6 லக்ஷமும் கல்விக்காக 11-லக்ஷமும் மற்ற செலவுகளுக்காக $14\frac{1}{2}$-லக்ஷமும் ஆக மொத்தம் 55 லக்ஷம் ரூபாய் கொடுத்து உதவியிருக்கிறார்கள். மாகாண ரெவின்யூக்களிலிருந்து லோகல் போர்டுகளுக்கு அதிக பணம் கொடுத்து உதவவில்லையென்று சொல்வதற்கில்லை; மாகாண ரெவின்யூக்களும் அதிமாயில்லை. வேறு கார்யங்களுக்கும் பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஜில்லாக்களில் ரோடுகள் சீர்திருத்தல், கல்வி, ஸுகாதாரம், முதலியவைகள் அதிக அபிவ்ருத்தி ஏற்பட வேண்டுமானால் அதிக பணம் கிடைக்கவழி தேடவேண்டியது அவச்யம். டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு ஸெஸ்ஸை உயர்த்த அதிகாரம் கொடுக்கலாமா கொடுக்கக்கூடாதா என்பதைப்பற்றி நான் பேசவரவில்லை. ப்ரொவின்ஷ்யல் ரெவின்யூக்களிலிருந்து கவர்ன்மெண்டார் இன்னம் அதிக பண உதவி செய்வதற்கு முடியும் என்று

தோன்றவில்லை. இன்னம் சில வருஷங்களுக்கு இந்த வருஷம் கொடுத்த பணத்தைவிடக் குறைவாகவே கொடுக்கும்படி நேரிடலாம்'' என்று சொன்னார்.

16-தேதி.

பால்கன் நிலைமை.—துருக்கிக்கும் க்ரீஸுக்கும் ஸமாதானம் ஏற்படுத்துவதற்கான பேச்சுகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

ஆஸ்பானியர்கள் மாண்டிநிக்ரர்களோடு இரண்டு நாள் கடும்போர் செய்து கடைசியில் தோல்வியடைந்தார்கள். எஸ்ஸட்பாஷா டுர்ராஸோவில் தனி கவர்ன்மெண்ட் ஒன்று ஸ்தாபித்து விட்டார்.

18-தேதி.

கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—இன்று ஸிம்லாவில் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் ஆரம்பமாயிற்று. ஆனரெபில் ஸர் எட்வர்ட் மாக்லாகன் அக்ராஸனுதிபதியாயிருந்தார்.

க்ரூப் கான்பரேன்ஸ்.—மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி கான்பரென்ஸ் இன்று மதுரையில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் பி. கேசவபிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்தார்.

தஞ்சாவூர் ராஜா சத்ரம்.—தஞ்சாவூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்தில் சத்ரம் இலாகா ஐவேஜியைக்கொண்டு டிஸ்ட்ரிக்ட் போர்டார் கட்டிய ராஜா சத்ரம் என்று பெயர் கொண்ட சத்ரத்தை ஆனரபில் மிஸ்டர் பி.எஸ் சிவஸ்வாமிஅய்யர் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

பாண்டியன் தியஸாபிகல் கான்பரேன்ஸ்.—பாண்டிய நாட்டு தியஸாபிகல் கான்பரென்ஸ் இன்று மதுரையில் ஆரப்பமாயிற்று. மிஸ்ஸஸ் அனி பெஸண்ட் அக்ராஸனம் வகித்தார்.

பாபநாசம் தாலுக்கா கான்பரேன்ஸ்.—இந்தக் கான்பரென்ஸ் இன்று பாபநாசத்தில் கூடிற்று. மிஸ்டர் டி.ரங்காசார்யார் அக்ராஸம் வகித்தார். அக்ராஸனுதிபதி, சட்டஸபை மூலமாய் நிலவரியை உயர்த்தும்படி சட்டமேற்பட்டாலொழிய அடிக்கடி நிலவரியை உயர்த்தக் கூடாதென்று சொன்னார். நிலஸெஸ்ஸெ உயர்த்தும் ப்ரேரணையைக் கண்டித்துப்பேசி ரெயில்வே ஸெஸ் வஸூலினுல் அதிக பணம் சேர்ந்து கிடக்கையில் ரெயில்வே ஸெஸ்ஸை எடுத்து விடவேண்டியது ந்யாயமாயிருக்க அதையும் வைத்துக்கொண்டு நில ஸெஸ்ஸையும் உயர்த்துவது தஞ்சாவூர் ஜில்லாவுக்கு சற்றும் அவச்யமில்லையென்று சொன்னார்.

20-தேதி.

ஒரு விருந்து.—ஸர்தார் காந்தராஜ அரசும் மற்ற அரச வகுப்பார்களும் மைஸூர் யுவராஜாவுக்கு மைஸூரில் ஒரு விருந்து அளித்தார்கள்.

21-தேதி.

சென்னைப் பொருளாதார ஸங்கம்.—லண்டன் ஸ்கூல் அப் எகனுமிக்ஸ் என்னும் பொருளாதார வித்யாசாலையானது சென்னைப் பொருளாதார ஸங்கத்துக்கு 4000 பொருளாதார சாஸ்த்ர புஸ்தகங்களை இனமாகக் கொடுத்திருக்கிறது.

22-தேதி.

தென்னுப்பிரிக்கா.—நேடால் நிலக்கரிச்சுரங்கங்களில் வேலைசெய்யும் இந்தியர்களில் 2000 பேர் வேலை நிறுத்தி விட்டார்கள்.

23-தேதி.

இந்திய ஸேனுதிபதி.—ஸர் ஓமூர்க்ரீக்குப் பிறகு ஸர் பூசாம்ப் டப் இந்தியாவின் கமாண்டர் இன்சீப் ஆக இருப்பார்.

24-தேதி

சனடாவில் இந்தியர்கள்.—இந்தியாவிலிருந்து கனடாவுக்குப்போன ஹிந்துக்களில் 24 பேரை கனடா கவர்ன்மெண்டார் டிபோர்ட் செய்து விட்டார்கள்.

27-தேதி.

ஒரு ப்ரஸங்கம்.—மிஸ்டர் டி.பி. வெப்லண்

டனில் செய்த ஒரு ப்ரஸங்கத்தில் இந்தியாவில் தங்கநாணயம் அச்சடிக்கும் சாலேயும் தங்கநாணயமும் வேண்டுமென்று பேசினுர். அப்போது சென்னேயைச் சேர்ந்த மிஸ்டர் ஸூந்தரமய்யர் பேசினபோது இந்தியர்களுக்கு தங்கநாணயம் தேவையில்லே யென்று சொன்னுர்.

29-தேதி.

சுரங்கவேலேப் பள்ளிக்கூடம்.—வங்காள கவர்ன்மெண்டாரும், பேஹார் கவர்ன்மெண்டாரும் சுரங்கவேலே கற்பிக்கும் ஸ்கூல் ஸ்தாபிப்பது விஷயமாய் ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிருர்கள்.

மிஸ்ஸஸ் பேஸண்டின் அப்பீல்.—மிஸ்ஸஸ் பெஸண்ட் வசமிருந்த மிஸ்டர் நாராயணய்யாவின் குமாரர்களே அவர் நாராயணய்யாவினிடம் ஒப்புவித்து விடவேண்டு மென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வல் செய்த தீர்ப்புக்கு விரோதமாக மிஸ்ஸஸ் பெஸண்ட் செய்திருந்த அப்பீலில் மிஸ்ஸஸ் பெஸண்டுக்கு விரோதமாக தீர்ப்பு சொல்லப்பட்டது. இந்தக் கேஸ் சட்டப்பகுதியில் விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது.

30-தேதி

நீர்ரோகம்.—இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் நீர் ரோக வ்யாதியைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டு மென்று தீர்மானித்திருக்கிருர்கள். இந்த ஆராய்ச்சி முதலில் பஞ்சாப்பில் செய்யப்படும்.

31-தேதி

பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.—பப்ளிஸ் ஸர்விஸ் கமிஷன் ப்ரெஸிடெண்டும் மற்ற மெம்பர்களில் சிலரும் இங்க்லண்டிலிருந்து இன்று பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்கள்.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1913ஸு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஸு நவம்பர்மீ 1உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	37·21	39·51
வால்டேர்	33·24	31·25
காக்கினடா	36·45	32·32
மசூலிப்பட்டணம்	31·50	33·60
நெல்லூர்	21·89	21·67
மதராஸ்	37·50	29·60
கூடலூர்	42·67	29·56
நாகபட்டணம்	32·37	24·79
பாம்பன்	17·29	15·41
கொழும்பு	41·08	57·41
திருவநந்தபுரம்	51·62	52·25
கொச்சி	92·51	101·88
கள்ளிக்கோட்டை	108·54	110·27
மங்களூர்	109·35	123·80
மெர்க்காரா	109·03	122·42
ஐதராபாத்	18·91	29·78
பல்லாரி	15·02	17·65
கர்நூல்	17 55	25·10
கடப்பை	20 66	26·96
ஹாஸ்ஸான்	25·63	32·13
பெங்களூர்	21·13	31·46
கொடைக்கானல்	34·35	44·17
உதகமண்டலம்	38·19	46.63
கோயம்புத்தூர்	10·71	16.48
வேலூர்	18·89	34.50
சேலம்	28·22	34.56
திருச்சினப்பள்ளி	22·81	23·76
புதுக்கோட்டை	25·47	25·07
மதுரை	12·34	26·73
திருநெல்வேலி	18·83	14·02

Calendar—பஞ்சாங்கம்.

அம்ருதாதி	லக்ன பாக்கி	அகசு	துலு	இங்	தமி	வா	47-ப்ரமாதீசஹு கார்த்திகைமூ- தக்ஷிணாயனம்-சரத்ருது } கொல்லம்-1089 பஸலி-1323 { இங்கி - 1913ஹு நவம்பர்-டிசம்பர்மீ } ஹிஜரி-1331 ஜமால்காத்-ஜமால்ஹேஜ்.
யோகம்.	நா வி	நா வி	உ	உ	உ		[பதி புண்யகால, ஆசூன்ய சயனவிருத, சூன்யார்க்கம் கரிநாள்
அசி	5 32	2847	15	15	1	ச	த்வி 59-23, ரோ 53-35, பரி 8-7, தை 29-3, ரா 4-15, விருச்சிகரவி 24-46, விருச்சிகத்விதீயாதி, விஷ்ணு
சி	21	46	16	16	2	ஞா	த்ரி 59-17, மிரு 55-4, சிவ 5-50, வணி 29-28, தி 8-1
சிஅ	9	45	17	17	3	தி	சது 58-17, திரு 55-40, சித் 2-47, உப 56-13, பவ 28-54, தி 16-23, சங்கடசதுர்த்தி, கரிநாள்
சி	4 58	44	18	18	4	செ	பஞ் 56-23, புன 55-23, சுப 54-32, கவு 27-28, தி 25-39
சி	47	43	19	19	5	பு	ஷஷ் 53-40, பூச 54-18, சிப் 49-24, கர 25-8, தி 15-7
சிஅ	36	42	20	20	6	வி	ஸப் 50-8, ஆயி 52-26, பிர 43-38, பத் 22-1, தி 25-25
மசி	25	41	21	21	7	வெ	அஷ் 45-48, மக 49-55, மா 37-15, பால 18-5, தி 21-12 மகாகாலபைரவாஷ்டமீ
சிஉ	14	40	22	22	8	ச	நவ 40-44, பூர 46-20, வை 30-12, தை 13-22, தி 8-42, சாபாயன 51-47, வைசிரா
அ	3	39	23	23	9	ஞா	தச 34-57, உத் 42-16, விஷ் 22-35, வணி 7-55, தி 3-11 [நாள்
சிபி	3° 52	38	24	24	10	தி	ஏகா 28-36, ஹஸ் 37-37, பிரீ 14-29, பவ 1-50, கவு 55-14, தி 1-41, ரா 27-19, ஏகாதசீதி, ஸர்வஏகா, கரி
சி	41	37	25	25	11	செ	த்வா 21-51, சித் 32-37, ஆயு 7-0, உப 50-25, கர 48-26, ரா 17-9, திதித்வயம், பிரதோஷ
சி	30	37	26	26	12	பு	த்ர 15-1, சுவா 27-37, சோ 48-51, பத் 41-40, ரா 11-52, சதுர்த்தசீதி, மாஸசிவரா, இராமா
சி	19	36	27	27	13	வி	சசி 8-22, விசா 22-51, அதி 40-44, சது 35-15, ரா 3-32, ஸர்வ அமா, திவாமா [டபிதிரு, அலப்பம்
சிம	8	35	28	28	14	வெ	● 2-19, உப 54-5, அனு 18-48, சுக 33-9, கிம் 29-38, ரா 3-23, மார்க்கசிரசுத்த, இஷ்டி, அவம, பிண்
சி	2 57	31	29	29	15	ச	த்வி 53-27, கேட் 15-46, திரு 23-31, பால 25-8, ரா 6-29, சந்திரதர்சனம்
அசி	46	33	1	30	16	ஞா	த்ரி 51-22, மூல 14-13, சூல 21-9, தை 22-12, தி 10-16, ரா 9-31
உம	35	32	2	1	17	தி	சது 51-19, பூரா 14-23, கண் 17-11, வணி 21-3, ரா 6-19, சதுர்த்திவிரு, கரிநாள்
பிசி	24	32	3	2	18	செ	பஞ் 53-5, உரா 16-28, விரு 14-45, பவ 21-55, தி 27-1, சிரவண உப, நாகபஞ்சமீ, இராமா [திவாமா
சிபி	13	31	4	3	19	பு	ஷஷ் 56-53, திருவோ 20-28, துரு 13-50, கவு 24-46, ரா 2-48 ஷஷ்டியுப, சம்பாஷஷ்டி,
சிம	2	30	5	4	20	வி	ஸப் 60-0, [illegible] 26-13, விபா 14-20, கர 29-25, ரா 17-42, த்ரிநிஸ்பிருக்
சி	1 51	30	6	5	21	வெ	ஸப் 2-16, சத 33-13, ஹர் 15-55, பத் 35-24, ரா 22-43
மசி	40	29	7	6	22	ச	அஷ் 8-41, பூ 40-58, வஜ் 18-10, பால 42-6
அ	28	29	8	7	23	ஞா	நவ 15-30, உட் 48-44, வித் 20-37, தை 48-49 தி 8-6, தசமீதி, கல்பாதி
சி	17	28	9	8	24	தி	தச 21-59, ரே 55-53, விப 22-48, வணி 54-53, தி 22-26, அதிதி வியசிரா
சி	6	28	10	9	25	செ	ஏகா 27-32, அசு, 60-0, வரீ 24-17, பவ 59-50, ரா 22-36, ஏகாதசீதி, ஸர்வ கைசிகஏகாதசீ
மசி	0 55	27	11	10	26	பு	த்வா 31-47, அசு 1-57, பரி 24-48, பால 31-47, தி 28-0, பரணி தீபம்
சிம	49	27	12	11	27	வி	த்ர 34-28, பர 6-37, சிவ 24-9, கவு 3-18, ரா 9-57, அருணாசலதீபம், பிரதோஷகிருத்திகை
சிம	33	27	13	12	28	வெ	சசி 35-35, கிரு 9-45, சித் 22-17, கர 5-12, ரா 22-36, பிரத்யவரோகணம்
அசி	22	26	14	13	29	ச	○ 35-16, ரோ 11-28, சாத் 19-19, பத் 5-35, தி 25-40, சிவாலய விஷ்ணுவாலயதீபம், லவணதானம், தத்தாத்ரேயஜயந்தி
சி	0 11	2826	15	14	30	ஞா	ப்ர 33-43, மிரு 11-53, சுப 15-20, பால 4-37, ரா 4-22, விருச்சிக பிரதமாதி, மார்க்சசிரபகுள, இஷ்டி

		ச	
ரா	18-விரு-சு 30-மிது-செ.		செ
			கே
குரு	ர பு	சு	

Books at Concession Rates to Subscribers of "The Wealth of India"

The Life and Teachings of Buddha.—By the Anagarika Dharmapala. Price As. 12. To Subscribers, As. 8.

Essentials of Hinduism.—A Symposium by representative Hindus. Price As. 8. To Subscribers, As. 6.

King George's Speeches on Indian Affairs.—Part I. A complete collection of all the speeches made by His Majesty during his tour in India as Prince of Wales.

Part II. Full text of all the speeches delivered by His Majesty during the Coronation Durbar Tour. Price Re. 1. To Subscribers, As. 12.

My Indian Reminiscences.—By Dr. Paul Deussen, Professor of the University of Kiel, translated by A. King. Price Re. 1-4. To Subscribers, Re. 1.

The Improvement of Indian Agriculture: Some Lessons from America. By Cathelyne Singh. Price Re. 1. To Subscribers, As. 12.

Aspects of the Vedanta.—By various writers. The book also contains the opinions of Max Muller, Dr. Goldstucker, Schopenhauer, Victor Cousin, and Dr. P. Deussen on the Vedanta. Second Edition, As. 12. To Subscribers, As. 8.

Dadabhai Naoroji's Speeches and Writings.—An up-to-date exhaustive and comprehensive collection of his speeches and writings. With a portrait. Price. Rs. 2. To Subscribers, Re. 1-8.

Glimpses of the Orient To-day.—By Saint Nihal Singh. In this book, Mr. Singh describes the transition that has taken place in Asia during the last few decades, traces the causes of the awakening and offers a prophecy as to its ultimate effect. Price Re. 1. To Subscribers, As. 12.

The Indians of South Africa.—Helots within the Empire ! How they are treated. By H. S. L. Polak. This book is the first extended and authoritative description of the Indian Colonists of South Africa, the treatment accorded to them by their European fellow-colonists, and their many grievances. Price Re. 1. To Subscribers, As. 12.

Essays on Indian Art, Industry and Education.—By E. B. Havell, late Principal of the School of Arts, Calcutta. The subjects dealt with are "The Taj and its Designers," "The Revival of Indian Handicraft," "Art and Education in India," "Art and University Reform," "Indian Administration and Swadeshi," "The Uses of Art." Price Re. 1-4. To Subscribers, Re. 1.

All about Delhi.—With 30 illustrations. Price Re. 1-8. To Subscribers, Re. 1-4.

Essays on Indian Economics.—By the late Mahadev Govind Ranade. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

The Depressed Classes.—A symposium by His Highness the Gaekwar of Baroda, Mrs. Annie Besant, The Hon'ble Mr. Gokhale, Sir Valentine Chirol, Rt. Rev. The Lord Bishop of Madras, The Hon'ble Sir Narayan Chandavarkar, The Hon'ble Mr.V. Krishnaswami Aiyar, The Anagarika Dharmapala and others. Price Re. 1. To Subscribers, As. 12.

Light on Life.—A Selection of Five Spiritual Discourses by Baba Premananda Bharati. Pric As. 8. To Subbscriers, As. 6.

The Indian National Congress.—An account of its origin and growth. Full text of all the Presidential Addresses. Re-print of all the Congress Resolutions. Extracts from all the Welcome Addresses. Notable Utterances on the Movement. Portraits of all the Congress Presidents. Cloth Bound. Over 1,100 pages. Crown 8vo. Rs. 3. To Subscribers, Rs. 2.

A Fragment on Education.—By J. Nelson Fraser, M.A., *(Oxon.)*, Principal, Secondary Training College, Bombay. Price Re. 1. To Subscribers, As. 12.

Morley's Indian Speeches.—An enlarged and up-to-date collection. Price Re. 1. To Subscribers, As. 12.

Gokhale's Speeches.—An exhaustive and comprehensive collection of his speeches, with a biographical sketch and a portrait. Over 1,000 pages. Crown 8vo. Price Rs. 3. To Subscribers, Rs. 2-8.

Swami Vivekananda.—An exhaustive and comprehensive collection of his speeches and writings. *Crown 8vo. 800 pages, with four portraits.* Third Edition, revised and enlarged. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

Sri Sankaracharya's Select Works.—The Text in Sanskrit, Devanagiri type, and an English Translation. By S. Venkataramanan, B.A. Containing more than 700 *verses* in all and including all his important works. Bound in Cloth. Price Re. 1-8. To Subscribers, Re. 1.

The Swadeshi Movement.—A Symposium by Representative Indians and Anglo-Indians. Re. 1. To Subscribers, As. 12.

Sri Ramanujacharya.—His Life and Times. By S. Krishnaswami Aiyangar, M.A. His Philosophy. By T. Rajagopalachariar, M.A., B.L. Price As. 12. To Subscribers, As. 8.

Sri Madhwa and Madhwaism.—A Short Historic Sketch. By C. N. Krishnaswami Aiyar, M.A. Price As. 12. To Subscribers, As. 8.

The Vaishnavite Reformers of India.—Critical Sketches of their Lives and Writings. By T. Rajagopalachariar, M.A., B.L. Price Re. 1. To Subscribers, As. 12.

Shakespeare's Chart of Life: Being Studies of King Lear, Macbeth, Hamlet, and Othello. By Rev. William Miller, LL.D., C.I.E. Rs. 4. To Subscribers, Rs. 3.

Essays in National Idealism.—By Ananda K. Coomaraswamy, D. Sc. Popular Edition with 6 illustrations. Re. 1. To Subscribers, As. 12.

Industrial India.—By Glyn Barlow, M.A. Second Edition. Price. Re. 1. To Subscribers, As. 12.

Lift Irrigation.—By A. Chatterton. Second Edition. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

☞ *The subscription for the "Wealth of India" is Rs. 5. per annum post free. Subscription may commence from any month. Any one who wishes to buy books at the reduced rates must remit one year's subscription in advance. Those in arrears cannot have concession rates.*

G. A. NATESAN & CO., BOOKSELLERS, 4, SUNKU RAMA CHETTY STREET, MADRAS.

KHADER AND YOUSUFF BROS

Watch Dealers, P. L., MADRAS, E. C.

"ஸிர்தார்"



இது மேல் சாவியுள்ளதும், கனத்த கண்ணாடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும் வெகு நாளைக்கு ஓடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.

"உத்தியோகஸ்தர்"



இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணாடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய் சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.

தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

கோல்ட் மெடல் "யாங்கீ" ஸிர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினுல் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உடயோசமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ளரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.

MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
Street, Georgetown, Madras